# செம்மணி

நிலம் 2 துகள் 83 வள்ளுவர் ஆண்டு 2052, 19 - 25 மாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

05



சீனா இப்போது முன்னர் மாதிரியல்ல

08



கடலடியில் உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி

## கெரோயின் விற்கும் குடும்ப பெண்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் சமீப நாட்களாக கெரோயின் போதைப் பொருள் விற்பனையில் குடும்ப பெண்கள் ஈடுபட்டு வருகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 4 மாதங்களில் 7 குடும்பப் பெண்கள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து குறிப்பிட்டளவு தொகை கெரோயினும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

பூம்புகார் பகுதியை சேர்ந்த 35 வயதுடைய பெண் 50 கிராம் கெரோயினுடனும் யாழ். குருநகர் பகுதியில் ஒருவர் 5 கிராம் கெரோயினுடனும் நகரப் பகுதியில் ஒருவர் 5 கிராம் கெரோயினுடனும் பொம்மை வெளி பகுதியில் இருவர் 10 கிராம் கெரோயினுடனும் அரியாலை பகுதியில் ஒருவர் 5 கிராம் கெரோயினுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கெரோயினை விற்பனை செய்தவர்கள் என்கிறது காவல்துறை தரப்பு.

போதைப்பொருளுக்கு அடிமையாகிய ஆண்கள் கெரோயினை விற்பனை செய்து கைது செய்யப்படும் நிலை மாறி யாழ்ப்பாணத்தில் குடும்ப பெண்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

உள்ளாடைகளிற்குள் சூட்சமான முறையில் காவல்துறையினர் எளிதில் பரிசோதிக்கமுடியாத வண்ணம் மறைத்து வைத்து தரகர்கள் மூலம் இவர்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகிறனர் என்றும் கூறப்படுகின்றது.

குடும்பப் பெண்களே இப்படியான செயல்களில் ஈடுபட்டு வருகின்றமையால் அவர்களில் பிள்ளைகளின் எதிர்கால நிலை கேள்விகுறியாவதாகக் காவல்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து யாழிற்கு பக்கம் 02

கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான

## பரணகம அறிக்கையின்படி வழக்குத் தொடர வேண்டும்

*முன்னாள் நீதிபதி நவாஸ் ஆணைக்குழு கோட்டாவுக்கு பரிந்துரை*

கடத்தப்பட்டுக் காணாமற் போனோர் தொடர்பாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நியமித்த மக்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ள கண்டுபிடிப்புக்கள் குறித்து விசாரணை செய்து உடனடியாக வழக்குகளைத் தொடுப்பதற்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி தற்போதைய அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பக்கம் 02



## காவல்துறை நபர் அடித்தே கொலை

தங்காலையில் இலங்கைக் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் அடித்தே கொல்லப்பட்டார். தனிப்பட்ட காணித் தகறாறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றதாகக் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட காணிப் பிணக்கு காவலரின் கொலையில் சென்று முடிந்திருக்கிறது. சம்பத்தில் கும்பல் ஒன்று காவலரை பக்கம் 02



## களவெடுத்துக் கெரோயின் வாங்கிய கும்பல் மாட்டியது

குருக்களின் வீடுடைத்து நகைகளைத் திருடி விற்று அந்தப் பணத்தில் கெரோயின் வாங்கி போதையில் மிதந்த கும்பல் ஒன்றைத் தாம் கைது செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 28ம் திகதி மாலை 3 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரம் யாழ் பிறவுண் வீதியில் அமைந்துள்ள கோவில் குருக்கள் வீட்டில் திருடியவர்களே மாட்டினர் என்று காலவ்துறையினர் தெரிவித்தனர்.

குருக்கள் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் கோவிலுக்கு செல்வதை அவதானித்த முக்கிய சந்தேகநபர் வீட்டின் பின்பக்க கதவை உடைத்து திருடியுள்ளார். வீட்டின் சாமி அறைக்குள் இருந்த 24 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தாலி கொடி, சங்கிலி, கைச்சங்கிலி, காப்பு போன்றவையும் அடக்கம்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் இந்தத் திருட்டுத் தொடர்பில் விசாரித்து வந்த பக்கம் 02

## தொடங்கியது மின்வெட்டு

எரிபொருள் பற்றாக்குறை, நீர்த் தேக்கங்களில் போதிய நீர்வளமின்மை ஆகிய காரணங்களால் இலங்கையில் வெள்ளிக் கிழமை முதல் மின்சார வெட்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு இதற்கான அனுமதியை வழங்கியது. மின்சார வெட்டை நடைமுறைப்படுத்தாமல் தடுக்க முடியும் என்கிற ஆணைக் குழுவின் நம்பிக்கை பொய்த்துப்போனதை அடுத்து இனிவரும் நாட்களுக்கான மின்வெட்டு அட்டவணையை அது வெளியிட்டது.

பகல் நேரத்தில் பிற்பகல் 2.30 மணி முதல் 6.30 மணிவரையுமான நேரத்தில் ஒரு மணி நேர மின்வெட்டும் 6.30 முதல் 10.30 மணி வரையான நேரத்தில் 45 நிமிட மின்வெட்டும் நடைமுறையில் இருக்கும் என்று பக்கம் 02

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பூஜித, கேமசிறி விடுதலை

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்களிலும் சொகுசு விடுதிகளிலும் நடந்த குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் காவல்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கேமசிறி பெர்னான்டோ ஆகிய இது தொடர்பான வழக்குகளில் இருந்து குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு உயர் நீதிமன்ற ட்ரயல் அட் பார் அமர்வு வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கியது. இருவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் விசாரிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் எவையும் இல்லை என்று தெரிவித்த நீதிபதிகள், இருவரையும் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்பாகவே அது குறித்துப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த போதும் போதிய பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கத் தவறினர் என்று இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

[illegible] நாள் [illegible] மீதும் 3 உல்லாச சொகுசு பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# கண்துடைப்பு ஆணைக்குழுக்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் மாசி 27ஆம் நாள் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக கடுமையான அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அரசு போதிய நடவடிக்கை எடுக்காத நிலையில், அமர்வில் அது கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்பதே எதிர்பார்ப்பு.

இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையிலான மற்றொரு தீர்மானமும் இந்த அமர்வில் கொண்டுவரப்படலாம் என்றும் கருதப்படுகின்றது. இந்த நிலையில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவால் நிமிக்கப்பட்ட மற்றொரு ஆணைக்குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையை அரச தலைவரிடம் கையளித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஏற்கனவே அரச தலைவர்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் என்பவற்றை ஆராய்ந்து தனக்கு முழுமையா அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டு முன்னாள் நீதிபதி நவாஸ் தலைமையில் புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்தார் கோட்டாபய ராஜபக்ச.

அந்த ஆணைக்குழு தனது முதலாவது இடைக்கால அறிக்கையை கடந்த ஆடி **2021** அன்று வழங்கியிருந்தது. இப்போது இரண்டாவது அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது இடைக்கால அறிக்கையில், அரச தலைவராக மகிந்த ராஜபக்ச இருந்த காலத்தில் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை குறித்து உடனடியாக விசார்ணைகளை நடத்தி வழக்குகளைத் தொடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கொடுக்கவேண்டும் என்பதும் நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரை.

இலங்கையில் அரச தலைவர் ஆணைக்குழுக்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. எனினும் அந்த ஆணைக் குழுக்களின் அறிக்கைகளுக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. அவற்றின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டன என்று கூறுவதற்கு மிக மிகக் குறைவான உதாரணங்களே இருக்கின்றன.

காலத்தைக் கடத்துவதற்கும் வெளி உலகை ஏமாற்றுவதற்கும் மட்டுமே அரச தலைவர் ஆணைக்குழுக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர உண்மையில் அவற்றின் பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

அரச தலைவர் ஆணைக் குழுக்கள் மட்டுமல்ல இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு உள்ளிட்ட பல குழுக்களின் அறிக்கைகளும் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளன. பல குழுக்களின் அறிக்கைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவே இல்லை என்பதும் கவலை தரும் உண்மை.

இப்படி கடந்த காலங்களில் கண்துடைப்புக்காக உருவாக்கப்பட்டு காலமும் நேரம் வீண் விரயமாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் எல்லாவற்றையும் மீளாய்வு செய்து பரிந்துரைகளை வழங்கவே தற்போது புதியதொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைகளாவது செயற்படுத்தப்பட்டால் மகிழ்ச்சி.

அதைவிடுத்து மீண்டும் ஒரு கண்துடைப்புக்காக மட்டுமே இந்த ஆணைக்குழுவும் பயன்படுத்தப்படக்கூடாது.



## பரணகம...

மனித உரிமைகள் விவகாரங் கள் தொடர்பில் கடந்த காலங்களில் அரச தலைவர்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவற்றை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் செயற் படுத்தவேண்டியன குறித்து அறிக்கையிடுமாறு முன்னாள் நீதிபதி எ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் அரச தலைவர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையை வெள்ளிக்கிழமை அரச தலைவரைச் சந்தித்துக் கையளித்தது.

அந்த அறிக்கையிலேயே பர ணகம ஆணைக்குழுவின் கண்டறிவுகளை நடைமுறைப்படுத்தும் வகையிலான விசாரணைகளைத் தொடக்கும்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நவாஸ் ஆணைக்குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கை **2021** ஆடி **21** அன்று அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இறுதி அறிக்கை அடுத்த ஆனி மாதம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் போரை எதிர்கொண்டவர்கள் மற்றும் போர் தொடர்பான அனுபவங்களைக் கொண்டிருந்த **75** பேருடன் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் நவாஸ் ஆணைக்குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையை **107** பக்கங்களில் தயாரித்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள மற்றொரு முக்கிய விடயமாக, போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை தனிப்பட்ட ரீதியில் நினைவு கூருவதற்கு அனுமதியளிக்கவேண்டும் என்பதும் இடம்பெற்றுள்ளது என அரச தலைவர் செயலகம் தெரிவித்தது.

ஆணைக்குழுவின் முன் வாக்களித்தவர்களில் பலர் தமது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தார். இதனால் அத்தகையவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்த வாரம் இலங்கை தொடர்பான விடயம் ஆராயப்படவுள்ள நிலையில் இந்த இடைக்கால அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கெரோயின்...

கெரோயினைக் கடத்தி சூட்சபமான முறையில் விற்பனையில் ஈடுபட்டுவந்தார் என்கிற குற்றச்சாட்டில் பெண் ஒருவரை யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழிற்கு பேருந்து மூலம் யாருக்கும் சந்தேகம் ஏற்படாவண்ணம் கெரோயின் போதைப்பொருளை கடத்தி வந்து யாழில் உள்ளு}ர் தரகர்கள் மூலம் இவர் பல நாட்களாக விற்பனையில் ஈடுபட்டு வந்திருந்தார். யாருக்கும் தன்னில் சந்தேகம் ஏற்படா வண்ணம் நெருங்கிய நம்பிக்கையான தரகர்கள் மூலமே இவர் வியாபாரத்தைச் செய்து வந்தார் என்று காவல்துறையினர் கூறுகின்றனர்.

மூத்த காவல் அத்தியட்சகர் லியனகேவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புபிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலை1மையில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் ராஜரட்ணம் மற்றும் புவி, சுயந்தன், பிரவீன், சுரேஸ், சந்திரரட்ண, பெண் கொஸ்தாபல் வர்ண குணசூரிய ஆகியோர் அடங்கிய அணி குறித்த பெண்ணை நேற்றையதினம் அரி யாலை பகுதியில் சுற்றிவளைத்துக் கைது செய்தது.

கைது செய்யப்படும் வேளை பெண்ணிடம் **10** கிராம் தூய கெரோயின் போதைப் பொருள் இருந்தது என்று காவல்துறையினர் தெரிவித்தனர். இதன் பெறுமதி **5** தொடக்கம் **6** லட்சம் எனவும் கைது செய்யப்பட்ட பெண் **33** வயதுடைய அரியாலை பகுதியை சேர்ந்தவர் எனவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

## களவெடுத்துக்...

னர். பெறப்பட்ட தகவல்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் முதன்மைச் சந்தேகநபர் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வைத்து அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொண்ட விசாரனையில் திருடப்பட்ட நகைகளை குறித்த திருட்டுக்கு உடந்தையாக இருந்த மற்றொரு நபர் மூலமாக வங்கியில் பணிபுரியும் ஒருவரின் உதவியுடன் வேலணையில் உள்ள வங்கி ஒன்றில் அடகு வைக்கப்பட்ட விவரம் தெரியவந்துள்ளது. அடகுவைத்ததன் மூலம் பெறப்பட்ட பணத்தை க்கொண்டு கெரோயின் வாங்கியதாகவும் சந்தேகநபர்கள் வாக்குமூலமளித்துள்ளனனர்.

கெரோயினுக்கு அடிமையானவர்களுக்கு அதற்காகப் பெருமளவு பணம் தேவைப்படுவதால் இப்படியான திருட்டுக்களில் ஈடுபடுகின்றனர் என்று காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களால் திருடப்பட்ட ஒரு நெக்லஸ் மற்றும் காப்பு தனியார் அடகு நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. அதனை மீட்கும் முயற்சியினை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். திருடப்பட்டவற்றில் ஒருதொகுதி நகைகள் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

முதன்மைச் சந்தேகநபருக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த **28** வயது நபர் ஒருவரும் நகைகளை அடகு வைக்க உதவிய வேலணைப் பகுதியை சேர்ந்த **30** வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டனர்.

## தொடங்கியது...

அறிவிக்கப்பட்டது.

உடனடியாக வெள்ளிக்கிழமையே இந்த மின்வெட்டு நடைமுறைக்கும் வந்திருந்தது. முன்னதாக, சித்திரை மாதம் வரையில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை வராது என்று ஆணைக்குழுத் தலைவர் ஜானக ரத்னாயக்க தெரிவித்திருந்தார்.

எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பகுதிகளில் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்பதையும் ஆணைக்குழு வெள்ளிக்கிழமை அறிவித்தது.

## காவல்துறை...

தடிகள் கொல்லுகள் என்று கடுமையாகத் தாக்கியது.

இந்தத் தாக்குதல் காரணமாக **34** வயதான அந்தக் காவலர் கடும் காயமடைந்தார். பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிரிழந்த காவலரின் உறவினர்கள் [illegible] காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## உயிர்த்த...

விடுதிகள் மீதும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் **269** பேர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் **25** பேருக்கு எதிராக **23** ஆயிரத்து **270** குற்றச்சாட்டுக்கள் சட்ட மா அதிபரால் சுமத்தப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்துக்கான தலைமைச் செயலகம்!


நியூட்டன்

தமிழ்த் தேசியம், மரபு வழித் தாயகம், சுய நிர்ணய உரிமை ஆகிய விடயங்கள் உரிய வாறு கருத்துருவாக்கம் செய்யப்படாமல் காலத் துக்குக் காலம் எழுச்சிபெறுவோரும் களத்தில் குதிப்போருமாகக் கதைத்து யார் வேண்டுமானாலும் இது குறித்துக் கதைக்கலாம் என்றாகி ஒரு சில அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், ஊடகர்கள், ஆய்வாளர்கள், கருத்துருவாக்கிகள் என இது விட யத்தில் கருத்துரைத்து வர நாளுக்கு நாள் தமிழ்த் தேசியம் சிதறி வருகிறது.

இலங்கை சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் தமிழ்த் தேசியம் உரியவாறு கட்டமைக்கப்பட்டிருந்தால் இவ்வளவு தொகை யான கட்சிகளும் தலைவர்களும் உருவாகியிருக்க வாய்ப்பில்லை. தமிழ்த் தேசியத்துக்கு ஒரு தலை வர், ஒரு கட்சி போதுமானது. அதை வழிநடத்து வதற்கு ஒருபக்க ஆவணம் அல்லது யாப்பு போது மானது. தமிழ்த்தேசியம் பேசுகின்ற பலரிடம் அதற்கான உண்மையான உள்ளடக்கம் இல்லை என்பது கவலைக்குரியது. இந்த நிலையைச் சீர் செய்வதற்குத் தமிழ்த் தேசியத்துக்கான கட்டமைப் புடன் ஒரு தலைமைச் செயலகம் உருவாக்கப் படுவது அவசியம்.

**ஒற்றுமை**

தென்னிந்தியத் திரைப்பட நகைச்சுவை நடிகர் வடிவேலுவிடம் ஒரு படத்தில் நடிகர் அர்ஜுன் சொல்வார், "காதலிப்பதற்கு அழகான உடற்கட்டு இருக்கவேண்டும்" என்று. அதற்கு "அது எங்க இஞ்ச இருக்கு" என்பார் வடி வேலு. அதுபோலவே தமிழ்த் தேசிய வாதிகளும் தமிழ்த்தேசியம் குறி த்து மக்களைப் பார்த்துக் கேட்கி றார்கள். "அது எங்க இஞ்ச இரு க்கு" என்று.



இலங்கையின் சனத்தொகை யில் 80 வீதமாகவுள்ள சிங்கள மக்கள் மத்தியில் ஒரு கருத்துரு வாக்கத்தை ஏற்படுத்த வேண்டு மாயின் தொகையில் குறைந்த தமிழர்கள் முதலில் ஒன்றுபட்டி ருக்க வேண்டும். தமிழர்கள் தமக் குள் ஒன்றுபடுவதற்குத் தமிழ்த் தேசியம் ஒரு மையப்புள்ளியாக இருக்கின்றபோதும் அதை மையப்படுத்திய செயற்பாடுகள் இங்கில்லை. ஒரு தமிழ்த் தேசியத் துக்கு பத்துக்கு மேற்பட்ட கட்சிக ளும் தலைவர்களும் அவசியமில்லை.

பழுத்த அரசியல்வாதியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய சம்பந்தனிடம் ஏனைய கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் வல்லமை இல்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனால் மட் டுமே அந்த ஒற்றுமையை உருவாக்க முடிந்தது. 2009க்குப் பின்னர் அது நீர்த்துப்போய் ஆளுக் கொரு திக்கில் தமிழ்த்தேசியத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றனர்.

சாதி, பிரதேசவாதம், மத வேறுபாடுகளில்லாத தமிழ்த் தேசியத்தின் அடிப்படையாகவுள்ள தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ள தலைவர்கள் உருவாக வில்லை என்பதையே இந்தச் சூழல் நிரூபித்தி ருக்கிறது. தற்போது தமிழ்த் தலைவர்களின் கைக ளில் இருப்பது தமிழ்த் தேசியவாதம் அல்ல. பிர தேச வாதமும் குழு வாதமும் சாதிய வாதமுமே. ஒரே கட்சிக்குள் காணப்படும் ஒவ்வாமை, எதிர் காலத்தில் நாடாளுமன்றத்துக்கு எவ்வாறு செல் வது என்ற எதிர்பார்ப்பால் உருவாகும் பிடுங்குப் பாடு என்பனவே அவர்களிடம் காணப்படுகின்றன..

**தமிழ்த் தேசியத்தைத் தனியாக்க வேண்டும்**

முதலில் நாடாளுமன்ற அரசியலில் இருந்து தமிழ்த் தேசியத்தை வெளியே எடுக்கவேண்டும். தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்க அல்லது மக்க ளுக்குரியதாக மாற்ற நாடாளுமன்றத்தை முன்னி றுத்தி அல்லது அதில் தங்கி நின்று எதையும் சாதி க்க முடியாது என்பதைக் கடந்த முக்கால் நூற் றாண்டு காலம் தமிழ் மக்களுக்குக் கற்றுத் தந்தி ருக்கிறது. தமிழ்த் தேசப்பற்று என்பது ஒற்றுமை யற்று இருப்பது, நாளுக்குநாள் புதிய கட்சிகளை உருவாக்குவது, தமிழ்த் தலைவர்களின் குடும்பங் கள் சிங்களவர்களைத் திருமணம் செய்வது, தமிழ்த் தலைவர்கள் வடக்குக் கிழக்குக்கு வெளியே முதலீடு செய்வது, பாலியல் குற்றவாளிகளின் பக் கமும் போதை மற்றும் சட்டவிரோத கடத்தல்கா ரர்களை நீதியின் பிடியிலிருந்து பாதுகாப்பது, பாலியல் குற்றவாளிகளை சமூக விரோதிகளைத் தமது கட்சி சார்பாக மேடையேற்றிப் பேசவிடுவது, முழுநேர அரசியல்வாதிகளாக அல்லாமல் தமது தொழில் முயற்சிகளுக்கிடையில் அரசியல்வாதி களாக இருப்பது, தமிழர் தாயகத்தின் கனிய வளங்களை விற்பது, கனிய வளமுள்ள காணிகளை அரசியல்வாதிகள் தமதாக்குவது போன்ற விட யங்களில் அடங்காது. தேச பக்தி என்பது முழு நேரமும் மக்கள் பக்கம் நின்று செயற்படுவதாகும்.

**தலைமைச் செயலகம்**

தமிழ்த் தேசியவாதிகள் என்று தம்மை அடை யாளப்படுத்தக்கூடிய அனைவரும் போய்வரக் கூடிய ஒரு தலைமைச் செயலகத்தை உருவாக்க வேண்டும். குறைந்தபட்சம் போர் முடிந்தவுடன் அது உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். அங்கு தமிழ் மக்கள் சார்ந்த ஆவணங்கள் பேணப்பட்டி ருக்கவேண்டும். தமிழ்த் தேசியவாதிகள் மட் மல்லாது தென்னி லங்கை அரசியல் வாதிகள், வெளிநாட்டுத் தூதர்கள் என அனை வரையும் உள்வாங்கும் ஒரு பொதுக் கட்டமைப்பு அங்கு இருப்பது அவசியம். நாடாளுமன்றத்தில் உரையாற்றி வாதாடுவதன் மூலம் தமிழீழத்தையோ, தமிழ்த் தேசியத்தையோ வென்றுவிட முடியும் என்றால் பன்னாட்டுத் தரத்தில் புகழ்பெற்ற சட்டத்தரணியான ஜி.ஜி பொன்னம்பலம் அவற்றை எப்போதோ பெற்றுத் தந்திருப்பார்.

தமிழ்த் தேசியத்துக்கான ஒரு தலைமைச் செயலகத்தைக் கையாளக்கூடிய அறிவுப்பலமும் ஆளுமையும் உள்ள ஒருவரைக் கண்டறிந்து அவரை இந்த தலைமைச் செயலகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கவேண்டும். இதற்கு ஒத்துழைப்பது தமிழ்த் தேசியம் பேசுகின்ற ஒவ்வொரு தலைவரதும் கடப்பாடாகும். இந்திய அரசுடனும் இலங்கை அரசுடனும் அரசியலைக் கையாளக்கூடிய தகுதி அந்த ஒருங்கிணைப் பாளருக்கு உண்டு. தற்போது இந்தியாவில் இருப் பவரான அரசியல் நோக்குநர் மு.திருநாவுக்கரசுவும் ஒருங்கிணைப்பாளருக்கான தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடியவர்.

மு.திருநாவுக்கரசு இறுதிப்போர் முடிந்த 2009 மே 19திகதி வரை வன்னியில் மக்களுடன் வாழ்ந் தவர். அவருக்கு இருக்கக்கூடிய அறிவுசார் புலமை, அனுபவம்சார் புலமை, தமிழ் மக்கள் மீதிருக்கும் அக்கறை போன்றன தற்போது தமிழ்த் தேசியம் பேசுபவர்களிடமோ நாடாளுமன்ற உறுப்பினர் களிடமோ இல்லை.

ஒரு தலைமைச் செயலகம், அதற்கான ஆய்வு மையம், தகவல் மையம், அதற்கான உட்கட்டு மானம், நவீன வசதிகளுடனான உள்ளடக்கம் எனப் பலவற்றையும் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழ்த் தேசியத்தில் அக்கறையுள்ளவர்களால் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதனையும் ஒருங்கிணைக்கக்கூடியவர் திருநாவுக்கரசு.

கட்சி பேதமற்ற இந்தத் தலைமையகத்தைச் சகல தரப்பினரும் இலகுவாக நாட முடியும். தற்போது நடந்துகொண்டிருக்கும் ஆர்ப்பாட்டங்கள், மிக நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகள் என்று கூறப்படுகின்ற விடயங்களை இந்த மையத் தின் மூலம் இலகுவாகக் கையாள முடியும். அதற் கான சட்ட ஆலோசனைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்று பலவற்றையும் செயற்படுத்த முடியும்.

தற்போதுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ்த் தேசியத் தலைமைச் செயலகத்துக்குத் தமது கட்சி சார்பாக ஒரு பிரதிநிதியை நியமிக்க முடி யும். நாடாளுமன்ற அரசியலுக்கும் தலைமைச் செயலகத்துக்கும் தொடர்பிருக்கப்போவதில்லை. தமிழர் தாயகம் நிரந்தரமானது. அதேபோல தமிழ்த் தேசியமும் நிரந்தரமானது. நடாளுமன்றப் பதவிகள் அவ்வாறல்ல. இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் அடுத்த தேர்தலில் தோற்றுப்போக வாய்ப்புண்டு. அது மக்கள் எடுக்கும் தீர்மானம்.

**தகுந்த ஆய்வுடனும், மூளைப்பலத்துடனும் கூடிய தழிழ்த் தேசியத் தலமைச் செயலகமொன்றின் அவசியம் போர் முடிந்த 12 ஆண்டுகளில் உணரப்பட்டிருக்கிறது.**


தமிழ்த் தேசியத்துக்கான தலைமைச் செயலகம் தமிழ் மக்களுக்கானது என்பதால் அது நிலை பேற்றுடன் தொடர்ந்தும் செயற்படும் ஒரு நிறு வனக் கட்டமைப்பாகும். இதற்கு உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்களின் பங்களிப்பைப் பெற முடியும். தமிழ் மக்களுக்கான புலம்பயெர் தமி ழர்களின் நிதிப்பங்களிப்பைக்கூட இந்தத் தமைவமைச் செயலகம் ஊடாக செயற்படுத்த முடியும்.

தகுந்த ஆய்வுடனும், மூளைப்பலத்துடனும் கூடிய தழிழ்த் தேசியத் தலமைச் செயலகமொன்றின் அவசியம் போர் முடிந்த 12 ஆண்டுகளில் உணரப்பட்டிருக்கிறது. இறுதிப்போரில் இறந்த பொது மக்களின் பட்டியலைக்கூட எந்தத் தமிழ்த் தேசியக் கட்சியும் இதுவரை சேகரித்து வெளியிட வில்லை என்பது இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

போராளர் மாநாடுகளும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் வீரப்பேச்சுகளும் தனிமனித ஒழுக்கம் இல்லாதவர்களின் மேடைப் பேச்சுகளும் ஒருபோ தும் தமழ்த் தேசியத்தை உருவாக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடை அதுவே பருமன் குறைப்பின் திறவுகோல்!



கணேசன்

வெறுங்கை என்பது மூடத்தனம். விரல்கள் பத்தும் மூலதனம் என்கிறார் கவிஞர் தாராபாரதி. எத்தனை விரல்கள் இருந்தாலும் கட்டை விரல்தான் பிரதானம். அதுபோலத்தான் பருத்த உடலைக் குறைக்க கார்போ வேண்டாம், புரோட்டினைக் கூட்டு, கொழுப்பைக் குறை, நொறுக்குத் தீனிகளுக்கு டாட்டா என்று எத்தனை இரகசியங்களைச் சொன்னாலும், 'உடற்பயிற்சி' என்கிற இரகசியம்தான் மிகவும் அவசியம். ஆனால், அதற்குத்தான் பலருக்கும் இல்லை அவகாசம்.

### நலம் நல்கும் நடை

உடற் பயிற்சிகளின் அரசன் நடைப் பயிற்சி. காசு செலவில்லை. தனிக் கருவி தேவையில்லை. காலையில் விரைவாக எழுந்தால்போதும். துணைக்கு ஓர் ஆள் கிடைத்தால் நல்லது. 'காரியம்' கைகூடும்.

அவ்வளவு இலகுவாதல்ல என்றாலும் 'காலையில் எழுந்தால் சமைக்கவும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவும் நேரம் சரியாக இருக்கிறது' என்று பெண்களும், 'படுக்கவே லேட் நைட் ஆகிவிடுவதால், அதிகாலையில் எழுவது கடினம்' என்று ஆண்களும் 'நடையைக் கட்ட்' சப்பைக்கட்டு கட்டுகின்றனர்.

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். என்னதான் நீங்கள் டயட்டில் சினிஸ்டார் மாதிரி சரியாக இருந்தாலும், நடை, துள்ளோட்டம் (வாக்கிங், ஜாக்கிங்) போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளாவிட்டால், பருத்த உடல் எந்தக் காலத்திலும் குறையாது.

நடைக்குத் தேவை அரை மணி நேரம்தான். அதிகாலை நடை ஆரோக்கியம் காக்கும். அது முடியாது என்றால், எப்போது முடிகிறதோ அப்போதெல்லாம் என்பதே பதில்! முடியவில்லை என்றால், வாரத்துக்கு ஐந்து நாளாவது தேவை. திறந்தவெளி நல்லது. இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எங்கே சாத்தியமோ அங்கே நடக்கலாம்.

### நல்ல நடை எது?

நடைப்பயிற்சி எளிமையான பயிற்சிதான் என்றாலும், இதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றினால்தான் இதன் பயன்கள் முழுமையாகக் கிடைக்கும். அவை:

- ஆமை வேகமும் ஆகாது. குதிரை வேகமும் கூடாது. மித வேகம் மிகவும் நல்லது. இது எல்லா வயதுக்காரர்களுக்கும் பொதுவானது.
- தூய காற்றோட்டமுள்ள திறந்த வெளிகளில்/ பூங்காக்களில் நடைப்பயிற்சி செய்வது ஆரோக்கியமானது.
- அதிகாலை ஐந்து மணி முதல் ஏழரை மணி வரை அல்லது மாலை ஐந்து மணி முதல் ஆறரை மணி வரை நடைப்பயிற்சிக்கு ஏற்ற நேரங்கள்.
- வெறுங்காலில் நடக்கவேண்டாம். சரியான அளவுள்ள, மென்மையான ஷூவையும் வியர்வையை உறிஞ்சும் பருத்தித் துணியாலான காலுறைகளையும் அணிந்து நடக்கவேண்டும்.
- தினமும் குறைந்தது 30 நிமிடங்கள், அதிகபட்சமாக 1 மணி நேரம் நடக்க வேண்டும். தினமும் நடக்க முடியாதவர்கள் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி குறைந்தது வாரத்தில் 5 நாட்கள் அல்லது 150 நிமிடங்கள் நடந்தாலும் நன்மைதான்.
- நடைப்பயிற்சியின்போது நாடித்துடிப்பு நிமிடத்துக்கு 120க்கு மிகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- 'பிரிஸ்க் வாக்கிங்' என்று சொல்லக்கூடிய 'வேகநடை'யும் நல்லது. கை, கால்களுக்கு வேகம் கொடுத்து நடக்கிற பாணி இது. உடலில் வேறு பிரச்சினை இல்லாதவர்களும் உடல் எடையை விரைவாகக் குறைக்க விரும்புபவர்களும் இதைப் பின்பற்றலாம்.
- இந்த நடையில் 200 கலோரி எரியும். நிதானமாக எடை குறையும்.
- இளைஞர்கள் / இளம்பெண்கள் 'ஜாக்கிங்' என்று சொல்லக்கூடிய 'துள்ளோட்டம்' ஓடலாம்.
- இதில் 400 கலோரி எரியும். இப்படித் தினமும் ஓடினால் விரைவிலேயே ஓடிப்போகும் உடற்பருமன்.

> உடற் பயிற்சிகளின் அரசன் நடைப் பயிற்சி. காசு செலவில்லை. தனிக் கருவி தேவையில்லை. காலையில் விரைவாக எழுந்தால்போதும். துணைக்கு ஓர் ஆள் கிடைத்தால் நல்லது

### இது மிக முக்கியம்

உணவு சாப்பிட்டதும் நடக்கக் கூடாது. உயர் குருதி அழுத்தம் கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள், நெஞ்சுவலி ஏற்படுபவர்கள், இதய நோயாளிகள், சீறுநீரகப் பிரச்சினை உள்ளவர்கள், குருதிச்சோகை உள்ளவர்கள், அடிக்கடி தலைசுற்றல், மயக்கம் வருபவர்கள், முழங்கால் மூட்டுவலி, குதிகால் வலி போன்ற பிரச்சினை உள்ளவர்கள் மருத்துவரிடம் ஆலோசனையைப் பெற்றுதான் நடக்கவேண்டும்.

### இரண்டாவது இதயம்!

உடற்பருமன் இதயநலத்துக்கு எதிரி. ஆகவே, அவர்கள் இதயத்துக்கும் பாதுகாப்பு தர வேண்டியது முக்கியம். அதற்கும் நடைப் பயிற்சிதான் கைகொடுக்கிறது. எப்படி? தினமும் முறையாக நடைப் பயிற்சி செய்கிறவர்களுக்குக் கால் தசைகள் இரண்டாவது இதயம் போல் செயல்படுகின்றன. வேகமாக நடக்கும்போது, கால்களில் குருதிக் குழாய்களுக்குப் பக்கத்தில் உள்ள தசைகள் தூண்டப்பட்டு, இதயம் செயல்படுவதுபோல் வலுவான அழுத்தத்துடன் குருதியை உடல் முழுவதும் அனுப்பிவைக்கின்றன. ஆகவே, நடைப்பயிற்சி செய்பவர்கள் இரண்டு இதயங்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிறார்கள். அதன் பயனால் பலமிழந்த இதயம்கூட வலிமை பெறுகிறது. மாரடைப்புக்கு 'நோ' சொல்கிறது.

### கூடுதல் சிறப்பம்சங்கள் என்னென்ன?

கவனியுங்கள். நடப்பதும் ஓடுவதும் கலோரிகளைக் குறைப்பதற்கு மட்டுமல்ல! உடலில் உறங்கி வழியும் ஹார்மோன்களை உசுப்பிவிடவும்தான். உதாரணத்துக்கு, அரை மணி நேர நடை மூளைக்குள் 'என்டார்ஃபின்' ஹார்மோனைச் சுரக்க வைக்கிறது. இது தசைகளையும் நரம்புகளையும் முறுக்கிவிடுகிறது. ஐஸ்கிரீம் சாப்பிட்ட குழந்தைபோல் நாள் முழுக்க நமக்கு குதூகலம் வந்துவிடுகிறது.

செரிமானம் உற்சாகமடைகிறது. மூச்சு மேம்படுகிறது. குருதி ஓட்டம் சீரடைகிறது. மன அழுத்தம் மறைகிறது. இதுவரை உறக்க நிலையில் இருந்த இன்சுலின் இப்போது சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. நீரிழிவு விடை பெறுகிறது. இத்தனை பயன்களும் காலாற நடப்பதால் சுலபமாகக் கிடைக்கிறது. இவை எல்லாமே ஒழுங்காக நடக்கும்போது, தேர்தலில் கட்டுப்பணத்தை இழந்த வேட்பாளர் துண்டைக் காணோம்; துணியைக் காணோம் என்று தொகுதியைவிட்டே ஓடிப்போவதைப்போல் உடற்பருமனும் நம் உடலைவிட்டு ஓடிப்போகிறேன் என்கிறது.

### உதவிக்கு வரும் யோகா

நடைப்பயிற்சி தவிர வேறு வழி இல்லையா எனக் கேட்பவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா இப்போது முன்னர் மாதிரியல்ல

இராமனாதன்

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் முடிவுக்கு வந்திருக்கிறது. மாசி 4ஆம் நாள் தொடங்கிய இந்தப் போட்டி 20ஆம் நாள் முடிவுக்கு வருகிறது. 91 நாடுகளிலிருந்து பெய்ஜிங் வந்திருக்கும் 3 ஆயிரம் வீரர்கள் 109 தங்கப் பதக்கங்களுக்காகப் போட்டியிடுகிறார்கள்.

இது சீனாவில் நடக்கும் இரண்டாவது ஒலிம்பிக். எல்லா நாடுகளும் முழுமூச்சோடு பங்கேற்கும் கோடை ஒலிம்பிக், இதே பெய்ஜிங்கில் 2008இல் நடந்தது. இப்போது குளிர் கால ஒலிம்பிக்கை நடத்தியதன் மூலம் கோடை-குளிர் ஆகிய இரண்டு ஒலிம்பிக்கையும் நடத்திய ஒரே நாடு என்கிற பெயர் சீனாவுக்குக் கிடைக்கும்.

2022 ஒலிம்பிக், 2008 ஒலிம்பிக்கைவிடப் பல விதங்களிலும் வேறுபட்டது. இந்த முறை கொரோனாவின் பொருட்டு பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை. போட்டியாளர்களும் பயிற்சியாளரும் 'பாதுகாப்புச் சிமி'முக்குள் (பயோ பபிள்) பேணப் படுகிறார்கள். போட்டி முடிந்ததும் சிமிழுக்குள் போய்விட வேண்டும். முதல் முறையாக, முற்றிலும் செயற்கையாக உருவாக்கப்பட்ட பனியின் மீது போட்டிகள் நடக்கின்றன. வேறுபாடு கள் இந்த இடத்தில் முடிவதில்லை.

**அது காத்திருப்பின் காலம்**

உலகின் தொழிற்சாலையாக உருவாகிக் கொண்டிருந்த சீனாவை, யாருடைய கண்ணும்படாமல் வளர்க்க வேண்டு மென்று விரும்பினார் அப்போதைய தலைவர் டெங்-சியோ-பிங். சீனத் தலைவர்களுக்கு அவர் வழங்கிய அறிவுரை இது: 'அமைதியாக அவதானி. உன் இடத்தை உறுதி செய்துகொள். உன் சக்தியை வெளிக்காட்டாதே. அடக்கி வாசி.' சீனா அவ்வண்ணமே செய்தது. அது பல காலம் தன் சக்தியை வெளிக் காட்டிக் கொள்ள வில்லை. 2008 போட்டி யின் முன் நிகழ்ந்த ஒலிம்பிக் பந்தத்தின் பவனியில் சீனாவின் அடக்கி வாசிக்கும் திறனைக் காண முடிந்தது.

ஒலிம்பிக் மைதானத்தின் நடுவில் எரியும் ஜோதி, உலகின் பல நகரங்கள் வழியாகத் தொடர் ஓட்டம் மூலமாகக் கொண்டு வரப்படும். 2008இல் இந்தத் தொடர் ஓட்டத்தின்போது பல நாடுகளில், மனித உரிமை ஆர்வலர்கள் சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். லண்டனில் ஓட் டத்தைத் தொடங்கி வைத்தவர் துடுப்புப் படகில் ஐந்து முறை தங்கம் வென்ற ஸ்டீவ் ரெட்க்ரேவ். அவரது கைகளிலிருந்து ஆர்ப்பாட் டக்காரர்கள் பந்தத்தைப் பறித்தார்கள். பல நகரங்களில் தொடர் ஓட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சீனர்கள் அப்போது ஒலிம்பிக் குறித்துப் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தனர். தங்கள் பெருமிதத்தை அந்நியர்கள் பங்கப்படுத்துவதாகக் கருதினர். ஆகவே, சீனாவில் உள்ள அமெரிக்க, ஆங்கிலேய, பிரெஞ்சு நிறுவனங்களின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர். சீனத் தலைவர்கள் அவர்களை மட்டுப் படுத்தினர். ஏனெனில், அது சீனா அடக்கி வாசித்த காலம். சீனத் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தது. பந்தத்தின் பவனி என்பது ஒரு சடங்கு. விளையாட்டுதான் முக்கியம். அவர்களின் பொறுமைக்குப் பயனிருந்தது.

2008க்கு முன்பும் அதற்குப் பின்பும் அப்படி ஒரு விமரிசையான ஒலிம்பிக் கொண்டாட்டத்தை வேறு எந்த நாட்டாலும் காட்சிப்படுத்த முடியவில்லை. அந்த ஒலிம்பிக்கில் சீனா 100 பதக்கங்களை அள்ளியது. அதில் சரி பாதி தங்கம். அந்த விளையாட்டின் முடிவில் உலக நாடுகளிடையே சீனாவின் மதிப்பு உயர்ந்தது. அந்த மதிப்பைத் தக்கவைத்துக்கொள்ள சீனா தனது நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

**இது மோதலின் காலம்**

இப்போது 2022 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுக்கும் பல ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் தொடக்க விழாக் கொண்டாட்டங்களைப் புறக்கணித்துவிட்டன. லடாக்கை ஒட்டியிருக்கும் சின் ஜியாங் மாநிலத்தில் வசிக்கும் உய்குர் முஸ்லிம்கள் இனத்தால், மொழியால், மதத்தால் பெரும்பான்மை சீனர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். அங்கு மறுகல்வி முகாம்கள் அமைக்கப்பட்டு, உய்குர்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு நெடுநாளாக இருந்துவருகிறது.

இது உட்பட சீனா மனித உரிமைகளை மதிப்பதில்லை என்பதுதான் மேலை நாடுகளின் புறக்கணிப்புக்குக் காரணம். முதலில் இந்தப் புறக்கணிப்பிலிருந்து இந்தியா தள்ளி நின்றது. ரஷ்யா கேட்டுக்கொண்டதும் ஒரு காரணம். ஆனால், போட்டி தொடங்குவதற்கு முன்னர் ஒலிம்பிக் பந்தத்தை ஏந்தப் போகிறவர்களில் ஒருவர், 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்ட கால்வன் போரில் (2020) பங்கேற்ற சீன அதிகாரி என்பது தெரிந்ததும் இந்தியாவும் புறக்கணிப்பில் சேர்ந்துகொண்டது.

ஆனால் அது பற்றியெல்லாம் சீனா அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில் இப்போது சீனாவின் முகம் மாறிவிட்டது. அதன் வளம் பன்மடங்கு பெருகிவிட்டது. 2008இல் 5 டிரில்லியன் டாலராக (ரூ. 377 லட்சம் கோடி) இருந்த ஜிடிபி, இப்போது 16 டிரில்லியன் ஆகிவிட்டது (இந்தியாவின் தற்போதைய ஜிடிபி-2.6 டிரில்லியன்).

**அதிகாரக் குவியல்**

மா-சே-துங்கின் மறைவுக்குப் பிறகு சீன கம்யூனிஸ்ட் கட்சி சுயபரிசீலனை செய்துகொண்டது. ஒரே தலைவரிடம் அதிகாரம் குவிந்திருந்ததே முந்தைய வீழ்ச்சிகளுக்குக் காரணம் என்று கருதியது. அதனால், அதிகாரத்தைப் பரவலாக்கியது. மேலும், ஓர் அதிபரின் பதவிக் காலம் 10 ஆண்டுகளுக்கு அதிகமாகக்கூடாது என்றும் நிர்ணயித்தது.

இப்போதைய அதிபர் ஷி ஜிங்பிங் இந்த விதிகளை மாற்றி எழுதிவிட்டார். ஒரே தலைவரே நாட்டின் துரித வளர்ச்சிக்கான ஒரே வழி என்று அவர் உறுதியாக நின்று காட்டுகிறார். 2012இல் பதவிக்கு வந்த ஷி, 2022க்குப் பின்னரும், மேலும் ஒரு தசாப்தமேனும் அதிகாரத்தில் நீடிப்பார். கட்சி, ஆட்சி, படைத்துறை, வெளியுறவு என அனைத்து அலகுகளிலும் அவரது ஆதிக்கம் நீடிக்கும். இப்போது ஷியின் சீனா அடக்கி வாசிப்பதில்லை. அது வெளிப்படையாக மோதுகிறது. அமெரிக்காவுடனான வணிகப் போரிலும், தென்சீனக் கடல் ஆக்கிரமிப்பிலும், இந்திய எல்லையைத் தாண்டுவதிலும் அது வெளிப்படுகிறது.

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளிலும் தனது கடன் வழங்கும் சக்தியின் மூலம் ஆழமாக வேரூன்றுகின்றது. அதன் வழியாக தனது வர்த்தகத்தைப் பெருக்குவது மட்டுமல்லாமல் மேற்கு நாடுகளுக்கும் தனியொரு நாடாகச் சவால் விடுகிறது. மேற்கு நாடுகளின் மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களை புறங்கையால் ஒதுக்கிவிட்டு நடக்கத் தன்னைப் போலவே தன்னைச் சார்ந்திருக்கும் நாடுகளுக்கும் துணிபு கொடுக்கின்றது. இதுதான் இன்றைய சீனா. அதனால்தான் பல நாடுகளும் மேற்கு நாடுகளுக்கு எதிரான அணியின் தலைமையிடத்தில் அதை வைத்துப் பார்க்கத் தொடங்கியிருக்கின்றன. அத்தகைய சீனாவின் மற்றொரு உறுதியான வெளிப்பாடுதான் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்.

"விளையாட்டுப் போட்டி வெறும் விளையாட்டல்ல. அது பகையும் பொறாமையும் அகங்காரமும் நிறைந்த போர்" என்றார் ஜார்ஜ் ஆர்வெல். மைதானத்துக்கு வெளியேயும் போட்டிகள் நடக்கின்றன. 2008இல் சீனாவின் கை மைதானத்துக்குள் ஓங்கியிருந்தது. 2022இல் மைதானத்துக்கு வெளியேயும் ஓங்கியிருக்கிறது. இந்தச் சூழலைத் தமிழ்ச் சமூகம் சரிவரப் புரிந்துகொள்வது பூகோள அரசியலை மையமாக வைத்து தனது அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்ய முடியும் என்று நம்பும் கத்துக்குட்டித்தனத்துக்கு மிக முக்கியமானது. ■



**2022 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுக்கும் பல ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் தொடக்க விழாக் கொண்டாட்டங்களைப் புறக்கணித்துவிட்டன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?



07

## தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்க் காவலர்களை ஏன் தவிர்க்கிறார்கள்?

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணம், அதற்குத் தனியான காவல்துறை அதிகாரம் என்கிற விடயங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. காவல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காகச் சி.வி. எவ். என்ற சிவில் தன்னார்வப் படை ஒன்றை இந்தியப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது உருவாக்கியது. அவர்களில் பலர் புலிகளுடன்னா மோதலில் இறந்தனர். போர் முடிந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாகத்தைப் பலப்படுத்தவும் தமிழ்க் காவல் படையைச் செயற்பாட்டில் வைத்திருக்கவும் தவறிவிட்டனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் காவலர்களையும், மலையக அரசியல் தலைவர்கள் மலையகத் தமிழ்க் காவலர்களையும் தமது பாதுகாப்புக்கு வைத்துக்கொள்கிறபோதும் வடக்குக் கிழக்குத் தமிழ் உறுப்பினர்கள் அதுவும் தமிழ்த் தேசியம் பேசுவோர் தமிழ்க் காவலர்களைத் தமது பாதுகாப்புக்கு வைத்திருப்பதில்லை. ஏன் அப்படி என்று தேடிப்பார்த்தால்,

**காரணம் 1**

தமிழ் மக்கள் மத்தியில் தம்மை மேலானவர்களாகக் காட்டுவதற்காகச் சிங்களக் காவலர்களைத் தமது சேவகர்களாக்குவது.

தம்மை உயர்ந்தவராகத் தமிழ் மக்களுக்குக் காட்டுகின்ற இந்தப்போக்கைத் தொடக்கி வைத்ததில் அமிர்தலிங்கத்துக்கு முக்கிய பங்குண்டு. சிங்களக் காவலர்களை அருகில் வைத்துக்கொண்டு சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கதைக்கும் தைரியம் தனக்கு இருக்கிறது என்று மக்கள் நம்ப வேண்டும் என்பது இதன் உள்ளார்ந்தம். இந்த அற்ப ஆசை இன்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் உண்டு.

**காரணம் 2**
**தமிழ்க் காவலர்களில் பலர் வேளாளர் அல்லாத சாதியினர்**

புலனாய்வுத்துறை அதிகாரியான வஸ்தியாம்பிள்ளை தொடக்கம் பலர் வேளாளர் அல்லாதவர்களாக இருந்ததால் அவர்களை வீட்டுக்குள் எடுப்பதில் வேளாளத் தலைவர்களுக்குச் சிரமம் இருந்தது. இவ்வாறானவர்களை வீட்டுக்குள் புழங்கவிட்டால் தமது குடும்பங்களுக்குள் நடக்கக்கூடாதவைகள் நடந்துவிடுமோ என்ற பயமும் அவ்வாறு நடந்தால் தமக்குச் சமூகத்தில் அங்கீகாரம் இல்லாது போய்விடும் என்பதுடன் அடுத்த தடவை தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுவிடுவோம் என்ற அச்சமும் மற்றொரு காரணம்.

**காரணம் 3**

2009க்குப் பின்பான காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பலர் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற புலிகளின் தூண்டுதலால் தமது மெய்ப் பாதுகாவலர்களாலேயே கொல்லப்படலாம் என்கிற பயம்.

**காரணம் 4**
**அரசுக்கு விசுவாசமாக இருப்பதாகக் காட்டுவது**

சிங்கக் கொடி, பௌத்த இலட்சினை, சிங்களக் காவல் பாதுகாப்புடன் தமது வாகனங்களில் பயணிப்பதன் மூலம் உங்களது கண்காணிப்பில் எப்போதும் நாம் இருக்கிறோம் என்றும் தாம் பிழை செய்யாது இருக்கிறோம் என்றும் சிங்கள ஆட்சியாளர்களை நம்ப வைப்பது. முக்கியமான ஆர்ப்பாட்டங்கள், அரசுக்கு எதிரான செயற்பாடுகள் போன்றன நடப்பதற்கு முன்னதாகவே ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்திக் களமிறங்குவது போன்ற பல விடயங்களுக்குச் சிங்கள மெய்ப் பாதுகாவலர்களே மிகவும் உதவி ஒத்தாசையுடன் நடந்துகொள்ளக்கூடியவர்கள் என நம்புவது.

சிங்களக் காவலர்களை மெய்ப்பாதுகாவலர்களாக வைத்திருப்பும் தமிழ் உறுப்பினர்களின் தேவையே தவிர இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்க் காவல் படையைப் பலப்படுத்துவது என்ற விடயத்தில் எதிர்மறையான எண்ணப்பாடுகளே வடக்குக் கிழக்குத் தமிழ் உறுப்பினர்கள் மத்தியில் உண்டு.

## வண்டியோட்டும் மீன்கள்

சர்க்கஸில் யானை, குரங்கு, சிங்கம்கூட சைக்கிளில் உள்ள பெடல்களை மிதிப்பதைப் பார்த்திருப்போம். தொட்டியில் வாழும் தங்கமீன்கள், அந்தத் தொட்டியைக் குறிப்பிட்ட இலக்கு நோக்கிச் செலுத்துகின்றன என்றால் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! இஸ்ரேல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்தாம் மீன்களுக்கு இந்த வித்தையைக் கற்றுக்கொடுத்திருக்கின்றனர்.

மீன்களின் திசை அறியும் உணர்வு, தொட்டியில் வாழ்ந்தாலும் குறைந்து விடவில்லை. திசை அறியும் உணர்வும் தம்மைச் சுற்றியுள்ள வெளி குறித்த உள் உணர்வும் மீன்களுக்கு உண்டு என்கிற கருத்தை இந்த ஆய்வு காட்டுகிறது.

மீனுக்குக் கை, கால்கள் இல்லை. நீரை விட்டு வெளியே வாழ முடியாது. எனவே, மீன் ஓட்டும் வாகனத்தைப் புது முறையில் தயார் செய்தார்கள். மீன்தொட்டியின் நான்கு பக்கச் சுவர்களிலும் உணர்விகளைப் பொருத்தினார்கள். தொட்டியின் நான்கு பகுதிகளிலும் மோட்டார் சக்கரங்களைப் பொருத்தினார்கள். சுவரில் உள்ள உணர்விகளையும் சக்கர மோட்டர்களையும் கணினி மூலம் இணைத்தார்கள்.

தொட்டியில் அங்கும் இங்கும் மீன்கள் நீந்தும். சில நேரம் மீன்கள் தொட்டியின் சுவரில் தலையை மோதுவது போல வரும். இதனை உணர்விகள் கண்டு, சக்கரங்களின் மோட்டரை இயக்கும். அப்போது தொட்டி நகரும். மீன் வெளிப்பக்கம் நோக்கித் தலையை வைத்தால் தொட்டி நகரும். உட்பக்கமாகத் தலையைத் திருப்பினால் தொட்டி நின்றுவிடும்.

பயிற்சியின் ஆரம்ப நிலையில் மீன்கள் சீரற்ற முறையில் சுற்றி வந்தன. தற்செயலாகச் சுவரின் அருகில் மீன்கள் வரும்போது, அந்தத் திசை நோக்கி மெல்ல தொட்டி நகர்வதை உணர்ந்துகொண்டன. தொட்டி நகர்ந்தால் மட்டுமே மீன்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. இதனையும் காலபோக்கில் மீன்கள் உணர்ந்து கொண்டன.

அடுத்த கட்டப் பயிற்சியில் தொட்டி வைக்கப்பட்ட அறையின் சுவரில் இளஞ்சிவப்பு தட்டியைப் பொருத்தினர். அதுதான் இலக்கு. முன்னும் பின்னும் இடமும் வலமும் இயங்கி, தொட்டியைத் தட்டி அருகே கொண்டு வர வேண்டும். அவ்வாறு கொண்டு வந்தால் மீன்களுக்கு உணவு கிடைக்கும். ஆரம்பத்தில் தடுமாறினாலும் காலப்போக்கில் மீன்கள் சரியாகச் செயல்பட்டன. தொட்டி நகர ஆரம்பித்தது. வாரம் மூன்று முறை மீன்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் மீன்தொட்டி பல முறை மீன்களால் நகர்த்தப்படும். இளஞ்சிவப்பு தட்டி அருகே சென்றால் உணவு கிடைக்கும். வேறு வண்ணத் தட்டிகள் அருகே சென்றால் உணவு கிடைக்காது. ஆரம்பத்தில் ஒவ்வொரு பயிற்சியின்போதும் மூன்று பயணங்கள் மட்டுமே சரியான இலக்கை அடைந்தன. காலப்போக்கில் 18 பயணங்கள் சரியான இலக்கை அடைந்தன. அதேபோல ஆரம்பத்தில் தற்செயலாகத்தான் இலக்கை அடைந்தன. காலப்போக்கில் இலக்கை நோக்கிச் சரியாகச் சென்றன.

சோதனையில் மாற்றங்களைச் செய்து பார்த்தார்கள். அறையின் நடுவில் வைக்காமல் அறையின் எந்தப் பகுதியில் தொட்டியை வைத்தாலும் குறி தப்பாமல் இலக்கு நோக்கி, பயிற்சிபெற்ற மீன்கள் சென்றன. வீட்டில் உள்ள அறைகளின் அமைப்பு குறித்து, இந்த அறையின் சுவருக்கு அப்பால் குறிப்பிட்ட அறை உள்ளது. இந்த அறையிலிருந்து இப்படிச் சென்றால் அந்த அறையை அடையலாம் என்றெல்லாம் நம் மனம் யோசிக்கும். அதே மாதிரி தம்மைச் சுற்றியுள்ள உலகம் குறித்த உள் உருவமைப்பை விலங்குகளும் கொண்டுள்ளன என இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் ஆடையைத் தீர்மானிப்பவர்கள் யார்?

(இந்துப் பாரம்பரியப் பாடசாலை ஒன்றுக்குள் முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் அணிந்து வந்த ஆடை அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. நீதிமன்றப்படியேறி பிரச்சினையைத் தீர்க்க இணக்கம் கண்ட பின்னரும் அதுவொரு மிகப்பெரும் பிரச்சினையாக, சர்ச்சையாக உருவாக்கப்பட்டது. இங்கு மட்டுமல்ல, முஸ்லிம் பெண்களின் ஆடை குறித்து இந்தியாவிலும் அண்மையில் சர்ச்சை வெடித்திருந்தது. அது குறித்து தமிழ்நாட்டின் முன்னாள் நீதிபதியான சந்துரு ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அண்மையில் நடிகர் சூர்யா நடித்து வெளியான ஜெய்பீம் படத்தில் சூர்யா ஏற்றிருந்த சட்டவாளர் பாத்திரத்தின் அசல் சொந்தக்காரர் இந்த சந்துருதான். கொல்லப்பட்ட அப்பாவி மனிதனுக்காகச் சட்டப் போராட்டத்தை நடத்தி நீதியை மக்களின் பார்வைக்கு முன் நிறுத்திய அவர் பின்னாளில் இந்திய நீதித் துறையின் நீதிபதியாகவும் உயர்ந்தவர். அவரது கருத்துக்களை, காலப் பொருத்தம் கருதி, எந்தவித மாற்றங்களும் இன்றி செம்மண் அப்படியே இங்கு வெளியிடுகின்றது.)

**சந்துரு**

மார்கழி மாதம் 30 நாட்களும் வைணவக் கோயில்களில் ஆண்டாளின் திருப்பாவை பாடப்படும். அதில் 27-ம் நாள் மிகவும் புனிதமான நாள் என்று கொண்டாடுவார்கள். அந்த நாளை 'கூடாரவல்லி' என்று சொல்வார்கள். 27-வது திருப்பாவையின் முதல் வரிகள் "கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா' என்று ஆரம்பிக்கும். அதற்கு அர்த்தம் பகைவனை வெல்லும் கோவிந்தன் என்று கூறலாம். அதுதான் காலப்போக்கில் மருவி ஆண்டாளைக் கொண்டாடும் தினமாக - கூடாரவல்லி - என்று அழைக்கப்படுகிறது.

ஜெயலலிதா 1996-ல் முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டபோது தனக்கென்று ஒரு தனி மேலாடையை அணிந்துகொள்ள ஆரம்பித்தார். வழக்கமாக புடவை தரித்து பொது வெளிகளில் நடமாடிவந்த அவர் திடீரென்று அதற்கு மேல் ஒரு மேலங்கியைப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தார். எல்லோருக்கும் அதற்கான காரணம் தெரியவில்லை. அவரே பின்னர் ஒரு பேட்டியில் பெண்கள் பொதுவெளியில் வரும்போது ஏற்படும் சில சங்கடங்களைத் தவிர்க்கவே அப்படிப்பட்ட ஒரு மேலங்கியை அணிந்துகொண்டதாகக் கூறியிருந்தார். அவருடைய புதிய தோற்றத்திற்கு அச்சமயத்தில் சிலர் அவரை கேலிசெய்யும் விதமாக 'கூடாரவல்லி' என்று குறிப்பிட ஆரம்பித்தனர்.

தங்களது தோற்றத்தை முழுமையாக மூடிக்கொண்டு வரும் இஸ்லாமியப் பெண்களை 'கோஷா' என்று அழைப்பார்கள். அப்படி கூட்டமாக புர்கா அணிந்துவரும் இஸ்லாமியப் பெண்களை ஒரு ஐரோப்பியர், 'நகர்ந்து செல்லும் கூடாரங்கள்' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார். அந்த ஐரோப்பியருக்கு அது ஆரம்பத்தில் வேடிக்கைக் குறியீடாக இருந்தாலும், பின்னர் 21-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமிய மதத்திற்கு மாறிய ஐரோப்பிய பெண்கள் அத்தகைய உடைதரித்தலை நியாயப்படுத்தி பொதுவெளிகளில் விவாதங்களைத் தொடங்கியதை நாம் பார்த்திருக்கிறோம்.

**சார்டோரியல் டெஸ்பாடிஸம்**

இஸ்லாமியப் பெண்கள் தங்களது உடலை (அ) முகத்தைத் துணியால் மூடிக்கொண்டிருக்கும் உடையானது,



அதன் வகைகளுக்கு ஏற்ப புர்கா, ஹிஜாப், கூங்கட், கோஷா என்று அழைக்கப்படுகிறது. அது மதம் சார்ந்த கட்டுப்பாடு (அ) மதத்திற்கு இன்றியமையாத தேவை என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. பெண்களின் உடை என்பது ஆண்களின் விருப்பப்பாடு என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

என்னுடைய தீர்ப்பொன்றில் நான் இதை 'உடை சர்வாதிகாரம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதை வர்ணிக்க 'சார்டோரியல் டெஸ்பாடிஸம்' என்ற புதிய ஆங்கில வார்த்தையை என் தீர்ப்பில் பயன்படுத்தினேன். அதுகுறித்து ஆராயும் முன் சில நடைமுறை நிகழ்வுகளை இங்கு பதிவுசெய்வது அவசியம். நீதிமன்றங்களில் வக்கீல்கள் எந்த உடையை அணிய வேண்டும் என்பதை 1961-ம் வருடத்திய வழக்குரைஞர் சட்டத்தின் கீழ் இந்திய பார் கவுன்சில் ஒழுங்காற்று விதிகள் மூலம் நிர்ணயித்துள்ளது. பெண் வக்கீல்களைப் பொறுத்தவரை அவர்கள் கறுப்பு கௌன் ஒன்றையும், கழுத்தில் வெள்ளைப் பட்டியும் அணிந்திருந்தால் போதும். 1980-களில் உயர் நீதிமன்றத்தில் வழக்காடிய பெண்களும் அப்படித்தான் தோன்றினார்கள். ஆனால், ஒரு நீதிபதிக்கு இதில் உடன்பாடு இல்லை. தன் முன்னால் ஆஜரான மூத்த வக்கீல் நளினி சிதம்பரத்தைப் பார்த்து, 'இனி நீங்கள் ஆண்கள் போலவே கோட்டு அணிந்து அதற்கு மேல் கறுப்பு கௌன் அணிந்து வர வேண்டும்' என்று ஆலோசனை கூறினார். அதற்கு அவரும் சம்மதித்து, தான் உடை அணிவதை மாற்றிக்கொண்டார்.

நீதிமன்றங்களில் பெண் வழக்கறிஞர்கள் அனைவரும் இந்தப் புதிய உடைக் கட்டுப்பாட்டிற்கு ஆளாக்கப்பட்டார்கள். இக்கட்டுப்பாடு குறித்து இந்திய பார் கவுன்சிலை யாரும் இதுவரை கலந்தாலோசிக்கவில்லை. இப்படிப்பட்ட புதிய உடைக் கட்டுப்பாடு விதிக்க அதிகாரத்தையும், அதற்கான தேவையையும் நீதிபதிகள் எந்த அடிப்படையில் முடிவு எடுத்தார்கள் என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. சில வருடங்களுக்குப் பிறகு தங்களுக்கு முன்னால் தீர்ப்புகளைக் குறிப்பெடுத்துக்கொள்ள வரும் பெண் உதவியாளர்களும் கோட்டு அணிந்து வர வேண்டும் என்ற எழுதப்படாத விதி அவர்கள் மீது திணிக்கப்பட்டது. ஆனால், இதற்கான எதிர்ப்புகள் எதுவும் எழாத நிலையில் அவ்விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்டன.

இன்றைக்கும் கட்டிடத் தொழிலாளர்களில் சித்தாள் வேலைக்கு வரும் பெண்கள் ஆண்களின் சட்டையொன்றை மேலே போட்டுக்கொண்டு வருவதைப் பார்க்கலாம். அது சௌகரியமாக இருக்கிறது என்றுகூட அவர்கள் கூறுவார்கள். இதெல்லாம் அவர்களது அனுபவத்திலிருந்து அவர்கள் உருவாக்கிக்கொண்ட ஏற்பாடுகள் என்றும், ஆண்களின் தவறான பார்வையைத் திசை மாற்றுவதற்குதான் இப்புதிய உடை என்றும் கூறினர்.

இந்த உடை மாற்றம் அவர்களாகவே உருவாக்கிக்கொண்டதேயொழிய எந்த மேஸ்திரியோ (அ) கட்டிட ஒப்பந்தக்காரர்களோ அவர்கள் மீது திணித்ததல்ல. ஆனால் இத்தகைய உடைமாற்றத்திற்கு காரண கர்த்தாக்கள் ஆண்களாக இருந்தார்கள் என்பதற்குப் புதிய் விளக்கம் தேவையில்லை.

**வேறு எவரும் விதித்திருக்க முடியாது**

சில வருடங்களுக்கு முன் உச்ச நீதிமன்றமே வளாகத்தில் பணியாற்றும் வக்கீல், குமாஸ்தாக்கள்கூட ஜீன்ஸ் அணியக் கூடாது என்று கட்டளையிட்டது. சமீபத்தில் பம்பாய் நீதிமன்றமோ மனைவியை ஜீன்ஸ் அணியக் கூடாதென்று கட்டளையிட்ட கணவனின் செயல் குரூரமானது என்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனநிலையில் இருந்த ஆண் நீதிபதிகள் முன் பெண்களின் சீருடை குறித்த கட்டுப்பாடுகள் பற்றிய வழக்குகள் வந்தபோது அவர்கள் அதை எப்படி அணுகினார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தி.நகரிலிருந்த வெங்கடசுப்பாராவ் மெட்ரிகுலேஷன் பள்ளி திடீரென்று ஆசிரியர்களும் விதிக்கப்பட்ட சீருடையில் வர வேண்டும் என்று புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன்படி ஆண் ஆசிரியர்கள் பேன்ட் சட்டையோடும், பெண் ஆசிரியர்கள் சல்வார் கமீஸிலும் வர வேண்டும் என்றும், தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் நிர்வாகம் கூறியது.

இந்த விதியை எதிர்த்து ஆண் ஆசிரியர்கள் தமிழ்ப் பண்பாட்டின்படி வேட்டி சட்டையிலும், பெண் ஆசிரியர்கள் புடவை கட்டிக்கொண்டும் வர ஆரம்பித்தனர். நிர்வாகம் கூறியபடியே அபராதத் தொகையை சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ள ஆரம்பித்தது.

இதை எதிர்த்து ஆசிரியர்கள் போட்ட வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடிசெய்தது. ஆனால், இவையெல்லாம் எந்த அதிகாரத்தின் கீழ் போடப்படுகிறது என்பதைத் தெரிவிக்கவில்லை. ஆனால், போரூரிலுள்ள ஹோமியோ மருத்துவக் கல்லூரி மாணவி சல்வார் கமீஸ் அணிந்து வந்ததை தடுத்ததை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கில் நீதிபதி கே.வெங்கட்ராமன் அப்படி ஓர் உடைக் கட்டுப்பாட்டை கல்லூரி நிர்வாகம் விதிக்க முடியாது என்று தீர்ப்பளித்தார்.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் சீருடைக் கட்டுப்பாடுகள் கொண்டு வந்தபோது ஆரம்பத்தில் வயது வந்த மாணவிகள் பாவாடை தாவணியில் வர வேண்டும் என்று கூறப்பட்டது. அதுதான் தமிழர்களின் கலாச்சாரம் என்று பறைசாற்றப்பட்டது. ஆனால், மாணவிகளுக்கு சைக்கிள் கொடுத்தபோதுதான் அவ்வுடை எத்தகைய இன்னல்களை விளைவிக்கும் என்பது தெரியவந்தது.

இந்த விஷயத்தின் தீவிரத்தை முதல்வர் ஜெயலலிதா புரிந்துகொண்டார் மாணவிகள் சல்வார் கமீஸ் சீருடைக்கு மாறிக்கொள்ளலாம் என்று அவர் உத்தரவிட்டார். பாராட்டுக்குரிய இவ்வுத்தரவு வந்த பிறகு தமிழ்நாடு முழுதும் அனேகமாக 90% மாணவிகள் அந்த உடையில்தான் வர ஆரம்பித்தனர். இதில் வடக்கு - தெற்கு என்ற பேச்சுக் கெல்லாம் இடமே இல்லாமல் போனது.

இன்றைக்கும் கட்டிடத் தொழிலாளர்களில் சித்தாள் வேலைக்கு வரும் பெண்கள் ஆண்களின் சட்டை யொன்றை மேலே போட்டுக்கொண்டு வருவதைப் பார்க்கலாம். அது சௌகரியமாக இருக்கிறது என்றுகூட அவர்கள் கூறுவார்கள். இதெல்லாம் அவர்களது அனுபவத்திலிருந்து அவர்கள் உருவாக்கிக்கொண்ட ஏற்பாடுகள் என்றும், ஆண்களின் தவறான பார்வையைத் திசை மாற்றுவதற்குதான் இப்புதிய உடை என்றும் கூறினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் ...

**காலனிய அடிமை மனோபாவம்**

அரசுக்கு சொந்தமான மைதானத்தில் செயல்பட்டு வருகிறது சென்னை கிரிக்கெட் கிளப். அந்த கிளப்பில் ஆங்கிலேயர் உடை அணிந்து வந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவர். முன்னுதாரண நீதிமானாகத் திகழ்ந்த முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் எப்போதுமே கதராடையைத்தான் அணிவார். வெள்ளைச் சட்டையும், வேட்டியும் அணிந்து காலில் ஒரு ரப்பர் செருப்பைத்தான் மாட்டியிருப்பார்.

சென்னை நண்பர் ஒருவர் அவரை சென்னை கிரிக்கெட் சங்கத்துக்கு இரவு உணவு அருந்த அழைத்துச் சென்றார். வாயிலில் இருந்த காவலாளி கிருஷ்ணய்யரை கிளப்பிற்குள் விட மறுத்து விட்டார். அந்த கிளப்பிற்கு உள்ளே வர மேற்கத்திய உடையை (பேண்ட், சர்ட், ஷூ) மட்டுமே அணிந்திருக்க வேண்டும். அழைத்துச் சென்ற நண்பர் தனது விருந்தாளி உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி என்று கூறி வாக்குவாதம் செய்தாலும் காவலாளி, "சங்கத்தின் விதி என்றால் விதிதான். ஆகவே அவரை உள்ளே அனுமதிக்க முடியாது' என்று தீர்மானமாகக் கூறிவிட்டார்.

இந்தச் சச்சரவை ரசிக்காத கிருஷ்ணய்யர் அந்தக் காவலாளியிடம் சங்கத்தின் விருந்தினர் புத்தகத்தைக் கொண்டுவருமாறு கூறினார். அந்தப் புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு பதிவுசெய்து வெளியேறினார் கிருஷ்ணய்யர். "நான் இரவு உணவருந்தும் வேட்கையில் இங்கே வந்தபோது காவலாளி ஒருவரால் தடுக்கப் பட்டேன். நான் போட்டிருக்கும் உடை கிரிக்கெட் சங்கத்தின் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதது, மேற்கத்திய உடைகளைத்தான் அணிய வேண்டும் என்பதுதான் இங்கே விதி! அய்யகோ, சுயராஜ்ஜியம் இந்நாட்டை விடுவித்தாலும் அந்த சுதந்திரம் இந்தச் சங்கத்தின் வாசற்படியோடு நின்றுவிட்டது. நான் இன்றிரவு விருந்து உண்ணாமலேயே இங்கிருந்து திரும்புகிறேன். ஆனால் ஒரு கௌரவமான இந்தியனாக!'

சுதந்திரமடைந்த பிறகும்கூட விடுபடாத நமது காலனிய அடிமைப் புத்தியைத்தான் இச்சம்பவம் படம் பிடித்துக்காட்டுகிறது. இந்தச் சம்பவத்தை கஸ்தூரி என்ற இந்திய தேசிய விமான ஆணையத்தில் வேலைபார்த்த ஊழியர் ஒருவர் தாக்கல்செய்த வழக்கில் நான் குறிப்பிட்டேன். ஒன்றிய அரசு நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் ஊழியர் கதர் ஆடை அணிந்து வருவதற்குத் தடை விதித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைக் கண்டித்து அந்த நிர்வாகத்திற்கு அபராதத் தொகை விதித்ததுடன், முதன்முறையாக அந்தத் தீர்ப்பில் 'உடை சர்வாதிகாரம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன்.

சென்னை கிரிக்கெட் கிளப்பில் புத்தக விழாவில் கலந்துகொள்ள வேட்டியுடன் வந்த நீதிபதி ஒருவரையும், மூத்த வழக்குரைஞர் ஒருவரையும் கிளப் ஊழியர்கள் அனுமதிக்காதது ஊடகங்களில் வெளியானது. இதைப் பார்த்த அன்றைய முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் புதிய சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்தார். கலாச்சார உடையில் வருபவர்களை அனுமதிக்காத கிளப் நிர்வாகங்களுக்கு சிறைத் தண்டனை என்று அறிவித்தார்.

**அதிகாரத்தைப் பறிப்பதே இறுதி முடிவு**

இந்த உடைக் கட்டுப்பாட்டைப் பற்றி பேசும் நேரத்தில் சம்பவம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வைத்தியநாதன் திடீரென்று திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தமிழ்நாட்டில் உடைக் கட்டுப்பாடு கொண்டு வர வேண்டும் என்றதுடன், அவரே அதற்கான உடை விதிகளையும் தனது தீர்ப்பில் அறிவித்தார். ஆனால், அந்த உத்தரவை ரத்துசெய்த இரு நீதிபதிகள் அமர்வு இது நீதிபதிகளின் வேலை அல்ல என்று அவருக்கு அறிவுறுத்தியது.

பெண்கள் தோற்றத்தில் செய்துகொண்டுவரும் மாற்றங்கள், உடைகள் தொடர்பில் வேறு சில தீர்ப்புகளும் உண்டு. பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்கள் நடத்தும் கல்லூரி ஒன்றில் விண்ணப்பித்த இரு மாணவிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அம்மாணவிகள் சீக்கிய மதக் கோட்பாடுகளுக்கு விரோதமாக தங்களது புருவத்தை நூல் வைத்து திருத்திக்கொண்டனர் என்று கூறப்பட்டது. புருவத் திருத்தம் சீக்கிய மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குள் வருமா என்ற கேள்வியை விசாரித்த பஞ்சாப் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு 150 பக்கத்திற்குத் தங்களது பாஷ்யக்கார உரையில் அம்மாணவிகள் சீக்கிய மதக் கோட்பாடுகளை புறக்கணித்துவிட்டனர் என்றும் அவர்களது மத நிறுவனம் நடத்தும் கல்லூரியில் முன்னுரிமை அளித்து சேர்த்துக்கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டது.

இச்சம்பவங்களையெல்லாம் பார்க்கும்போது பெண்களின் உடை எத்தகையது என்பதை ஆண்களும் (எம்மதத்தைச் சேர்ந்தவராயினும்) அரசும் (நீதித்துறை உட்பட) தான் முடிவு செய்கின்றன. குறிப்பிட்ட உடை மதம் சார்ந்த உரிமையா என்ற வாதத்திற்குள் செல்வது இம்மதங்களின் அடிப்படைவாதிகளுக்கு ஈடு கொடுக்குமேயொழிய, பிரச்சினையின் அடிப்படையைப் புரிந்துகொள்ள முடியாது. உடை சர்வாதிகாரத்தை உடைக்க வேண்டும் என்றால் அந்த உரிமையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஆண்களின் அதிகாரத்தைப் பறிப்பதே இறுதி முடிவாக இருக்கும்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தனை வரவேற்கப்போகும் ஆண்டாளும் "பலகலனும் யாம் அணிவோம் ஆடை உடுப்போம்' என்றுதான் பாடியிருக்கிறார்களேயொழிய, அந்த உடை அணியும் உரிமையை ஆண் உலகம் அளித்த[illegible] கூற வில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்!

# கடலடியில் உலகின் மிகப் பெரும் நீர்வீழ்ச்சி!



அறிவு

நீரானது காடு மேடுகளெல்லாம் கரைபுரண்டு ஓடி, மலை மேல்முகட்டிலிருந்து விழுந்து நீர்வீழ்ச்சிகளை உருவாக்குகின்றது. இத்தகைய நீர்வீழ்ச்சிகள் இயற்கை நமக்கு கொடுத்த கொடை. பார்த்தாலே பரவசம் அளிக்கும் இவை பல பரிமாணங்களில் நமக்கும், இந்த உலகிற்கும் உதவியாக இருக்கின்றன. இத்தகைய நீர்வீழ்ச்சிகள் அதன் உயரம், அகலம் மற்றும் நீரின் கொட்டும் அளவு ஆகியவற்றைப் பொறுத்து வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி என்னவென்று கேட்டால் வெனிசுலா நாட்டில் இருக்கும் ஏன்ஜெல் நீர்வீழ்ச்சியைத்தான் அனைவரும் கூறுவார்கள். சுமார் 3 ஆயிரத்து 212 அடி உயரத்திலிருந்து (979 மீட்டர்கள்) விழும் இது சுருண் நதியினால் (CHURUN RIVER) உருவாக்கப்படுகிறது.

இதேபோல் நீர் விழும் வேகத்தின் அடிப்படையில் (FLOW RATE) பார்த்தால் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியாக இன்கா நீர்வீழ்ச்சி (INGA FALLS) கருதப்படுகிறது. காங்கோ ஆற்றினால் உருவாக்கப்படும் இது ஒரு வினாடிக்கு 25 ஆயிரத்து 768 கனஅளவு நீரைக் கொட்டும் வல்லமை வாய்ந்தது.

இவையெல்லாம் நிலப்பரப்பில்தான் பெரியவை. ஆனால் இவைகளுக்கெல்லாம் ராஜாவாக, உலகின் மிகப்பெரிய மற்றும் பிரம்மாண்டமான நீர்வீழ்ச்சி ஒன்று சத்தமேயில்லாமல், நமது கண்களால் பார்க்க முடியாத இடத்தில் நீரை பாய்ச்சிக்கொண்டிருக்கிறது. எங்கு என்று கேட்கிறீர்களா? கடலுக்கடியில் தான்! இதுதான் உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி என்கிற உண்மையைச் சொன்னால் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

**கடலுக்கு கீழே பிரம்மாண்ட நீர்வீழ்ச்சி**

கடலுக்கடியில் இருக்கும் அனைத்துமே பிரம்மாண்டவைகள்தான். ஆழ் கடலில் இருக்கும் சிகரங்கள், பள்ளத்தாக்குகள், விலங்குகள் போன்ற அனைத்துமே பூமியின் நிலப்பரப்பில் இருப்பதை விட பல மடங்கு பெரியவை. இதே போல்தான் கடலுக்கடியில் இருக்கும் இந்த நீர்வீழ்ச்சியும் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவிற்கு பிரம்மாண்டமும், அதிக சக்தியும் வாய்ந்தது. அதுதான் டென்மார்க் நீரிணை நீர்வீழ்ச்சி. அதாவது ஆங்கிலத்தில் DENMARK STRAIT CATARACT என்று அழைக்கப்படுகிறது.

அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கிரீன்லாந்து மற்றும் ஐஸ்லாந்து ஆகிவற்றைப் பிரிக்கும் கடல் பகுதியான, டென்மார்க் நீரிணை அல்லது டென்மார்க் ஜலசந்தி என்ற இடத்தில் அமைந்துள்ளது இந்த பிரம்மாண்ட நீர்வீழ்ச்சி. சுமார் 11 ஆயிரத்து 500 அடி உயரத்திலிருந்து (கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 505 மீட்டர்கள்) விழும் இந்த நீர்வீழ்ச்சி, சுமார் 175 மில்லியன் கனஅடி நீரை ஒரு வினாடி நேரத்தில் செலுத்துகிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

**கடலில் நீர்வீழ்ச்சிகள் உருவாகும் விதம்**

பொதுவாக கடல்நீர் ஓரிடத்தில் நிலையாகத்தானே இருக்கிறது? அப்படி இருக்கையில் எப்படி இதுபோன்ற நீர்வீழ்ச்சிகள் கடலுக்கடியில் உண்டாகின்றன? என்று உங்களுக்குள் ஒரு கேள்வி எழலாம். இதற்கு மிக முக்கிய காரணமாக இருப்பது இரு வேறு வெப்பநிலைகளைக் கொண்ட கடல் நீரின் அடர்த்தி வேறுபாடுதான்.

உதாரணத்திற்கு சூடான மற்றும் குளிர்ச்சியான என இரு வேறு வெப்ப நிலைகளில் உள்ள நீரை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளை தனித்தனியே சாதாரண நீருடன் கலந்து விடுங்கள். இப்போது சூடான நீர் சாதாரண நீருக்கு மேலே மிதப்பதையும், குளிர்ந்த நீர் சாதாரண நீருக்கு கீழே மூழ்குவதையும் காணலாம்.

மேற்கண்ட நிகழ்விற்கு மிக முக்கிய காரணமாக இருப்பது குளிர்ந்த நீரானது, சூடான நீரை விட அதிக அடர்த்தியைக் கொண்டிருப்பதே ஆகும். அதாவது நீரினை சூடாக்கும்போது நீரின் மூலக்கூறுகளானவை வெப்பத்தால் உந்தப்பட்டு (ஆற்றல் பெற்று), வேகமாக விரிவடைகிறது. இதனால் நீரின் மூலக் கூறுகளுக்கு இடையேயான வெளி அதிகமாவதால், இந்த சூடான நீரின் அடர்த்தி குறைகிறது.

அதேபோல குளிர்விக்கும் நிகழ்வின் போது, நீரானது தனது ஆற்றலை இழந்து, நீர் மூலக்கூறுகளுக்கு இடையேயான வெளி குறைந்து, மிகக் குறுகிய இடத்தில் ஒன்றோடொன்று பிணைந்து விடுவதால் குளிர்ந்த நீரின் அடர்த்தி, சூடான நீரின் அடர்த்தியை விட அதிகமாக உள்ளது.

இதே நிகழ்வுதான் அன்றாடம் கடலிலும் நடக்கிறது. டென்மார்க் ஜலசந்தி கடல்பகுதியில் உள்ள மிகப்பெரிய பள்ளத்தாக்கில், கிரீன்லாந்தின் நார்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

சம்யுக்தா

# யாருக்காக இந்த ஒப்பந்தம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மனிதன் ஓர் அரசியல் பிராணி. உலகில் உள்ள அனைத்தும் அரசியலுக்குக் கீழ்ப்பட்டதே. மனிதனின் எத்தகைய நடவடிக்கையையும் நிர்ணயிப்பது அரசியலே. அரசியலதிகாரம் இல்லையென்றால், மனிதனுக்கு ஒன்றுமேயில்லை. பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கலை இலக்கியம், கலாசாரம் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் அரசியலால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவை அனைத்தும் அரசியலுக்குக் கீழ்ப்பட்டவையே. அரசியலதிகாரமற்ற ஒரு சமூகமாக இருப்போமாயின் இவைகள் அனைத்தும் எமக்கு அர்த்தமற்றவைகளாகும். இலங்கை மண்ணில் அரசியலில் எமது பங்கு மறுக்கப்பட்டது. எமக்கேற்ற தீர்மானத்தை எடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இன்று எம்முன் வைக்கப்பட்டுள்ள இந்த ஏமாற்றகரமான தீர்விலும் இதுவே உண்மை. அரசியலதிகாரமற்ற ஒரு பொம்மைத் தீர்வு எம்முன் முன்வைக்கப்பட்டுள்ளது. எமது விருப்பத்துக்கு மாறாகத் திணிக்கப்படுகின்றது.

மார்கழி 19 யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ள அதே தீர்வு, ஒரு சிறு மாற்றத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த மாற்றமாவது, "வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணையலாம்" என்பதுதான். ஆனால், மார்கழி 19 யோசனையில் சொல்லப்பட்ட அதே அதிகாரம்தான் இதற்குமுண்டு. வெளிவரும் அறிக்கைகளிலிருந்து அவ்வாறுதான் அறியமுடிகிறது. மார்கழி 19 யோசனை பற்றி ஆடி 19இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கிலே பேராசிரியர் க.சிவத்தம்பி "எமது போராட்டத்தின் தன்மை சர்வதேச ரீதியில் நியாய முக்கியத்துவம் பெற்று முகிழ்விடும் இக்காலகட்டத்தில், இப்படிப்பட்ட இடைக்காலத் தீர்வுகள் அபத்தமானவை" எனக் குறிப்பிட்டார். மேலும், "இவ்வளவு அழிவுகள், உயிர்ச்சேதங்கள், உடமை இழப்புகளின் பின்னரும் நிச்சயமற்ற தீர்வைவிட நாம் தொடர்ந்து அல்லல்படுவதே மேல். எமது துன்பத்தின் மூலமாக வேனும் எதிர்காலச் சந்ததியின் இன்பத்துக்கு வழிகோலலாம்" என்றும் கூறினார் (முரசொலி, 26.7.87).

இந்தக் கருத்தரங்கில் கலாநிதி க.சிற்றம்பலம் பேசுகையில், "திம்புப் பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட்ட தமிழர் தாயகம், தமிழர் தேசிய இனம், சுயநிர்ணய உரிமை என்பனவும் அங்கீகரிக்கப்பட வேண்டும். மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்கவேண்டும் (முரசொலி 23.7.87) என்ற கருத்தைக்கூறி, இதனடிப்படையில்தான் பேச்சுவார்த்தைக்குப் போகலாம், இதற்குக் குறைந்த தீர்வுக்கு நாம் பேச்சுவார்த்தைக்குப் போகக்கூடாது என வலியுறுத்தினார். மு.திருநாவுக்கரசு பேசுகையில் மார்கழி 19 யோசனையை நிராகரித்துவிட்டுப் பின்வருமாறு கூறினார்: "சில நியாயங்களைக்காட்டிப் போராட்டத்தை அழித்துவிடுவது சரியல்ல எமக்குள்ளே உள்ள சில முரண்பாடுகளுக்காகச் சரணாகதி அடையக்கூடாது. எமது தேசிய இனத்தின் சுயாதீனத்துக்கான வாய்ப்புகளை செயலுருப்படுத்த வேண்டும். அதற்காக, ஓர் அரசியல்தளம் வளரவேண்டும். அந்த அடித்தளத்தில் சரணாகதியற்ற ஓர் தீர்வுக்கே நாம் போகவேண்டும்"

இக்கருத்தரங்கில் உரையாற்றிய ஏனையவர்களான கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், கலாநிதி எஸ்.கிருஷ்ணராஜா, கலாநிதி வி.நித்தியானந்தன், திரு.எஸ்.சத்தியசீலன் ஆகியோர் இந்த மார்கழி 19 யோசனையில் உள்ள வெற்றுத் தன்மையை விளக்கிக் கூறினர். இவ்வாறு பல்கலைக்கழக அறிஞர்களால் நிராகரிக்கப்பட்ட இந்த மார்கழி 19 யோசனை ஏமாற்றகரமான ஒரு சிறிய சொல் மாற்றத்துடன் தற்போது தீர்வாக முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறிருக்கையில் ஜூலை, 1985இல் ஒரு சஞ்சிகையில் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் எழுதிய ஒரு கட்டுரையின்படி இலங்கையின் அரசியல் சூழலில் கூட்டாட்சி (சம்ஷ்டி) ஆட்சிமுறைகூடத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியாது. ஏனெனில் அரச இயந்திரமானது, சிங்கள, பௌத்த "பீரோகிரசி"யாக இருப்பதால் அது ஒருபோதும் இதை நிர்வாக ரீதியாக இதனை நடைமுறையில் செயற்படுத்தவிடாது. அவ்வாறாயின் எவ்வாறு இப்போது முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரமற்ற, குறைபாடுகளுடைய ஓர் அரைகுறைத் தீர்வு எமது பிரச்சினையைத் தீர்க்க முடியும்? இத்திட்டத்தை முன்வைத்ததற்கு ஓர் ஏமாற்றுத் தன்மையுண்டு, அதாவது தீர்வு என்ற விடயத்தில் இணைப்பு என்ற ஒரு சொல் முக்கிய

**சில நியாயங்களைக்காட்டிப் போராட்டத்தை அழித்துவிடுவது சரியல்ல எமக்குள்ளே உள்ள சில முரண்பாடுகளுக்காகச் சரணாகதி அடையக்கூடாது. எமது தேசிய இனத்தின் சுயாதீனத்துக்கான வாய்ப்புகளை செயலுருப்படுத்த வேண்டும். அதற்காக, ஓர் அரசியல்தளம் வளரவேண்டும்**

பிரச்சினையாக இடம்பெற்று வந்தது. எனவே ஜெ.ஆர். அந்த இணைப்பென்ற சொல்லைத் தற்காலிகமாக இணைத்துக்கொள்வதன் மூலம், தீர்வு என்ற விடயத்துக்கு இந்தியாவைச் சம்மதிக்க வைத்து அதன் மூலம் போராட்டத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் கைவிடப்பண்ணும் ஒரு சதித்திட்டத்தை வகுத்தார்.

இந்த இணைப்பு என்பது தற்காலிகமானது. தனக்குச் சாதகமான ஒரு சூழலைக் கிழக்கில் தோற்றுவித்து அங்கு இன முரண்பாடுகளை வளர வைத்து அதன் பின்பு கிழக்கில் மட்டும் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தி வடக்கில் இருந்து கிழக்கைப் பிரித்துவிடலாம் என்றும் இதன் மூலம் தமிழ் மக்களைக் கூறுபோட்டுவிடலாம் என்றும் ஜே.ஆர். நம்பினார். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்று சொல்லும்போது அவர்களுக்கு ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்புமுண்டு. ஆனால் இப்போது முன்வைக்கப்பட்ட தீர்வு அதை நிராகரித்துள்ளது. நாங்கள் ஒரு சிறுபான்மை இனம். மேலும் பல துண்டுகளாக நாம் பிரிந்து பலவீனப்படக்கூடிய திட்டங்களை அனுமதிக்கலாமா? முன்வைக்கப்பட்டுள்ள இத்தீர்வே அதிகாரமற்றதும் சூழ்ச்சித் தன்மை வாய்ந்ததுமாகும்.

(மிகுதி தொடரும்)

## கடலடியில்...

கடல்பகுதியிலிருந்து (NORDIC SEA) தெற்கு நோக்கி வரும் குளிர்ந்த நீரானது, இர்மின்கர் கடல் பகுதியிலிருந்து (IRMINGER SEA) வடக்கு நோக்கி வரும் சற்று வெப்பமான நீருடன் ஒன்று சேர்கிறது.

நான் முன்னர் கூறியவாறு குளிர்ந்த நீரானது, சூடான நீரைவிட அதிக அடர்த்தியைக் கொண்டிருப்பதால், இந்த குளிர்ந்த கடல் நீரானது சூடான கடல்நீரின் அடிப்பகுதியில் வேகமாக மூழ்குகிறது. இந்த நிகழ்வானது டென்மார்க்கின் ஆழ்கடல் பகுதியில் உள்ள மிகப்பெரிய செங்குத்தான பள்ளத்தாக்கில் நடைபெறுகிறது.

**கடல் மின்னோட்டம்-OCEAN CURRENT**

இவ்வாறு கடல் நீர் ஒன்றுடன் ஒன்று கலந்தவுடன் அது அப்படியே நிற்பதில்லை. அடியில் இருக்கும் குளிர்ந்த நீரானது கடலின் மேற்பரப்பில் உள்ள காற்று, ஈர்ப்பு விசை (கடல் அலைகள்) மற்றும் நீரின் உப்புத்தன்மையின் அடர்த்தி ஆகியவற்றால் மேற்பரப்பில் உள்ள நீரோடு சேர்த்து உந்தப்பட்டு, கடலில் ஒரு நீரோட்டத்தை உருவாக்குகிறது. இதை கடல் நீரோட்டம் (மின்னோட்டம்) அதாவது OCEAN CURRENT என்று அழைக்கின்றனர்.

**குளோபல் கன்வேயர் பெல்ட்-GLOBAL CONVEYOR BELT**

இந்த நீரோட்டத்தின் காரணமாக கடலின் மேற்பரப்பில் உள்ள சற்று வெப்பமான நீரானது புவியின் நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்து துருவப்பகுதியை நோக்கியும், கடலின் அடிப்பகுதியில் உள்ள குளிர்ந்த நீரானது துருவப்பகுதியிலிருந்து புவியின் நிலநடுக்கோட்டுப் பகுதியை நோக்கியும் செல்கிறது. இந்த நிகழ்வு உலகின் கடற்பரப்பு முழுவதும் ஒரு சுழற்சியை உருவாக்குகிறது. இதற்கு குளோபல் கன்வேயர் பெல்ட் (GLOBAL CONVEYER BELT) என்று பெயர்.

**டென்மார்க் நீரிணை நீர்வீழ்ச்சி உருவாவதற்குக் காரணம் இதுதான்**

இந்த (GLOBAL CONVEYER BELT) நிகழ்வுதான் இந்த மிகப்பெரிய நீர்வீழ்ச்சியை உருவாக்கக் காரணமாக அமைகிறது. அதாவது டென்மார்க் கடல்பகுதியில் உள்ள பள்ளத்தாக்கின் மேல் முகட்டில் தெற்கு நோக்கி வரும் குளிர்ந்த நீரானது, வடக்கு நோக்கி செல்லும் வெப்பமான நீரினை ஆக்கிரமித்து (அதிக அடர்த்தியின் காரணமாக) மேல்முகட்டிலிருந்து கீழ்நோக்கி செங்குத்தாக உந்தப்பட்டு இந்த நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. அது பற்றிய சில ஆச்சர்யமளிக்கும் சில தகவல்களை பார்க்கலாம்.

இந்த நீர்வீழ்ச்சியானது கடலின் மேற்பரப்பிலிருந்து (டென்மார்க்) 2 ஆயிரம் அடி ஆழத்தில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 3.5 கிலோ மீற்றருக்கும் அதிக தூரத்திற்கு பாயும் இது ஏன்ஜெல் நீர்வீழ்ச்சியைவிட 3 மடங்கு அதிக உயரம் கொண்டதாகும்.

மேலும் இதிலிருந்து ஒரு வினாடிக்கு வெளியேறும் நீரின் கொள்ளளவானது (175 மில்லியன் கனஅளவு/வினாடி), அதாவது பரந்து விரிந்து கொட்டும் 2 ஆயிரம் நயாகரா நீர்வீழ்ச்சிகளின் கொள்ளளவிற்கு சமமாகும்.

இவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி இங்கு இருந்தாலும், கடலின் மேற்பரப்பில் இருந்து பார்த்தால் அது இருப்பதற்கான எந்த அறிகுறியும் தெரிவதில்லை.

**உலகளாவிய வெப்பநிலையில் இந்த நீர்வீழ்ச்சிகளின் பங்கு**

இந்த கடல் நீரோட்டங்களானது பூமியின் இயற்கைச் சமநிலையை பாதுகாப்பதிலும், பல்வேறு புவியியல் நிலப்பரப்புக்களின் தட்பவெட்ப நிலையை நிர்ணயிப்பதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் தற்போது மாறிவரும் தட்பவெட்பநிலை காரணமாக கடல் நீரின் வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு, இது போன்ற கடல் நீர்வீழ்ச்சிகளின் வேகமானது மட்டுப்படுத்தப்படுகிறது.

இது உலகலாவிய தட்பவெட்ப நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமில்லாமல், ஆழ்கடல் பகுதியில் வாழும் பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்வாதாரத்தையும் கடுமையாக பாதிக்கின்றன. எனவே நாம் தான் இயற்கைக்கு எதிரான செயல்களை தவிர்த்துவிட்டு, இயற்கையை பாதுகாக்கும் செயல்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலனாரின் இல்லம்



வில்லா கேதர்

தமிழில்: இல. சுபத்ரா

(கடந்த வார தொடர்ச்சி...)

எப்போதுமே மோசமாக நடந்துகொள்வதாகத்தான் நினைக்கிறேன்.' முகத்தையும் கைகளையும் கைக்குட்டையால் பரிதாபமாகத் துடைத்துக்கொண்டவன், நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி எழுந்துகொண்டான். 'பாருங்கள்', தனது நடைத்தடியால் மண்ணில் கணித வடிவங்களை வரைந்தபடியே தொடர்ந்தான், 'என்னால் எதிலுமே நிலைத்திருக்க முடியவில்லை, நிம்மதியடைய முடியவில்லை. நான் ரொம்பவும் அலைக்கழிகிறேன். சில சமயங்களில், முக்கியமான இடங்கள் என்னைத் தம்மை நோக்கி இழுக்கின்றன - எங்களுக்கு முக்கியமாய் இருந்த இடங்கள்.'ஒரு நொடி அமைதியானவன், யோசித்தபடியே தொடர்ந்தான், 'அவள் இல்லாத அந்த இடத்திற்குச் செல்வதும் எனக்கு அவள் இருந்த இடத்திற்குச் சென்றது போலவேதான் இருக்கிறது. நான் அதனை அத்தனை ஆர்வமுடன் எதிர்நோக்குகிறேன், சென்றடைகிறேன்.'

ஹாரியட்டால் ஒட்டுமொத்தமாக அவனை அப்படி வெறுத்திட முடியவில்லை. ஏனென்றால் அவன் சொன்னது போல, அவளால் அதை உணர முடிந்தது. டாலியாக்களும் சூரியகாந்திகளும் தேனீக்களின் ரீங்காரமும் நிறைந்த அந்த அமைதியான வெளிச்சம் மிக்க தோட்டத்தில் அமர்ந்தபடி, அத்திப்பழங்களையும் ஆட்டுப்பாலையும் அருந்தி கொடி முந்திரிகள் சேகரிக்கப்படுவதைப் பார்த்து அவர்கள் வளர்ந்த இந்த மீன்பிடிக் கிராமம் பற்றி எலனார் சொன்னதை ஹாரியட் நினைவுகூர்ந்தாள். அவர்கள் அங்கிருந்து கிளம்ப வேண்டிய நேரம் வந்தபோது வண்டிக்குள் அமர்ந்து, பரந்த மத்தியத் தரைக் கடல் கரையோடிணைந்தபடி அழுதவாறே வந்தாள் . ஒருபோதும் வலியினாலோ சோர்வினாலோ அழுதிராத அவள் அப்போது அழுதாள் என அன்புடன் குறிப்பிட்டாள் ஹாரியட். அங்கிருந்து கிளம்புவதால், நீல விரிகுடாவையோ லாவண்டர் மலர்களையோ பைன் மலைகளையோ அவர்கள் பிரியவில்லை, இணைந்திருந்த அந்தத் தனிப்பட்ட தருணங்களையே அவர்கள் பிரிந்தனர். எப்போதுமே அவர்கள் அதை இழக்கத்தான் வேண்டியிருந்தது. ஒவ்வொரு புதிய நாளும், வானிலும் கடலிலும் இதயத்திலும் புதிய வண்ணங்களைக் கொணர்ந்தது என்றாலும், அவை ஒருபோதும் ஒன்றே போல் இருக்க முடிந்ததில்லை. நாளையும் இதே போல் அழகானதாகத்தான் இருக்கும் என்னும் உண்மை அவர்களை ஒருபோதும் திருப்திப்படுத்தியதில்லை. அவர்களுக்கு எல்லாமே வேண்டியிருந்தது. ஆமாம், என்னவாய் வேண்டுமானாலும் இருக்கட்டும், அந்த இருவரும் கம்பீரமும் உறுதியும் மிக்க ஒலிம்பியர்கள்.

பிற்பகலில் அவர்கள் வீட்டை நெருங்கியபோது ஃபோர்ஸைத் சட்டென ஹாரியட்டை நோக்கித் திரும்பினான். 'நான் இங்கே இல்லாத போது நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.'

'வேலை சார்ந்தா? ஓ, சரி, எனக்குப் புரிகிறது.'

'உங்களால் என்ன முடிகிறதோ நீங்கள் அதை அவளுக்குச் செய்வீர்கள், சரிதானே?' அவன் தயக்கத்துடன் கேட்டான். 'வாழ்க்கையே நரகமாய் இருக்கிறது அவளுக்கு. நான் அவளுக்குச் செய்ததை இல்லாமலாக்க ஏதேனும் வழி இருந்தால் நான் நிச்சயம் அதைச் செய்வேன், நிச்சயம்.'

ஒரு நொடி தாமதித்த ஹாரியட், 'ஆனால் இது இப்படியே தொடரவும் முடியாது, இல்லையா?'

'ஆமாம், ஆமாம், நான் அறிவேன்,' என்றான் ... அதுவல்ல பிரச்சினை. சில சமயங்களில், ...

எலனார் சொல்வதாக எனக்குத் தோன்றுகிறது; அதாவது அவளால் இனியும் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாதென்றும் அவளை இச்சூழலிருந்து விடுவிக்க அவள் வேண்டுகிறாள் என்றும் கூறுகிறாள்.' ஹாரியட் அவனது முகத்தைப் பார்க்க முயன்றாள். ஆனால் அவன் வேறுபுறம் திரும்பியிருந்தான்.

## 4

இரண்டு வாரங்கள் தாண்டியும் ஃபோர்ஸைத் திரும்பி வராமல் இருந்தான், அவன் எப்போது வரக்கூடும் என யாருக்குமே உறுதியான தகவல் வந்ததாகவும் தெரியவில்லை. இதற்கிடையே திருமதி. வெஸ்ட்ஃபீல்ட் அவனது மனைவியிடம் ஓரளவிற்கு நெருங்கியிருந்தாள். அவளுக்கு எந்த அளவிற்கு இதில் பொறுப்பிருக்கிறது என்பது பற்றியெல்லாம் தெரியவில்லை. வெஸ்ட்ஃபீல்டிடம் சொன்னது போல, அவளைத் தேடுவதும் உரையாடுவதும் எப்போதும் நிகழ்ந்துகொண்டிருந்தது. மறுபுற நிகழ்வுகளை முற்றிலும் மறைக்கிற உயரத்தைத் தோட்டத்துச் சுவர் கொண்டிருக்கவில்லை. சரளைக்கல் பாதையில் அப்பெண் தனது பயந்த மடிந்த அடிகளை எடுத்துவைத்து நடப்பதைப் பார்க்கும்போது, ஹாரியட்டிற்குள் பெரும் கோபம் எழுந்தது. தோட்டத்துத் தொப்பியின் கீழிருந்து அவளது ஆர்வமுள்ள விழிகள் எட்டி நோக்க, முள்ளில் கிழிந்த ஏழைப் பெண்ணொருத்தியின் ஆடை போல அவளது அபத்தமான பாவாடை அவள் பின்னே தரையில் இழுத்துக்கொண்டு சென்றது.

அவர்கள் இருவரும் இணைந்து தேநீர் பருகிய நீண்ட சோபையான பொழுதுகளில் அந்தப் பெண்ணுடைய நியாயமும் எதிர்பார்ப்பும் கொஞ்சம் கொஞ்சமாக ஹாரியட்டிற்குப் புரியத் தொடங்கியது. யாராலும் விளக்க முடியாத ஒரு இடத்தில் அவள் இருந்தாள். அவளுக்கான நியாயமானது ஹாரியட்டினை மேலும் சிரமப்படுத்துவதாக இருந்தது, ஏனென்றால் அவள் அதை முற்றிலும் மறுக்க விரும்பினாள். வாசித்தபடியும் நடந்தபடியும் பேசியபடியும் அவர்கள் இருந்தபோது தங்களுக்குள் அவர்கள் அனுமதிக்காத உரையாடல் ஒன்று அங்கே இருந்துகொண்டே இருந்தது. அது அந்தப் பெண்ணின் நீண்ட அமைதியான வேண்டுகோள்கள் நிறைந்த தோற்றத்தில் இருந்தது. பதற்றத்துடன் அவள் கோர்த்தும் விடுவித்தும் கொண்டிருந்த மெலிந்த கைகளில், இடைவிடாத அவளது நடையில் இருந்தது. அவள் எதையோ திட்டமிடுகிறாள், தினந்தோறும் அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறாள் எனத் தீர்க்கமாக உணர்ந்த ஹாரியட், அது எதுவானாலும் தான் அதற்குத் துணை நிற்கப் போவதில்லை என வெஸ்ட்ஃபீல்டிடம் தெரிவித்தாள்.

'அவன் இதை எப்படிச் செய்தான் என என்னால் மிகச்சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது.' தன் கணவனிடம் உறுதிப்படுத்தினாள் ஹாரியட்.

'எலனாரைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் அவன் இவளைத் திருமணம் செய்திருக்கிறான். இவர்களது உறவின் மையமாக எலனார்தான் இருந்திருக்கிறாள். மீதமிருக்கிற மொத்த உலகமும் அவனை அவன் பொறுப்பிலேயே விட்டுவிட்டு வேலைகளைப் பார்க்கச் சென்றுவிட, இப்பெண்தான் நின்று கருணை செய்து அவனது மனதைக் கொட்டச் செய்திருக்கிறாள். தன்னால் எல்லாக் கணவன்களையும் போல இருக்க முடியாதென்பதை உணராத அவன், தன்னால் எல்லோரையும் போல ஒரு மனைவியைக் கொள்ள முடியாதென்பதைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டான் என்று நான் நினைக்கிறேன். ஆறுதல்படுத்துவதிலேயே அவள் திருப்திகொண்டு விடுவாள் என அவன் நினைத்திருக்கிறான், காயத்தை ஆற்ற முற்படுவாள் என அவன் கனவிலும்கூட நினைக்கவில்லை.'

ஏதெல்லுக்கும் இதில் முழுப் பொறுப்பு இருக்கிறதென்பதே ஹாரியட்டின் வாதம். தியாக மனநிலையில் அவள் அதற்குள் தன்னை அனுமதித்துவிட்டாள், கற்பனாவாதத்தில் அவ்விடத்தில் தன்னை வைத்து விருப்புடன் இரசிக்க முடிந்த அவளால் நிஜ வாழ்வில் அதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒருவிதமான உணர்வெழுச்சியில் அவள் அவனைத் திருமணம் செய்துகொண்டுவிட்டாள். இப்போது தவிர்க்க முடியாமல் - தான் மட்டுமே அவனது ஒரே சிந்தையாக இருக்க வேண்டும் என விரும்புகிற ஓர் இடத்திற்கு வந்துவிட்டாள். அவள் அவனுக்கு என்னவாக இருக்கிறாள் அல்லது இல்லாமல் இருக்கிறாள் என்பதெல்லாம் பகடை உருட்டலின் முடிவினை ஒத்திருந்தது, அது நடுங்கும் பிணைக்கைதிகளின், காட்டுமிராண்டித்தனத்தின் சாயல் கொண்டிருந்தது. மேலும் தன்னை இந்த எல்லை வரை அனுமதித்துக்கொண்ட, ஆனால் இன்னும் குறிப்பிடத்தக்க எந்த இடத்தையும் அடையாத ஒரு பெண்ணிடமிருந்து எதை வேண்டுமானாலும் எதிர்பார்க்கலாம் என்பதையும் ஹாரியட் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

'அவள் கண்டிப்பாக எதையோ செய்யவிருக்கிறாள்,' என ஹாரியட் அறிவித்தாள். 'ஆனால் இப்போது அவளால் என்ன செய்ய முடியும்? அவளிடம் என்ன ஆயுதம் எஞ்சி இருக்கிறது? தன்னை இவ்வளவு சிதறிக்கொண்ட பிறகு, எப்படி அவள் தன்னை ஒருங்கிணைத்துக்கொள்ளப் போகிறாள்? அவள் என்ன செய்வாள் என்பதுதான் திகிலாக இருக்கிறது. அது நிச்சயம் பலனில்லாமல்தான் போகப்போகிறது, போலவே அது ... நாடகீயமான தருணங்களைக் கொண்டிருக்கப் போகிறது.'

...றாலும், ஒரு நாள் காலையில் அவள் நேரிட்ட பிரச்சினையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமும் எதிர்நோக்கியிருக்கவில்லை. வெளிறிய கோபம் நிறைந்த முகத்துடன், உறக்கத்தில் நடப்பதைப் போன்று ஏதெல் அவளது தோட்டத்தில் நுழைந்து மறுநாள் ஃபார்சூனிற்குத் தன்னுடன் வரமுடியுமா எனக் கோரியபோது ஹாரியட் அதிர்ந்து திகைத்து அமர்ந்துவிட்டாள்.

'ஆனால், என் இனிய பெண்ணே, நீ அங்கே தனியே போய்த்தான் ஆகவேண்டுமா?'

'ஹரால்ட் இல்லாமல் என்று கேட்கிறீர்களா?' சப்தமேயின்றி கேட்டாள் ஏதெல். 'ஆமாம். நான் போய்த்தான் ஆகவேண்டும் என நினைக்கிறேன். அங்கே போவதற்கு அவன் மிகவும் அஞ்சுகிறான். என்றாலும் அவனது விஷயங்களுக்குச் சென்று சேராமல் அவன் திருப்தியடைய மாட்டான் என நினைக்கிறேன். அந்த அதிர்ச்சியை எதிர்கொண்டு அதிலிருந்து மீறிவிட்டால் அவன் மகிழ்ச்சியாகி விடுவான். நான் அங்கே முதலில் செல்வது அவனுக்கு அதைச் சுலபமாக்கித் தரும்.'

ஹாரியட் வெறித்தாள். 'இதை அவன்தான் முடிவு செய்ய வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா? அந்த இடத்தை முடிந்த அளவு மறக்க வேண்டும் என்றுகூட அவன் விரும்பலாம்.'

'அவன் மறப்பதில்லை,' சட்டென பதிலளித்தாள் ஏதெல். 'அவன் எப்போதும் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறான். அங்கே அவன் வாழ்ந்துதான் ஆக வேண்டும். அதுதான் அவனுடைய வீடு.' ஒரு சீறலான சிறிய தேம்பலுடன் தொடர்ந்தாள், 'அவனை அங்கிருந்து விலக்கி வைக்கக்கூடாது.'

'இது சார்ந்து அவனோ அல்லது வேறு யாருமோ எதுவும் செய்ய முடியும் என எனக்குத் தோன்றவில்லை.' வறட்சியாகப் பதிலளித்தாள் ஹாரியட்.

''அவன் அங்கு வாழ வேண்டும்.' ஏதெல் தன்னியல்பாகப் பதிலளித்தாள், 'நான் முதலில் அங்கே செல்வது அவனுக்கு அதைச் சுலபமாக்கித் தரும்.''

'எப்படி?' திருமதி. வெஸ்ட்ஃபீல்ட் திணறினாள்.

'எப்படியாவது.' கைக்குட்டையை விரல்களைச் சுற்றி திருகியபடி குழந்தையைப் போல் பதிலளித்தாள். 'நாம் காலை ரயிலில் ஏறினால் பிற்பகலில் அங்கே சென்றுவிடலாம். நிலையத்திலிருந்து அது அருகில்தான் இருக்கிறது, எனக்குத் தெரியும்.' ஹாரியட்டைக் கெஞ்சுவது போல் பார்த்தாள். 'நீங்கள் என்னுடன் வந்தால் அது அவனுக்கு இன்னும் அதிக இஷ்டமாயிருக்கும் என்பது உறுதி.'

ஹாரியட் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டவாறே தரையில் கூர்மையாக நோக்கினாள். 'இதில் நான் எப்படி உதவ முடியும் என நிஜமாகவே எனக்குத் தெரியவில்லை ஏதெல். அது சரியான தாகவும் எனக்குப் படவில்லை.'

ஏதெல் நிமிர்ந்து அசையாமல் அமர்ந்தாள். நீர் நிறைந்த அவளது கண்கள் நிறைந்து தளும்பி கன்னத்தில் கண்ணீர் மெதுவாக இறங்கியது. 'இது தவறாக உங்களுக்குப் படுவது குறித்து மன்னியுங்கள். அப்படித் தோன்றும்போது நீங்கள் நிச்சயமாக வரமுடியாது. என்றால், நாளை நான் தனியாகச் சென்றுகொள்கிறேன்.' எழுந்துகொண்டவள், நிச்சயமற்ற மனநிலையால், நாற்காலியின் பின்பகுதியைப் பற்றியவாறு உறுதியாக நின்றாள்.

ஹாரியட் வேகமாக அவளை நோக்கி நகர்ந்தாள். அப்பெண்ணின் வேட்கைமிகு பிடிவாதத்தில் ஒரு சக்தி இருந்தது.

'ஆனால், என் அன்பிற்குரிய குழந்தையே, நான் உடன் வரவேண்டும் என ஏன் விரும்புகிறாய்? அதனால் என்ன நன்மை நடந்தேறும்?'

நடுங்கியும் கண்ணீர்விட்டபடியும் இருந்த அவளிடம் ஒரு நீண்ட அமைதியே நிலவியது. இறுதியாக ஏதெல் முணுமுணுத்தாள். 'நீங்கள் அவர்களது தோழி என்பதால் அவ்வாறு நினைத்தேன். நீங்கள் என்னுடன் இருந்தால், அது சற்று பிரச்சினையற்றதாகத் தெரியும்.' திடும்மெனத் தோன்றிய ஓர் உணர்வுத் திருகலில் அவளது தோள்கள் குலுங்கின, தனது கரங்களால் முகத்தின் மீது அழுத்தினாள். 'பாருங்கள்,' அவள் தடுமாறினாள், 'நான் ரொம்பவும் தோற்றிருக்கிறேன். எனக்கு - யாருமே இல்லை.'

தொய்வடையும் அவளது மெல்லிய உடலில் உறுதியாகத் தன் கரங்களைச் சேர்த்த ஹாரியட், 'சரி, குறைந்தபட்சம் உன்னுடைய இந்த முயற்சிக்கு நான் துணை நிற்கிறேன். என்ன பலன் கிடைக்கும் எனத் தெரியவில்லை, என்றாலும் நான் வர ஒப்புக்கொள்கிறேன். நீ தனியாகச் செல்வதைவிட நான் உடன் வருவதையே நான் விரும்புகிறேன். ராபர்ட்டிடம் சொல்லி நமக்கு ரயில் சார்ந்த ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்.'

அதீத சோர்வை வெளிப்படுத்துகிற தொனியுடன் அவள் தன்னை விடுவித்துக்கொண்டாள். 'நாங்கள் இங்கே இருப்பது உங்களுக்குச் சிரமம் தான். நாங்கள் இங்கே வந்திருக்கவே கூடாது. உங்களிடம் நான் இவ்வளவு உரிமையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. உங்களை உடன் அழைத்துச் செல்லும் முன்பாக, நான் ஏன் ஃபார்சூனிற்குச் செல்கிறேன் என்கிற உண்மையான காரணத்தை உங்களுக்குச் சொல்லிவிட வேண்டும்.'

'உண்மையான காரணமா?' திருப்பிக் கேட்டாள் ஹாரியட்.


'ஆமாம். அவன் இப்போது அங்குதான் இருக்கிறான் என நான் நினைக்கிறேன்.'

'ஹரால்டா? ஃபார்சூனிலா?'

'ஆமாம். ஐந்து நாட்களாக அவன் என்னிடம் தொடர்புகொள்ளவேயில்லை. முன்பு போண்டாய்லிலிருந்து ஒரு தந்தி மட்டுமே வந்தது. அது ஃபார்சூனிற்கு வெகு அருகில்தான் இருக்கிறது. அதன்பிறகு அவனிடமிருந்து ஒரு வார்த்தையும் இல்லை.'

'ஐயோ குழந்தையே, எவ்வளவு பயங்கரமானது! இங்கே வந்து என்னிடம் அதைப் பற்றிச் சொல்.' ஹாரியட் அவளை ஒரு நாற்காலிக்கு இழுக்கவும் அவள் அப்படியே அதில் சரிந்தாள்.

'நான் என்ன நினைத்து பயப்படுகிறேன் என்பதைத் தவிர சொல்வதற்கு ஒன்றுமில்லை. தூக்கத்தை இழந்து எல்லா வகையான பயங்கரங்களையும் கற்பனை செய்துகொண்டிருக்கிறேன். எல்லா நினைவுகளுடனும் நாட்கணக்கில் அவன் அங்கே தனியாக அடைந்து கிடந்தால் அவனுக்கு என்ன வாகியிருக்கும் என்று யார் அறிவார்கள்? அவன் யாருடனாவது இருந்தால் எனக்கு இப்படியெல்லாம் தோன்றியிருக்காது. ஆனால் இப்போது -நீங்கள் அனைவரும் எனக்கு எதிராக இருக்கிறீர்கள்! உங்கள் யாருக்குமே இது புரியவில்லை. நான்



**மலையேறும் பாதையில் பாதித் தொலைவில், கீழிருக்கும் நதியின் பச்சை வளைவுகளைப் பார்த்தபடி பசுமைவெளிக்கிடையே பார்ச்சூன் நின்றுகொண்டிருந்தது.**

அவனை அலைக்கழியச் செய்வதாக நீங்கள் நினைக்கிறீர்கள். (முதல்முறை அவளது குரல் இகழ்ச்சியின் உணர்ச்சியைச் சூடிக்கொண்டது). ஆனால் அவனைக் காப்பதற்கு வேறு வழியில்லை. அது அவனை அப்படியே கொன்று கொண்டிருக்கிறது. லண்டனிலிருந்த போது ஒரு முறையும், இந்தியாவை விட்டுக் கிளம்புவதற்கு முன்பு ஒருமுறையும் என இரண்டுமுறை மிக மோசமாக நோய்வாய்ப்பட்டான். இந்த மனநிலையிலிருந்து அவனை வெளிக்கொணராவிட்டால் அவன் எந்த நிலைக்கும் செல்லக்கூடும் என லண்டன் மருத்துவர் சொன்னார். அவர்கள் என்னை அவனைவிட்டு நீங்கக்கூடச் சொன்னார்கள். பாருங்கள், நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.'

ஹாரியட் அவளுக்கருகில் இருந்த ஒரு ஸ்டூலில் அமர்ந்து அவளது கைகளை எடுத்துக்கொண்டாள்.

'என்றால், நீ ஏன் அவனைவிட்டுப் போய்விடக் கூடாது இனியவளே?'

தோட்டத்துச் சுவரை வெறித்தாள் அப்பெண். 'என்னால் முடியாது - இப்போது முடியாது. முன்பு ஒருவேளை நான் அப்படி விலகியிருக்கலாம்.' வெடிக்கிற அழுகையுடன், 'ஐயோ! அதைப் பற்றிப் பேசாதீர்கள். முடிந்தால், அவனைக் காப்பதற்கு எனக்கு உதவுங்கள்.'

'நான் வேண்டுமானால் தனியாக ஃபார்ச்சூனிற்குச் செல்லட்டுமா ஏதெல்?' நம்பிக்கையுடன் வினவினாள் ஹாரியட்.

அப்பெண் தலையசைத்தாள். 'இல்லை. நான்தான் உங்களை அனுப்பினேன் என அவன் தெரிந்துகொள்வான். நான் அஞ்சுவதாக நினைப்பான். நான் அஞ்சுகிறேன்தான், ஆனால் அவன் நினைப்பது போல் அல்ல. நான் எதிலுமே அவனுக்கு இடைஞ்சல் செய்ததில்லை. ஆனால் இதை இப்படியே விடவும் முடியாது. நான் போவேன், அவன் முடிவு மட்டும் செய்ய வேண்டும்.'

ஏதெல்லைப் பத்திரமாக அவளது வீட்டிற்கு அனுப்பிய பிறகு, நூலகத்தில் வேலையாய் இருந்த கணவனிடம் திரும்பிய ஹாரியட் தான் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பைப் பற்றிக் கூறினாள். இத்திட்டத்தை அவர் அழுத்தமாக எதிர்த்தார். அயர்ச்சியும் குழப்பமும் தருவதாய் இருக்கிற ஃபோர்ஸைதின் பிரச்சினைகளுக்குள் அவள் மேலும் மேலும் தலையிடுவதையும் அவர் விரும்பவில்லை. பக்கத்து வீட்டின் பைத்தியக்காரத்தனங்களிலிருந்து தப்பித்து கோடைகாலத்தை ஸ்விட்சர்லாந்தில் கழிப்பதுதான் அவரது இப்போதைய உச்சபட்ச விருப்பம் என்றும் வெளிப்படையாக அறிவித்தார்.

''ஃபார்சூனிற்குச் செல்ல வேண்டும் என்கிற எண்ணத்தால் அவள் தீவிரமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறாள்,' என விளக்கினாள் ஹாரியட். 'இதுவரை தான் அனுமதிக்கப்படாமல் இருந்த ஒரு வெளிக்குள் நுழைவதற்கான வாய்ப்பாக அதை அவள் ஏனோ கருதுகிறாள். நான் அந்தச் சிறிய முயற்சியில் அவளுக்கு எதிராக இருப்பதாகக் காட்டிக்கொள்ள முடியாது. எனவே நான் அவளுக்கு வாக்களித்துவிட்டேன். அத்தோடு, எலனாரது பொருட்கள் அனைத்தும் இருக்கிற அந்த இடத்திற்கு அவள் போகிறாளென்றால்..'

'அப்படியாயின், அவளை வெளியே நிறுத்துவதற்காகத்தான் நீ போகிறாய். உள்ளே அனுமதிப்பதற்காக அல்ல.' வெஸ்ட்ஃபீல்ட் ஊகமாய் வெளிப்படுத்தினார்.

'எனக்கு அது தெரியவில்லை, அதை உங்களிடம் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் இருவருக்காகவும்தான் அங்கே செல்கிறேன் - அவளுக்காகவும் எலனாருக்காகவும்.'

## 5

மலையேறும் பாதையில் பாதித் தொலைவில், கீழிருக்கும் நதியின் பச்சை வளைவுகளைப் பார்த்தபடி பசுமைவெளிக்கிடையே பார்ச்சூன் நின்றுகொண்டிருந்தது. அதை நெருங்கும்போது, இங்கே வந்து கண்களுக்கு ஓய்வுகொடுப்பது எவ்வளவு நன்றாய் இருக்கும் என எலனார் சொன்னதை ஹாரியட் நினைவுகூர்ந்தாள். வேறெங்குமே வானம் இவ்வளவு சாம்பல் நிறமாய் இல்லை, நதிகள் இத்தனை தெளிவாய் இல்லை, சமவெளிகள் வனத்துடன் இவ்வளவு அழகாய்ப் பிணைந்திருக்கவும் இல்லை. அந்த வீடு இருந்த மலைக்குக் கீழே ஒரு தீவு இருந்தது. அதில் வைக்கோல் தயாரிப்பவர்கள் ஏதோவொரு பயிரின் நீண்ட கதிர்களூடாக தங்களது அரிவாளை அசைத்தபடி அதன் இரண்டாம் விளைச்சலை அறுவடை செய்துகொண்டிருந்தனர். கண்ணாடி போன்ற நதியைக் கடக்கும்பொருட்டு பெரிய மரப்படகுகளில் ஏறுவதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

வண்டியைச் சாலையிலேயே நிறுத்தச் சொல்லுமாறு ஏதெல் வேண்டியதால், இரண்டு பெண்களும் இறங்கி லிண்டன் மரங்களுக்குக் கீழோடிய சிறிய பாதையில் நடந்துசென்றனர். புதர்களை வெட்டிக் கொண்டிருந்த ஒரு வயதான மனிதர் இவர்களை ஆர்வமுடன் கவனித்தார். அவர் வெட்டுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையையும் தீவிலிருந்து அரிதாக வந்த குரலோசைகளையும் தவிர்த்து அங்கே வெளிறிய வெளிச்சமான அமைதியே நிலவியது. இவர்களது வருகை அதை உடைப்பதற்கான எத்தனங்களற்ற தயக்கத்துடன் இருப்பதை ஹாரியட் கவனித்தாள். சோர்வினால் ஏற்பட்ட எரிச்சலுடன் அவள் ஏதெல்லைப் பார்த்தபோது, அவளது மென்மையான வலுக்கட்டாயமான நடையில் ஏதோ நேர்மறையான இரகசியத்தன்மை இருப்பதாகத் தோன்றியது.

முன்கதவு திறந்திருந்தது. ஆனால் அவர்கள் அதை நெருங்கும்போது தோட்டத்தின் பின்புறத்திலிருந்து கூன்விழுந்த முதியவள் ஒருத்தி அவர்களை அழைத்தபடி ஓடிவந்தாள். அவளது மேலங்கி முழுக்கக் காய்கள் நிறைந்திருந்தன. ஏதெல் பதற்றமின்றி அவளை எதிர்கொண்டு பதிலளித்தாள். 'நான்தான் திருமதி ஃபோர்ஸைத். அவர் எனக்காகக் காத்திருக்கிறார். அவருக்கு உடல்நலமில்லை என்பதை நான் அறிவேன். நீங்கள் எங்களது வருகையை அவருக்குத் தெரிவிக்கத் தேவையில்லை."

வணக்கங்களாலும் கேள்விகளாலும் தன்னை நிதானப்படுத்திக்கொண்ட அம்முதியவள் ஏன் முன்னரே தெரிவிக்கவில்லை என்று கேட்டுக்கொண்டாள். உடனே அம்மையாருக்கும் அவரது தோழிக்கும் அறைகளைத் தயார்செய்து விடுவதாகத் தெரிவித்தாள்.

ஆனால் ஏதெல் அவளைக் கடந்து வாயிலிலும் படிகளிலும் மிதப்பது போல் சென்றாள், ஹாரியட் அவளைத் தடுக்க முயன்றபடியே பின்தொடர்ந்தாள். அவர்கள் வரவேற்பறையையும் நூலகத்தையும் கடந்து, ஹரால்டின் படிப்பறைக்குள் நுழைந்து, முன்னர் எலனாரது அறையாக இருந்த அறைக்குள் நேராக நுழைந்தனர்.

'தயவுசெய்து நாம் இங்கே அவனுக்காகக் காத்திருக்கலாம் ஏதெல்,' ஹாரியட் கிசுகிசுத்தாள். 'யாரையும் இப்படிச் சென்று தொந்தரவு செய்வதற்கு நமக்கு உரிமை இல்லை.'

ஆனால் ஏதெல் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவள் போல் இருந்தாள். படிப்பறையிலிருந்து எலனாரது உள்ளறைக்குச் செல்லும் கதவில், ஒரு கனமான திரை தொங்கிக்கொண்டிருந்தது. அவள் அதை உயர்த்தியதும் அவர்கள் அங்கேயே அமைதியாக நின்றனர். ஹாரியட்டின் நினைவில் இருந்தது போலவேதான் அது காட்சியளித்தது. அழகிய திரைச்சீலைகள், இறைவழிபாட்டு மேசை, லூயி சீஸ் கால மரச்சாமான்கள் - கொஞ்சமும் மாறாமல் இருந்தன. ஹரால்டின் புகைப்படம் இருந்த இடத்தில் கான்ஸ்டண்டால் வரையப்பட்ட எலனாரின் ஓவியம் மாட்டப்பட்டிருந்தது மட்டுமே ஒரே ஒரு மாறுதல். படுக்கையில் கால்பகுதிக்குக் குறுக்காக டென்னிஸ் கால்சட்டை, சட்டை அணிந்தபடி ஹரால்ட் படுத்திருந்தான். கதவைப் பார்த்தவாறு ஒருக்களித்துப் படுத்திருந்த அவனது கரம் தலையின் மேல் கிடந்தது. கவனமாக இருந்து பழகியதாலோ என்னவோ அவர்கள் அவன்மேல் பார்வையைச் செலுத்தியதும், விழித்துக்கொண்ட ஹரால்ட் அதிர்ந்து தடுமாறியபடி எழுந்துகொண்டான்.

'ஏதெல், என்ன நடந்ததென்று நீ இப்படி..?' கோபமாகக் கத்தினான் அவன்.

அவள் இப்போது போதுமான அளவு பயந்துவிட்டாள். தலை முதல் பாதம் வரை நடுங்கியவள், கரங்களை மார்போடு சேர்த்து இறுக்கமாக அழுத்திக்கொண்டாள். 'வரக்கூடாது என்று நீ என்னிடம் ஒருபோதும் சொல்லவில்லை.' மூச்சுவாங்கியபடி, 'உங்களால் வரமுடியாதென்று மட்டும்தான் சொன்னீர்கள்' என்றாள் சீற்றமான எதிர்ப்புடன்.

படுக்கையின் கால்களை இரு கைகளாலும் இறுக்கமாகப் பற்றிக்கொண்ட ஹரால்டின் குரல் கோபத்தில் நடுங்கியது. 'தயவுசெய்து கீழே சென்று வரவேற்பறையில் காத்திரு. நான் திருமதி. வெஸ்ட் ஃபீல்டின் உதவியுடன் என்னைத் தெளிவுபடுத்திக்கொள்கிறேன்.'

இன்னொரு அடி உள்ளே எடுத்து வைத்து வாயில்திரையை தனக்குப் பின்புறம் விழவிட்ட ஏதெல்லின் கண்களில் ஏதோ பாய்ந்தது. 'நீ என்னுடன் வரும்வரை நான் போகமாட்டேன் ஹரால்ட்.' வலுவற்ற தோள்களை உயர்த்திக்கொண்டவள், தன்னைச் சுற்றிலுமிருந்த அறையை, தன் கணவனை, ஹாரியட்டை, இறுதியாக- சித்திரத்தில் ஒளிர்ந்த அவளது வெறுப்புமிக்க முகத்தைப்

**எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது அன்பே. வயதாவதை உணரத் தொடங்கிவிட்டேன் நான். இன்னும் இளமையைத் தக்கவைத்துக்கொள்ளும் தெம்பு கொஞ்சமும் எனக்கில்லை.**

பரிதவிப்புடன் பார்த்தாள். 'இப்படி இரகசியமாக இங்கே வருவதற்கு உனக்கு உரிமையில்லை.' என்று வெடித்தாள். 'அது எலனாருக்கும் அசிங்கம், எனக்கும் அசிங்கம். எனக்கு அவள் குறித்து எந்த அச்சமுமில்லை. நீ எனக்குச் செய்வதையெல்லாம் கண்டு அவள் உன்னை வெறுக்கத்தான் செய்வாள். நீங்கள் எல்லோரும் கட்டமைப்பது போல அவள் ஒன்றும் அத்தனை மோசமானவளாய் இருந்திருக்க மாட்டாள் - ரொம்பவும் பொறாமை!'

இறுக்கிய கைகளுடன் பரபரத்துத் திரும்பிய ஹரால்ட் தலையை நிமிர்த்தி ஓவியத்தைப் பார்த்தான்.

'பொறாமையா? யார் மீது - கடவுளே!'

'ஹரால்ட்!' எனக் கனிவுடன் அழைத்தாள் திருமதி. வெஸ்ட்ஃபீல்ட்.

ஆனால் அவள் தாமதித்துவிட்டிருந்தாள். வெட்டப்பட்டுவிட்டது போல அப்பெண் தரையில் சரிந்திருந்தாள்.

## 6

ஃபார்ச்சூனிற்குச் சென்றுவந்த நான்கு வாரங்களுக்குப் பிறகான ஒரு மழை இரவில், ஃபோர்ஸைத் கையில் தொப்பியுடன் அவளுக்கு நல்லிரவு தெரிவித்து விடைபெற்றான். ஹாரியட் சோர்வாகவும் துயருடனும் காணப்பட்டாலும் ஃபோர்ஸைத் அமைதியாகக் காணப்பட்டான்.

"ஃபார்ச்சூனில் எனக்கு நீ ஒரு வாய்ப்பு தந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி ஹரால்ட். அது வேற்றார் கைக்குச் செல்வதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. அது எப்படி இருந்ததோ அப்படியே நான் பராமரிப்பேன். நீ அதை உறுதியாக நம்பலாம். எப்போது நீ அங்கே வர விரும்பினாலும்..."

ஃபோர்ஸைத் அவசரமாக இடைமறித்துப் பேசினான். 'நான் அங்கே திரும்ப வருவேனென்று எனக்குத் தோன்றவில்லை திருமதி வெஸ்ட்ஃபீல்ட். ஏதாவது மாற்றங்கள் செய்ய விரும்பினால் நீங்கள் தயங்காமல் செய்யலாம். ஏற்கனவே நான் உங்களிடம் சொல்ல முயன்றது போல, இனி அது எனக்குத் தேவைப்படாதென்றுதான் நினைக்கிறேன். என்னிடம் எவ்வளவு வரமுடியுமோ அவ்வளவு அவள் என்னுள் வந்துவிட்டாள்.'

'இன்னொரு ஆளின் மூலமாக?'

இலேசாகச் சிரித்தபடி தலையை ஆட்டினான் ஹரால்ட், 'இன்னொரு வழியாக. அவள் வாழ்ந்து மறைந்துவிட்டாள் ஹாரியட். நான் இங்கிருப்பதெல்லாம் அவளை வெளிப்படுத்துவதற்காகத்தான். அதுவே அதீத பரிதாபத்திற்குரியதுதான் என்றாலும் என்னால் என்ன செய்ய முடியுமோ அதை நான் செய்ய வேண்டும். நிச்சயிக்கப்பட்ட காலத்தைத் தாண்டியும் நான் வாழ நேரிடலாம் - ஆனால் அவள் எப்போதும் பெருந்தன்மையுடையவளாய் இருந்தாள்.'

திருமதி வெஸ்ட்ஃபீல்டை நோக்கி கரங்களை நீட்டியவன், அவனைத் தக்கவைக்க முயல்வது போல அவள் தயங்கியதை மீறி, அவளது கரங்களை எடுத்துப் பற்றிக்கொண்டான்.

'நாளை காலை நீங்கள் கிளம்புவதற்கு முன் நான் ஏதெல்லை வந்து பார்க்கிறேன் என்று சொல். அவளது செய்திக்கு நன்றி கூறினேன் என்றும் சொல்.' முணுமுணுத்தாள் ஹாரியட்.

'தயவுசெய்து வாருங்கள். நான் இருந்தபோதும் கூட, கிளம்புவதற்காக எல்லாவற்றையும் அவளே தயார்படுத்தியதால் சோர்வாகிவிட்டாள். அவளை நான் மீண்டும் சர்ரேக்கு அழைத்துச் சென்றவுடன் அவள் பழையபடி ஆகிவிடுவாள். அமெரிக்காவிற்குச் செல்வதில் அவள் ஆர்வமாய் இருக்கிறாள். நல்லிரவு, அன்பிற்குரியவரே' எனக் கூறியவாறே வராண்டாவைக் கடந்து விடைபெற்றவன், சரளைப் பாதையினைக் கடந்துசென்று கதவினை மூடினான். வரவேற்பறையை மெதுவாகக் கடந்த ஹாரியட், கணவனது படிப்பறைக்குச் சென்று விறகடுப்பிற்கருகில் அமைதியாக அமர்ந்துகொண்டாள்.

வேலையிலிருந்து எழுந்துகொண்ட வெஸ்ட்ஃபீல்ட் அவளை அக்கறையுடன் பார்த்தார்.

'அந்தப் பைத்தியக்காரனை நீ ஏன் முன்னரே வீட்டிற்கு அனுப்பவில்லை ஹாரியட்? நேரம் நள்ளிரவையும் கடந்துவிட்டது, நீயும் மிகவும் சோர்வாகி விட்டாய். உன்னைப் பார்த்தால் பேய் போல் இருக்கிறது.' ஒரு இழுப்பறையைத் திறந்தவர் அவளுக்கு ஒரு கோப்பை வைன் ஊற்றித்தந்தார்.

'எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது அன்பே. வயதாவதை உணரத் தொடங்கிவிட்டேன் நான். இன்னும் இளமையைத் தக்கவைத்துக்கொள்ளும் தெம்பு கொஞ்சமும் எனக்கில்லை. நான் ஃபார்ச்சூனை விலைக்கு வாங்கி அங்கே என்னை ஒப்படைக்கப் போகிறேன். கடந்தும் மறந்தும்விட்ட இனிமையான நினைவுகளுக்கிடையே நான் மகிழ்ச்சியாக முதுமை அடைவேன்.'

அவளது நாற்காலியின் கரத்தில் அமர்ந்துகொண்ட வெஸ்ட்ஃபீல்ட் அவளது தலையைத் தன்னோடு சேர்த்துக்கொண்டார். 'நிஜமாகவே அவன் அதை விற்கப்போகிறானா? அவன் போதுமான அளவு மீண்டுவிட்டான், இல்லையா?

'ம், அவன் என்னுள்ளிருக்கும் இதயத்தை உருகச் செய்கிறான். அவன் என்னை ரொம்பவும் வயதானவளாகவும் தனிமையாகவும் உணரச் செய்கிறான்; நானும் அவனும் ஏதோ வேறொரு காலத்தின் எச்சங்கள் என்பது போல - கடந்துவிட்ட இனிமையான காலத்தினுடையவர்கள் போல. அவன் எல்லாவற்றையும் விட்டு நீங்குகிறான். அவளது குழந்தை பிறந்ததும் அவன் அவளை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லவிருக்கிறான்.'

'அவளது குழந்தையா?'

'ஆமாம். ஃபார்ச்சூனில் நிகழ்ந்த அந்தப் பயங்கரமான நாளிற்கு முன்புவரை அவன் அதை அறிந்திருக்கவில்லை. அவள் யாரிடமும் அது குறித்துச் சொல்லியிருக்கவில்லை. இது அவனை மிகவும் மகிழ்ச்சிப்படுத்துவதாகச் சொல்கிறான் - எல்லாவற்றையும் ஈடுகட்டிவிடும் என்கிறான். ஐயோ, ராபர்ட்! எலனார் மட்டும் அவனுக்குக் குழந்தைகளை விட்டுச் சென்றிருந்தால், இது எதுவுமே நிகழ்ந்திருக்காது.'

ஒரு நீண்ட மௌனத்திற்குப் பிறகு, 'அவன் மகிழ்ச்சியாய் இருக்கிறான் என்று நீ நினைக்கிறாயா?' என வினவினார் வெஸ்ட்ஃபீல்ட்.

'எனக்குத் தெரியும். அவன் அவளிடம் மிக மென்மையாகவும் புரிதலுடனும் நடந்துகொள்கிறான்.' கண்ணீரைத் துடைத்துக் கொள்வதற்காக இடைவெளி எடுத்துக்கொண்ட ஹாரியட் கணவனது தோள்களில் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். 'இவன் இதை இவ்வளவு அழகாகக் கையாளுவான் என நான் நம்பியிருக்கவே மாட்டேன். வாழ்வில் முதன்முறையாக, இந்த முதிர்ச்சியற்ற, வேட்கைகொண்ட முட்டாள் பெண்ணின் வாயிலாக அவன் தனது சாத்தியங்களை அறிந்துகொண்டுவிட்டது போல் தோன்றுகிறது. ஆனால் எலனார் அவனுக்கு ராஜாங்கங்களைப் பரிசளித்தாள்...'


நீண்ட நேரத்திற்கு அவனது தோள்களில் மெலிதாக அழுதுகொண்டே இருந்தாள் அவள். அதன் பிறகு அவள் யோசனை செய்வது போல் தோன்றியது. இறுதியாக அவள் நிமிர்ந்த போது அவரது கண்களைப் பார்த்து நன்றியுடன் சிரித்தாள். 'சரி, நாம் ஃபார்ச்சூனை வாங்கிக்கொள்ளலாம் என் இனியவரே. அவர்களுக்குப் பிறகு மீதமிருக்கிற அத்தனையையும் நாம் வைத்துக்கொள்ளலாம். அவன் ஒருபோதும் திரும்பி வரமாட்டான். அவனில் என்னால் அத்தனை நம்பிக்கையையும் சக்தியையும் உணர முடிந்தது. அவன் தொடர்ந்து அதைச் செய்து மேலும் மேலும் மெருகேறுவான்.' அவளது உதடுகள் மீண்டும் துடிக்கத் துவங்கினாலும், தனது கலங்கிய கண்களுக்குள்ளிருந்து அவள் புன்னகைத்தாள்.

'எலனாருக்கு இது தெரிந்தால், அவள் மிகவும் மகிழ்வாள் என நம்புகிறேன். ஏனென்றால், அவள் - என் இனிய எலனார் - வேறெதையும்விட அவனை நேசித்தாள், அவள் மீதான அவனது காதலையும்விட!'

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அழைத்துச்சென்ற படைக் கைதி!



கமலநாதன்

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த இந்திக்க பிட்டிய கொம்புற பிரசாந்த என்பவர் கடற்புலிகளின் பெண்கள் அணியால் கைது செய்யப்பட்டு 2 வருடங்களும் 8 மாதங்க ளும் புலிகளின் சிறையில் இருந்தார். அம்பாறை வீரகொடவைச் சேர்ந்த இவர் தனது போர் அனுபவங்களையும் சிறை அனுபவங்களையும் நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் பதிவு செய்தார். அவரது அனுபவங்கள் இவை.

நான் அம்பாறை - வீரகொட பகுதியைச் சேர்ந்தவன். கொத்மலைப் பகுதியில் வசித்து வருகிறேன். 1990ஆம் ஆண்டு தை 26ஆம் நாள் இலங்கைக் கடற்படையில் இணைந்து திருகோணமலைக் கடற்படை முகாமில் "நேவி இஞ்சினியர்" பயிற்சி பெற்றேன். பின்னர் இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான டோறா, கடற்படைக் கப்பல்களில் பணியாற்றினேன். 2006 கார்த்திகை 8ஆம் நாள் பி416 ரக டோறாக் கப்பலில் கடமையாற்றியபோது பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளானேன். அந்த டோறா அணிக்கு லெப்ரினன் ஜெயதிலக (ஓ.ஐ.சி) என்பவர் பொறுப்பாக இருந்தார். எமது டோறாவின் இயந்திரப் பகுதியைக் கடற்புலிகள் சேதப்படுத்தினர்.

அந்தத் தாக்குதல் நடந்தபோது எமக்குப் பொறுப்பாக இருந்த ஜெயதிலகவின் உடல் இரண்டு துண்டுகாளாகப் பிரிந்து இறந்தார். எமது டோறாவில் 14 பேர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். 3 பேர் மாத்திரமே உயிர் தப்பினோம். நாம் கடலில் குதித்து நீந்தியபோது பெண் கடற்புலி அணி ஒன்று தமது படகில் எம்மை ஏற்றியது. அவர்கள் எங்களைச் சுடவில்லை. என்னையும் ஹேவகே என்பவரையும் தமது படகில் துப்பாக்கி பூட்டப்பட்டிருந்த இரும்பில் கட்டினார்கள். எனது காலில் கடும் காயம் ஏற்பட்டிருந்தது. அந்தக் கடற்புலிப் படகுக்குப் பொறுப்பாக இருந்த பெண் போராளியின் கையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. குடிக்கத் தண்ணீர் கேட்டபோது கொக்கோகோலவை வாய்க்குள் ஊற்றினார்கள்.

கடற்படையின் 8 டோறாக்கள் கடமையிலிருந்தன. புலிகள் 20க்கு மேற்பட்ட படகுகளில் வந்து தாக்கினார்கள். அந்தத் தாக்குதலில் ஏறத்தாழ 25 கடற்படையினருக்குமேல் இறந்திருக்க வாய்ப்புண்டு. புலிகளிலும் பலர் இறந்தார்கள்.

பிடிபட்ட எங்களை முல்லைத்தீவிலுள்ள தென்னந்தோப்பு ஒன்றுக்குக் கொண்டு சென்றார்கள். கடற்படையைச் சேர்ந்த 4 பேர் இருந்தோம். இன்னொருவர் வேறொரு படகில் ஏற்றிக்கொண்டு வரப்பட்டார். அங்கு பெரிய கறுத்த உருவமுடைய ஒருவர் கடற்புலிகளுக்குப் பொறுப்பாக இருந்தார். வெற்றிலை சப்பியவாறு நின்றார். எனக்கும் வெற்றிலை சப்புவதற்குத் தந்தார். எங்கள் மீது கோபப்படவில்லை.

**புலித்தேவனைச் சந்தித்தேன்**

புலிகளின் சமாதான செயலகத்திலிருந்து வாகனம் ஒன்றில் புலித்தேவன் அங்கு வந்து எங்களைச் சந்தித்தார். எங்களுடன் சிங்கள மொழியில் உரையாடினார். நான் காயப்பட்டிருந் ததால் என்னைக் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். ஏனையவர்களைக் கனகபுரத்திலிருந்த புலிகளின் சிறைக்கு அனுப்பினார்கள். கிளிநொச்சி மருத்துவமனையில் ஒரு சிறிய அறையில் தங்க வைத்தார்கள். புலிகளின் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் காவலுக்கு இருந்தார். எனது காயம் ஓரளவுக்கு மாறிய பின் கனகபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டேன். அங்குள்ள ஒரு வீட்டின் அறையில் எங்களைத் தங்க வைத்தார்கள். வீட்டைச் சுற்றித் தகரத்தால் வேலி அடைக்கப்பட்டிருந்தது. அங்கு படையிலிருந்த எம்மைப்போன்றவர்களும் புலிகள் அமைப்பிலிருந்து ஓடிப் பிடிபட்டவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் எனப் பல கைதிகள் இருந்தனர்.

**24 மணிநேரமும் கைவிலங்கு போடப்பட்ட நிலையில் இருந்தோம். இரவு 6 தொடக்கம் அதிகாலை 6 மணி வரை எந்தக் காரணம் கொண்டும் கைவிலங்கைக் கழற்ற மாட்டார்கள். 3 நேரமும் உணவு தந்தார்கள். சிவப்புச் சோறு, பிட்டு எல்லாம் தந்தார்கள்.**

24 மணிநேரமும் கைவிலங்கு போடப்பட்ட நிலையில் இருந்தோம். இரவு 6 தொடக்கம் அதிகாலை 6 மணி வரை எந்தக் காரணம் கொண்டும் கைவிலங்கைக் கழற்ற மாட்டார்கள். 3 நேரமும் உணவு தந்தார்கள். சிவப்புச் சோறு, பிட்டு எல்லாம் தந்தார்கள். நாங்கள் புலிகளிடம் பிடிபட்டதை எங்கள் குடும்பத்தினர் தமிழ்நெற் வலைத்தளம் மூலம் அறிந்துகொண்டனர் என்று பின்னர் கூறினர்.


கடற்படைப் படகுகள், இயந்திரங்கள் சம்பந்தமான விடயங்கள், வேறு என்னவெல்லாம் தெரியும் என்று தொடக்கத்தில் விசாரித்தார்கள். பின்னர் என்னைப் பார்த்த மருத்துவர் "அவரது மன நிலை நல்ல நிலையில் இல்லை அவரை அடிக்கடி வந்து விசாரிக்க வேண்டாம்" என விசாரணைக்கு வந்தவர்களிடம் கூறினார். அந்தத் தமிழ் மருத்துவர் என்னிடம் மிகவும் சுமூகமாக நடந்துகொண்டார்.

கடற்புலிகளிடம் பிடிபட்டிருந்த எங்களைப் பற்றிச் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் வந்த செய்திகளைச் சேகரித்துக் கோவையாகக் கட்டி வைத்திருந்தார்கள். அவற்றை மையமாக வைத்தே விசாரணை செய்தார்கள். அந்த விசாரணைகளைக் குணரத்ன, கபில என்ற இரண்டு சிங்களப் படையினரே மேற்கொண்டனர். அவர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் புலிகளுடன் சேர்ந்து பணி புரிந்தார்கள். அவர்களின் குடும்பங்களையும் கிளிநொச்சிக்குக் கொண்டுசென்று வைத்திருந்தார்கள். எம்மையும் தங்களைப்போல புலிகளுக்குப் பணிபுரிய வருமாறு கேட்டார்கள். நாங்கள் சம்மதித்தால் 24 மணி நேரத்தில் எங்கள் குடும்பங்களைக் கிளிநொச்சிக்குக் கொண்டுவருவதாகவும் கூறினார்கள்.

எமக்குக் கைவிலங்கு போடப்பட்டிருந்ததே தவிர துன்புறுத்தல் எதுவும் செய்யவில்லை. எம்மைச் சந்தித்த புலிகள் சீருடையில் இருக்கவில்லை. சாதாரண பொதுமக்கள் போலவே இருந்தனர். நாமிருந்த இடத்தில் இரவு 6 மணிக்குப் பின் வாகனங்கள் எவையும் வருவதில்லை. அவ்வாறு வாகனம் ஏதாவது வரும் சத்தம் கேட்டால் பயமாக இருக்கும். எங்களைக் கொல்லக்கூடும் என்ற அச்சம் இருந்தது.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் வீட்டுக்குக் கடிதம் அனுப்ப வாய்ப்பிருந்தது. பிடிபட்டு 24 மணிநேரத்துக்குள் கிளிநொச்சி மருத்துவமனைக்குச் செஞ்சிலுவைச்சங்க ஊழியர்கள் வந்து சந்தித்தார்கள். பாதணி, உடுப்புகள் எல்லாம் தந்தார்கள். நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த கனகபுரம் சிறைக்கு ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் வருவார்கள். அவர்கள் எம்முடன் உரையாடும்போது புலிகளை அனுமதிக்க மாட்டார்கள். நாங்கள் புலிகளின் காவல்துறையினரின் பாதுகாப்பிலேயே இருந்தோம்.





2007 மார்ச் 7ஆம் நாள் என்னைப் பார்ப்பதற்கு அம்மா, மனைவி, 2 பிள்ளைகள் வந்தார்கள். ஓமந்தையிலிருந்து செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் அவர்களைக் கிளிநொச்சிக்கு அழைத்து வந்தார்கள். அவர்களுடன் நான் உரையாடிக்கொண்டிருந்தபோது சிங்களம் தெரிந்த புலி உறுப்பினர் ஒருவர் அருகிலிருந்து அவதானித்துக்கொண்டிருந்தார். எனது பிள்ளைகளுடன் புலிகள் அன்பாக நடந்துகொண்டார்கள். பார்க்க வந்தவர்கள் அங்கிருந்து வெளியேறும்வரை புலிகள் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.


ஒரு கைதிக்கு 86 வயதாகும்போதும், மாற்ற முடியாத நோய் ஏற்படும் நிலையிலும், விசர் பிடித்தாலும், சமாதானப் பேச்சின்போது பரிமாற்றம் மூலம் எனப் புலிகள் கைதிகளை விடுவிக்கும் சந்தர்ப்பங்கள் இருந்தன. ஒரு சமயம் நடேசன் வந்து சந்தித்தார் சிங்களத்தில் கதைத்தார். ரமேஷ் என்ற பொறுப்பாளர், அரவிந்தன் என்ற சிறைப் பொறுப்பாளர்களுடன் பழகியிருக்கிறேன்.

**கனகபுரம் வான் தாக்குதல்**

எம்மை அடைத்து வைத்திருந்த கனகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள்...



44

தர்மராசா

## இரகசிய ஸ்கொட்

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக இருந்த ஸ்கந்தராஜா மாற்றலாகிப் போனதன் பின்னர் குணசேகரம் என்பவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அதுவரைத் தமிழ்க் கைதிகளுக்கும் சிறைச்சாலை நிர்வாகத்துக்கும் இருந்த தொடர்புகள் இல்லாது போயிற்று. எந்த நேரத்தில் எத்தகைய மாற்றம் நடக்கும் என்பது தெரியாமலிருந்தது. இதனால் கைதிகள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கி வைத்திருக்கவோ உறவுகளுக்குச் சொல்லிவிட்டு ஸ்கொட் செல்லவோ வாய்ப்பிருக்கவில்லை.

**13.11.2001** அன்று காலையில் மட்டக்களப்பிலிருந்து பூசாவுக்கு ஸ்கொட் எடுக்கவிருந்தது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. காலையில் குளித்துக்கொண்டிருந்தபோது அன்று ஸ்கொட் போகவுள்ள செய்தியை ஒரு காவல்துறை அதிகாரி சொல்லித் தெரியவந்தது. உடனடியாகத் தமிழ்ச் சூழலைவிட்டு வெளியேறுவது மனதுக்குச் சங்கடமாக இருந்தது.

எனக்கும் பூசாக் கைதியான ராசாவுக்கும் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை பெறுமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். அதற்காகக் கொழும்புக்குப் போகவேண்டிய கட்டாயம் எமக்கிருந்தது. அன்று 10 மணியளவில் புறப்பட்ட ஸ்கொட் இரவு 7 மணியளவில் அனுராதபுரச் சிறையை அடைந்தது. எனக்கு அது ஐந்தாவது சிறை. 11 பேர் அந்த ஸ்கொட்டில் சென்றிருந்தோம். இரவு 7.30 மணியளவில் உணவுக்காகச் சமையல் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அது ஒரு கைத்தொழில் பேட்டைபோல காட்சியளித்தது. ஓரிடத்தில் பெரிய இரும்புத் தாங்கி ஒன்றில் தண்ணீரைக் கொதிக்க வைத்து (தாங்கியின் அடியில் விறகிட்டு எரித்து) அதிலிருந்து இரும்புக் குழாய்கள் மூலம் பல அடுப்புகளுக்கு நீராவி கடத்தப்படுகிறது. அந்த வெப்பத்தில் சமையலைச் செய்கிறார்கள். இத்தகைய ஓர் அடுப்பை அங்குதான் முதலில் கண்டேன்.

அங்கு உணவு தீர்ந்திருந்தது. சோறும் சிறிது பருப்புக் கறியும் எடுத்துச் சாப்பிட்டேன். எம்முடன் வந்த ஐயர் ஒருவர் சோற்றை எடுத்துக் கறிக்குத் தட்டை நீட்டியபோது மாட்டிறைச்சிக் கறியை ஊற்றிவிட்டார்கள். அவர் உண்ணவில்லை. வாந்தி வருகிறது என்று கூறி அவர் போய்விட்டார். வெறும் தேநீர் வாங்கிக் கொண்டு போனோம். ஈ-1 பகுதியில் எல்லா சிறை அறைகளிலும் தமிழ் அரசியல் கைதிகள் நிறைந்திருந்தார்கள் (100 பேருக்கு மேல் - ஓர் அறையில் குறைந்தது 8 பேர் பூட்டப்பட்டிருந்தார்கள்). நாம் காலையில் அங்கிருந்து பூசாவுக்குப் புறப்படவிருந்ததால் சிறை அறைகளுக்கிடையில் இருந்த விறாந்தைப் பகுதியில் படுக்குமாறு சிறை ஊழியர்கள் சொன்னார்கள்.

எங்களைப் படுக்க வைத்த இடம் மிகவும் நல்லது என்று அங்கு அடைபட்டுக் கிடந்த நண்பர்கள் கூறினார்கள். எங்களையும் அறைகளில் போட்டுப் பூட்டினால் அவர்களுக்கு இருக்கின்ற நெருக்கடி மேலும் மோசமாகிவிடும் என்றார்கள். பல நண்பர்கள் விடுதலையாகிவிட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். அங்கு சென்ற பின்தான் தெரிந்தது அவர்கள் இன்னும் விடுதலை யாகவில்லை என்று. அவர்களைக் காண ஆச்சரியமாக இருந்தது. அவர்களில் சிலர் நான் விடுதலையாகி விட்டேன் என்று அறிந்தார்கள் என்று கூறினார்கள்.

பூசாவிலிருந்த வவுனியாவைச் சேர்ந்த அப்பன் என்ற நண்பர் ஒருவர் எனக்குப் பாயும் சிறிய தலையணை ஒன்றும் தந்தார். ஐயருக்குச் சிறிய பிஸ்கட் பை கொடுத்தார். அவர்களிடம் இருந்ததை எங்களுக்கும் பகிர்ந்து கொண்டார்கள். மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டு மாலை 3.30 மணியளவில் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்றோம். பூசாக் கைதிகளைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பிலிருந்து வரும்போது அனுராதபுரம் முதலாவது தங்குமிடமாகவும் களுத்துறை இரண்டாவது தங்குமிடமாகவும் இருந்தது. அன்று இரவு 'ஏ' வாரட்டில் தங்கினோம். நித்திரை கொள்ள முடியாத அளவுக்கு நுளம்பு உடம்பில் கொட்டியது.

(தொடரும் )

---

## புலிகளை...

பகுதிக்கு அருகில் இலங்கை வான்படை வானூர்திகள் தாக்குதல் நடத்தின. நாங்கள் பயத்தில் உறைந்தோம். தாக்குதலின் பின் சமா தனக் குழு, பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் வந்து பார்த்தார்கள். எமது சிறை பற்றிப் படையினருக்கு அறிவித்திருப்பதாகவும் எங்களைப் பயமில்லாமல் இருக்குமாறும் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கூறினார்கள்.

போர் நெருக்கமாக வந்தபோது கனகபுரத்திலிருந்து ஒவ்வொரு இடங்களாக மாற்றி 8 இடங்களில் வைத்திருந்தார்கள். புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், வெள்ளாம் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் இருந்தோம். படைத்தரப்பு அந்த இடங்களைக் கைப்பற்றும் என்று புலிகளின் உயர் மட்டத்தில் இருந்தவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்புண்டு. கீழ்மட்டத்தில் இருந்தவர்கள் இறுதிவரை படையினரால் கைப்பற்ற முடியாது என்றே நம்பினார்கள்.

### 2009 மே 18ஆம் நாள்

மே 16இல் நாங்கள் வட்டுவாகல் பகுதியில் 4 அடி ஆழ பங்கருக்குள் வைக்கப்பட்டோம். கைவிலங்கு போடப்பட்டிருந்தது. 17ஆம் நாள் காலையில் எம்முடன் நின்ற காவல் ஊழியர்கள் தமது சீருடைகளைக் களைந்துவிட்டுச் சாரத்துடன் நின்றார்கள். துப்பாக்கி சுடும் சத்தம் அருகில் கேட்டது. அந்தக் காவலர்களின் குடும்பங்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போவதாகக் கூறினார்கள். எங்களைப் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக் கேட்டபோது அவ்விடத்தில் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி பொறுப்பெடுக்க மறுத்தார். 17ஆம் நாள் காலையில் அதிகளவில் மக்கள் வட்டுவாகல் பாலத்துக்கூடாகச் சென்றார்கள். எங்கள் கைவிலங்குகளைக் கழற்றிவிட்டார்கள். எம்முடன் இறுதியாக நின்ற பரமேஸ்வரனும் இன்னொருவரும் படையினரின் பக்கம் போகப் பயந்தார்கள். அவர்களை அழைத்து வந்தோம். எங்களில் ஐவர் அவர்கள் இருவர் என 7 பேரும் படையினரின் முன்னரங்க நிலைக்குச் சென்றோம். உணவு தந்தார்கள். பொதுமக்களுடன் அனுப்பாது வேறாகப் படகில் ஏற்றி அனுப்பினார்கள். எம்முடன் வந்த புலிகளின் காவல்துறையினரை மக்களுடன் செல்லச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரை புலிகளை அழிப்பதற்குக் கடற்படையினரின் பங்களிப்பே மிக அதிகமாக இருந்தது. கடல் மார்க்கமாகப் புலிகள் ஆயுதம் கொண்டுவருவதைத் தடுத்ததால்தான் புலிகளால் தொடர்ந்து போராட முடியவில்லை. அந்த வகையில் கடற்படையில் பணியாற்றியதற்காகப் பெருமைப்படுகிறேன். 2018 இல் நான் ஓய்வு பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிடியும் இருக்குமோ?



கதிரேசன் காத்தவராயன்

வாசிகசாலைப் பக்கம் போனால் ஏதாலும் புதினங்களை அறியலாமெண்டு போனன். சம்பர் வலு அக்கறையாய் சோதினைக்குப் படிக்குமாப்போலை பேப்பரோடை இருந்தார். நான் போயிருந்து "என்ன சம்பு என்னவாம் போட்டிருக்கு?" எண்டு கேக்கத்தான் திடுக்கிட்டு "ஓஓ.. ஓமோம்... என்னத்தை... எல்லாம் வழமையானதுதான்... விபத்து... கொரோனா... மழைவெள்ளம்... தட்டுப்பாடு... வேறையென்னப்பா?" எண்டு சலிச்சார்.

"இதுகளைவிட அரசியலிலை நடக்கிற சுத்துமாத்துகள்... எங்கடையாக்கள் பொழுதுபோக்காச் சொல்லுறதுகள் செய்யிறதுகள் எண்டு அதுகளும் ஒரு சீராய் நடக்கிற ஏமாத்துகளாயல்லே போகுது? இந்த... இதுகளைவிட்டால் செய்தியளே இல்லையெண்டமாதிரியல்லே பேப்பருகள் ரீவிச் செய்தியள் எல்லாம் கிடக்கு?" எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க முருகேசர் வந்தார்.

"என்னப்பா கதிரேசண்ணை செய்தியளுக்கும் தட்டுப்பாடாப் போச்சோ? இஞ்சை என்னத்துக்குத்தான் தட்டுப்பாடில்லை... பொய்யள் சுத்துமாத்துகளைத் தவிர தட்டுப்பாடில்லாத சாமானுகளேதும் இருக்கோ?" எண்டு சிரிச்சார் முருகேசர் இருந்துகொண்டே.

"தட்டுப்பாடு செய்தியில்லை. தட்டுப்பாட்டுக்கான காரணம் கனக்கச் செய்தியளல்லே... காரணங்களைச் சரியாக் கண்டுபிடிக்கிற விசயம் தட்டுப்பாடாயல்லே கிடக்குது" எண்டார் முருகேசர்.

"காரணங்களைக் கண்டுபிடிக்கிறதிலையும் திறமைக்குறைவுகள் இருக்குதுதான்...ஆனால் அதுகளைக் கண்டு பிடிக்கிறதும் சரி அதை வெளிவிடுகிறதும் சரி முடியிற அலுவலோ?" எண்டு கேட்டார் முருகேசர். "அதுகும் சரிதான் அண்ணை... அதுக்காக சனத்தைப் பேப்பட்டம் கட்டிற மாதிரியோ சின்னப்பிள்ளைத்தனமாய் செய்தி போடுகிறது?" எண்டு கேட்டார் சம்பர். "சம்பு! அதுக்கு முதுகெலும்பு வேணுமல்லே?" எண்டு நிப்பாட்டினார் முருகேசர்.

"சுவரிருந்தாத்தான் சித்திரம் கீறலாம் கண்டியளோ? தங்கடை பாதுகாப்பிலை கவனமாயிருக்கிறதிலை பிழையில்லை... அதோடை சிக்கலான விசயங்களை மறைமுகமாயெண்டாலும் கிளறலாமெண்டிற விசயம் கனபேருக்கு விளங்காமலுக்குக் கிடக்குதோ எண்டிறதுதான் இப்ப என்ரை சந்தேகம்" எண்டு மற்றவையைப் பாத்தன். தலையை ஆட்டிச்சினமே தவிர ஒண்டும் சொல்லயில்லை.

"உண்மைதானப்பா கதிரேசண்ணை... அந்த மாதிரி வளங்குறைவுதான்... பிரச்சனை சிக்கலெண்டு கண்டால் சலசலப்பைக் கிளறிவிடலாமல்லே? தகவலறியும் உரிமைச் சட்டமெண்டிருக்கிறதை வைச்சு உள்வீட்டாலை வாற தகவலுகள் மழுப்பலுகளை கசிய விடலாமல்லே?" அதைச் செய்யவுமல்லே பின்னுக்கு நிக்கிறாங்கள்..." எண்டார் முருகேசர்.


"இப்ப அப்பிடியும் சில விசயங்கள் வருகுதல்லே?" எண்டார் சம்பர்.

"அதென்னப்பா சம்பு" எண்டு நான் கேக்க முருகேசர்தான் பதில் சொன்னார். "உந்த ஆஸ்த்திரிப் படமெடுக்கிற மிசனை பழுதாக்கின கதையைச் சொல்லுறார் போலை? அப்பிடியே சம்பு.. அதே?" எண்டு முருகேசரே கேட்டார். "பங்கார் முருகேசண்ணை பிடிச்சிட்டாய்... இப்ப கிளற வெளிக்கிட்டாச்சல்லே" எண்டார் சம்பர்.

"இஞ்சார் சம்பு அது ஒரு உதாரணந்தான் சரி... காரணம் என்னவாயிருக்குமெண்டு நினைக்கிறாய் சம்பு?" எண்டு கேட்டன். "அது பெரிய இடங்களின்ரை ஆதரவுச் சமாச்சாரமல்லே... எண்டு சம்பர் இழுத்தார். ஏன் சம்பு இழுக்கிறாய்? கழிச்சுக் கறள்ப் பிடிச்ச மிசினுகளைவைச்சு சனத்தை அது இது வெண்டு வெருட்டிக் காசுக்குத் தொழில் செய்யிறவைதான் உதைச் செய்திருப்பினம் எண்டதை ஏன் தெளிவாய்ச் சொல்லேலாதோ?" எண்டார் முருகேசர் கோவமாய்.

"இஞ்சார் முருகேசண்ணை... இப்ப மிஷினைப் பழுதாக்கிப் போட்டாங்களெண்டு வாற செய்தி குறிச்சு விசாரணையள் நடந்ததோ? ஆர் விசாரிச்சது? ஆரை விசாரிச்சது? முடிவென்ன? எண்டதுகளைப் போடுவினமோ?" எண்டு நான் கேட்டதுக்குப் பதில் இல்லை. "கறள்க் கத்தியாலை கண்ணைத் தோண்டினது... துணியை வயித்துக்கை வைச்சுத் தைச்சது... அது இதுவெண்டு கொஞ்சமே நடந்தது? ஒருநாட் செய்தியோடை அது சரியாகிப்போகிறதல்லே வழக்கமாப் போச்சுது?" எண்டு சொல்லிக்கொண்டு எழும்பினன். "ஓகோ சங்கதியள் உப்பிடியுமோ இருக்குது?" எண்டு சம்பர் வாயைப் பிழந்தார். உப்பிடியுமோ இல்லைச் சம்பு உப்பிடித்தான் எண்டார் முருகேசர்.

## இந்தியில ஒரு படம் நடிக்கலான்னு இருக்கேன் – நடிகர் விஜய் ஆண்டனி பேட்டி



"கதைக்கு எது சரியாக இருக்குதோ, அதுதான் என் படங்களுக்கு தலைப்பா அமையுது. 'பிச்சைக்காரன்' தலைப்பை நெகட்டிவ் சென்டிமென்டுன்னு சில பேர் பயங்காட்டினாங்க. ஆனா, அந்த கதைக்கு அதை விட்டா, வேற நல்ல தலைப்பு கிடைக்குமா சொல்லுங்க?"- எனக் கேள்வியுடனேயே தொடங்குகிறார் விஜய் ஆண்டனி. சி.எஸ்.அமுதன் இயக்கிவரும் 'ரத்தம்' படப்பிடிப்பில் இருந்தவரை இடைநடுவில் பிடித்துப் பேசினோம்.

அப்போ 'ரத்தம்' என்கிற தலைப்பும் கதைக்கானதுதானா?

சினிமாவுல பாசிட்டிவ், நெகட்டிவ் சென்டிமென்டுக்கும் வெற்றிக்கும் சம்பந்தமே இல்லை. நல்ல கதையில கடுமையா உழைச்சா கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். இதுதான் என் பாலிசி. 'ரத்தம்'படத்தின் கதைக்கும் இந்த தலைப்பு சரியா பொருந்தினதால, அதையே வச்சோம். அவ்வளவுதான். அதைத் தாண்டி தலைப்புகளுக்கு மெனக்கெடறதில்லை.

'பிச்சைக்காரன் 2' என்ன சென்டிமென்ட்டை பேசப்போகுது?

எனக்கு பெரிய வெற்றியை அள்ளிக் கொடுத்த படம் 'பிச்சைக்காரன்'. அந்தப் படத்தோட இரண்டாம் பாகம்னா, அது அதைவிட நல்லா இருக்கணும்னு நினைச்சோம். அதுக்கு ஏற்ற மாதிரி ஒரு கதை அமைஞ்சது. ஷூட்டிங் போயிட்டிருக்கு. ஜனரஞ்சகமான படமா இருக்கும். 'முதல்வன்', 'ரமணா' மாதிரி, 'பிச்சைக்காரன்-2' இருக்கும்ங்கறதைதான் இப்போதைக்கு சொல்ல முடியும்.

'அக்னிச்சிறகுகள்'ல அருண் விஜய்யும் இருக்காரே...

என் கரியர்ல இன்னொரு முக்கியமான படமா இது இருக்கும். 'நான்', 'சலீம்', 'பிச்சைக்காரன்' மாதிரி இதுவும் இருக்கும். அருண் விஜய்கூட நடிச்சது நல்ல அனுபவம். ரெண்டு பேருக்கும் சமமான முக்கியத்துவம் இருக்கு. இயக்குநர் நவீன், அருமையா பண்ணியிருக்கார்னு சொல்றது சாதாரண வார்த்தையாதான் இருக்கும். அவர் கடுமையா உழைச்சிருக்கார். அதுக்கான பலன் கண்டிப்பா கிடைக்கும். அக்ஷரா ஹாசன், ரைமா சென் உள்ளிட்ட பலர் நடிச்சிருக்காங்க.

சவுண்ட் இன்ஜினியர், இசை அமைப்பாளர், நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், எடிட்டர்... அடுத்து?

எனக்குத் தெரியல. இவ்வளவு தூரம் நான் வருவேன்னு எதிர்பார்க்கவே இல்லை. மியூசிக் பண்ணிட்டிருக்கும்போது, திடீர்னு ஒரு நாள், நடிச்சா என்னன்னு தோணுச்சு. வீட்டுல சொன்னேன். பயந்தாங்க. பிறகு என்னமோ முடிவெடுத்து வந்தேன். 16, 17 படங்கள் தாண்டி நடிகனா போயிட்டிருக்கேன். என் மேல இயக்குநர்கள் வச்சிருக்கிற நம்பிக்கை அதிகமாகுது. எனக்காகக் கதை பண்ணிட்டு திறமையான இயக்குநர்கள் வர்றது சந்தோஷமா இருக்கு. இதுவரைதான் எனக்குத் தெரியுது. அடுத்து என்ன பண்ணப் போறேன், என்ன நடக்கப் போகுதுன்னு ஏதும் தெரியல.

நேரடி இந்திப் படத்துல நடிக்க போறீங்களாமே?

தெலுங்கு, இந்தியில என் படங்கள் டப் ஆகி வெளியாகுது. அதுக்கு நல்ல வரவேற்பு கிடைச்சிருக்கு. 'பிச்சைக்காரன்' படத்துக்குப் பிறகு தெலுங்குல ஒரு மார்க்கெட் உருவாகி இருக்கு. அடுத்து இந்தியில நேரடியா ஒரு படத்துல நடிக்கலாம்னு இருக்கேன். அதுக்கான பேச்சு வார்த்தை போயிட்டிருக்கு. முடிவானதும் சொல்றேன்.

**இசை அமைக்கிறது குறைஞ்சிருக்கே?**

நேரமில்லையே. வேலை, வேலைன்னு ஓடி ஓடி, குடும்பம், நண்பர்கள் எல்லாத்தையும் மறந்துட்டேன். அதனால, கொஞ்சம் வேலைகளை குறைக்கலாம்னு இருக்கிறேன். குடும்பத்தையும் கவனிக்கணுமில்ல. ரெண்டு வருஷத்துக்கு ரெண்டு படம் மியூசிக், ஒரு படம் எடிட் பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். ஏன்னா, தொழில் கைவிட்டுப் போயிடக்கூடாது.

அடுத்து எந்தப் படம் ரிலீஸ் லிஸ்ட்ல இருக்கு?

'தமிழரசன்', 'அக்னிச் சிறகுகள்' ரெண்டுமே ரெடியா இருக்கு. பாபு யோகேஸ்வரன் இயக்கி இருக்கிற 'தமிழரசன்' இதுவரை நான் நடிச்சப் படங்கள்ல என்னை வேறொருத்தராகக் காண்பிச்சிருக்கிற கதைய கொண்ட படம். சுரேஷ் கோபி, சோனு சூட், ரம்யா நம்பீசன், சங்கீதான்னு பெரிய நட்சத்திரப் பட்டாளம் இருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸிலிருந்து விடுதலை...?

கொரோனா தீநுண்மிக்கு எதிராகத் தடுப்பூசிகள், மருந்து மாத்திரைகள் எனப் பல வந்திறங்கி விட்டாலும் எச்.ஐ.வி. என்கிற எய்ட்ஸ் நோய்க்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. குணமாக்க முடியாத நோய்களின் பட்டியலில் முதலிடம் அதற்கேயுண்டு என்று இதுவரையில் சொல்லப்பட்டு வந்தது. அப்படிப்பட்ட நோயிலிருந்து ஒருவர் மீண்டுள்ளார். இது மருத்துவ உலகில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த விடயம்.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர்தான் இவ்வாறு எய்ட்ஸிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். ஆனால், இது சுலபமான விடுதலையல்ல. இவருக்கு முன்பாகவும் அரிதாகச் சிலர் எய்ட்ஸிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். உலகிலேயே எச்.ஐ.வி தொற்றிலிருந்து குணமடைந்த முதல் பெண்ணாக இந்த அமெரிக்கப் பெண் கருதப்பட்டாலும், இந்தத் தொற்றில் இருந்து ஏற்கனவே இரண்டு ஆண்கள் மீண்டுள்ளார்கள்.



**முதல் சிகிச்சை...!**

இறுதியாக எய்ட்ஸிலிருந்து விடுதலைபெற்ற இந்த அமெரிக்கப் பெண் குருதிப் புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தார். அதேநேரம் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. வைரசுக்கு, இயற்கையாக எதிர்ப்புத்திறன் கொண்ட ஒருவரிடமிருந்து தொப்புள் கொடி குருதி ஸ்டெம் செல்களைக் கொடையாகப் பெற்றார். இதனால் 14 மாதங்களாக அவருக்கு எச்.ஐ.வி.க்கு எதிரான தொடர் சிகிச்சையான அன்டி ரெட்ரோவைரல் தெரபி சிகிச்சை தேவைப்படவில்லை. தொப்புள் கொடி குருதிக் கொடை சிகிச்சை எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ள பெரும்பாலானவர்களுக்கு ஏற்புடையதாக இருப்பது கடினம் என்றும், இது மிகவும் ஆபத்தான சிகிச்சை முறை எனவும் நிபுணர்கள் கூறுகின்ற நிலையில் அவர் அதைப் பெற்றார்.

எச்.ஐ.வி. நோய்க்குத் தீர்வாக இந்த சிகிச்சை முறை பயன்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை.

புற்றுநோய்ச் சிகிச்சைக்காக, தொப்புள் கொடி குருதி மாற்றுச் சிகிச்சை பெற்றதால் எச்.ஐ.வி. நோய்க்குச் சிகிச்சையாக உள்ள அன்டிரெட்ரோவைரல் தெரபி அவருக்குத் தேவைப்படவில்லை. இதனை பெறுபவர்களின் நோய் எதிர்ப்பு திறனின் அமைப்பு, எச்.ஐ.விக்கு எதிர்ப்பு சக்தியை உருவாக்கலாம் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

**எதிர்காலத்தில் எய்ட்ஸ் இல்லா உலகம்**

இந்தச் சம்பவம் எச்.ஐ.வியைக் குணப்படுத்தும் சிகிச்சை எதிர்காலத்தில் சாத்தியம் என்பதை உறுதிப்படுத்துகிறது என்றும், எச்.ஐ.வி சிகிச்சைக்கான சாத்தியமான உத்தியாக மரபணு சிகிச்சை இருப்பதை மேலும் வலுப்படுத்துகிறது என்றும் பன்னாட்டு எய்ட்ஸ் அமையத்தின் தலைவர் ஷரோன் லெவின் கூறுகிறார். இந்தப் புதிய மருந்துவச் சிகிச்சை குறித்த அதிக - விரிவான தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. எப்படியிருப்பினும் இதுவரை காலமும் அரிதாக மூவர் மாத்திரமே இந்தத் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். அவர்கள் மீண்டதும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. அத்தோடு உலகிலுள்ள 37 மில்லியன் எய்ட்ஸ் நோயாளர்களுக்கும் இந்தச் சிகிச்சை தீர்வாகாது என்பதும் கவனத்துக்குரியது.

# நம்மைச் சுற்றும் சூழலியல்!

சூழலியல் என்கிற பதத்தை இப்போதெல்லாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். காற்று, தண்ணீர் போன்றவற்றின் மாசுபாடு, புவிவெப்பம், எதிர்பாராத காட்டுத்தீ போன்ற நிகழ்வுகளைச் சூழலியல் சிக்கல்களாக வர்ணிக்கிறார்கள். அறிவியல் வரையறைப்படி சூழலியல் என்றால் என்ன?

உயிரினங்களுக்கும் அவை இருக்கும் இடங்களுக்கும் இடையேயான தொடர்பு, உறவு, சார்புத்தன்மை போன்றவற்றை அறியும் உயிரியலின் பிரிவைச் சூழலியல் எனலாம்.

சூழலியல் நிகழ்வுகளை மிகப்பெரிய நிலப்பரப்பிலோ அல்லது மிகக் குறுகிய இடத்திலோ ஆராய்ந்து புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, கடலில் மிதந்து, விரைந்தபடி இருக்கும் வணிகக் கப்பல்களின் போக்குவரத்தால் நிகழும் சூழலியல் விளைவுகளைச் சொல்லலாம். அதே நேரத்தில், மண்புழுக்கள், எறும்புகள், நத்தைகள் போன்றவை எங்கிருந்து உணவைப் பெற்றுக்கொள்கின்றன. அவற்றுக்கிடையே இருக்கும் உறவு என்ன என்பதையும் பூதக்கண்ணாடி மூலம் பார்த்துப் படித்து அறிய முற்படலாம்.

ஆக, நிலப்பரப்பையும் உயிரினத்தின் அளவையும் பொருட்படுத்தாமல், சூழலியல் நிகழ்வுகள் தொடர்ந்து சிறியதும் பெரியதுமாக நடப்பது புலப்படும்.

**முதலில் சில அடிப்படைகள்**

உயிரினங்களுக்கிடையேயான சார்பு உறவுகளை பல வகைகளாகப் பிரிக்கிறார்கள் சூழலியல் அறிஞர்கள்.

**வேட்டையாடுதல்:** ஓர் உயிரினம் மற்றொரு உயிரினத்திற்கு உணவாவது. உதாரணம், புலிகளுக்கு மான்கள்.

**போட்டி போடுதல்:** கிடைக்கும் உணவு அல்லது உறைவிடத்துக்காக இரண்டுக்கும் மேற்பட்ட உயிரினங்கள் போட்டியிட்டு, பெறுவது அல்லது பகிர்ந்துகொள்வது. உதாரணம், மரங்கொத்திப் பறவையும் அணில்களும் ஒரே மரத்தில் கூடுகட்டுவது.


**ஒருசார்பு உறவு:** ஒன்றைச் சார்ந்து உயிரினம் இருப்பது. இதனால், அந்த உயிரினத்துக்குப் பலனோ, பாதிப்போ இருக்காது. உதாரணம், ரெமோரா மீன் வகை. இவற்றால் நீந்த முடியும். ஆனால், மற்ற பெரிய மீன்களின் உடலில் ஒட்டிக்கொண்டு பயணம் செய்வதன் மூலம் தாங்கள் வேட்டையாடப்படுவதில் இருந்து தற்காத்துக் கொள்கின்றன. சுறா, திமிங்கிலம் போன்ற உயிரினங்கள் ரெமோராவைத் தாங்கள் அறியாமலேயே தூக்கிச் சென்றாலும், அவற்றுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பதால் அதைப் பொருட்படுத்துவதில்லை.

**பரஸ்பர உறவு:** உயிரினங்கள் இரண்டு ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலை. உதாரணம், பூவும் தேனீயும். தேனீக்குப் பூவில் இருக்கும் தேன் தேவை. மகரந்தத்தைக் கடத்த பூவுக்குத் தேனீ தேவை.

**ஒட்டுண்ணி:** ஓர் உயிரினம் மற்றொரு உயிரினத்தைச் சார்ந்து வாழும். ஆனால், இந்த வாழ்க்கை முறையால் மற்றொரு உயிரினத்துக்குக் கேடு விளையும். உதாரணம், நம் குருதியை உறிஞ்சி வாழும் கொசுக்கள்.

ஆக, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றலை உருவாக்க நிலக்கரி போன்ற கரிம எரிபொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் நம்மைச் சுற்றியிருக்கும் கார்பனின் அளவை அதிகமாக்கிச் சூழலியல் சிக்கலை உருவாக்குகிறோம் என்பது உண்மைதான். ஆனால், நம்மை அறியாமலேயே இன்னொரு சூழலியல் சிக்கலை நாம் தொடர்ந்து செய்துவருவதைப் பற்றி அதிகம் விவாதிப்பதில்லை. அது, அயல் உயிரினங்களை (INVASIVE SPECIES) உருவாக்கிவிடும் ஆபத்து.

இதற்கு யூகலிப்டஸ் மரங்கள் நல்ல உதாரணம். இந்த மரங்களில் இருந்து பெறப்படும் நறுமணத் தைலம், எரிபொருளாகப் பயன்படும் கிளைகள் போன்ற காரணங்களால் கடந்த பல நூற்றாண்டுகளாக அவுஸ்திரேலியாவிலிருந்து உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு



வளர்க்கப்படுகின்றன. எல்லா தாவர உயிரினங்களிலும் 'அல்லேலோபாக்கின்' என்கிற நச்சுப் பொருள் உண்டு. தன்னைத் தவிர்த்த மற்ற தாவரங்களை வளரவிடாமல் தடுக்கும் வேதிப்பொருள் இது. யூக்கலிப்டஸில் இது சற்றுத் தூக்கலாக இருக்கிறது. இந்த மரம் தனக்கு அருகில் வேறு எந்த மரத்தையும் வளரவிடாமல் தடுத்துவிடும்.

விலங்கினங்களும் அப்படியே. உதாரணமாக, அழகுக்காக வளர்க்கப்படும் மீன்களை நதிகளில் கொண்டு போய்விட்டால், இயற்கையாக வாழும் மீன்களின் உணவு வளங்களை அழித்தும், அவற்றைக் கொன்றும் தீர்த்துவிடும். இதேபோல அவுஸ்திரேலியாவின் கொசுமீன் எனப்படும் ஒரு மீன் வகை ஏரி, குளங்களில் பெரும் நாசத்தை உண்டாக்குவது கண்டறியப்பட்டிருக்கிறது.


கடைசியாக, மனித இனமே ஆக்கிரமிக்கும் உயிரினம்தானே என்கிற கேள்வி மனத்தில் நெருடலாம். 'அப்படியெல்லாம் இல்லை' என்கிறார்கள் மானுடவியல் ஆராய்ச்சியாளர்கள். அதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, அண்டார்க்டிகா தவிர்த்து அனைத்துக் கண்டங்களிலும் மனிதர்கள் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வந்து விட்டனர். இரண்டு, ஆக்கிரமிப்பு செய்யும் விலங்கினங்கள் தாமாக, தங்கள் இடத்தை விட்டு நகர்வதில்லை. மனிதர்கள் தாமாகவே இடப்பெயர்ச்சி செய்யும் தன்மையும் திறனும் கொண்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக் கிழங்குக் கீமா...!



இந்த வார சமையல்



"கீமா" என்பது தேங்காய்ப்பால் சேர்க்காமல் பிரட்டலாகவும் அதேநேரம் உறைப்பாகவும் ஆக்கப்படும் கறி வகை உணவைக் குறிக்கிறது. கீமா (கைமா) வகைக் கறியை ஆக்கி அதை ரொட்டி, தோசை, பாண் போன்ற வற்றோடு தொட்டுச் சாப்பிடும் வழக்கம் இந்தியாவில் இருக்கிறது. இங்கு பிரட்டலாக்கப்படும் கீமாவை றோல் மற்றும் பற்றிஸ் ஆகியவற்றின் உள்ளுடல்களுக்குப் பயன்படுத்தும் வழக்கமே அதிகம் இருக்கிறது. ஆனால் கீமா" என்கிற இறுக்கமான இந்த உறைப்புப் பிரட்டலுக்கென்று தனியான உணவுப் பிரியர்கள் கூட்டமே இருக்கிறது.

வாசனையுடன் தூக்கலாக ஆக்கும் கீமாக்களில் பல வகைகள் இருக்கின்றன. இறைச்சி கொண்டு ஆக்கப்படும் கீமாக்களே அதிகம் ஆனாலும் முட்டை மற்றும் கிழங்கு வகைகளிலும் கீமாவை ஆக்க முடியும். அதிலும் உருளைக்கிழக்கில் கீமா ஆக்குவது தனி ருசி தரும்.

**தேவையான பொருள்கள்**

உருளைக் கிழங்கு 1 கிலோ, பெரிய வெங்காயம் கால் கிலோ, இஞ்சி ஒரு துண்டு, பெருஞ்சீரகம், கடுகு தலா இரண்டு தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு, கறிவேப்பிலை 3 கெட்டுகள், மரக்கறி எண்ணெய் - தாழிப்பதற்கு, கட்டத்தூள் (செத்தல் மிளகாய்ப் பொடி) தேவைக்கேற்ப, மிளகு தூள், மஞ்சள்தூள் தலா ஒரு தேக்கரண்டி.

**எப்படிச் சமைப்பது**

உருளைக்கிழங்குகளைக் கழுவிச் சுத்தப்படுத்திப் பானை ஒன்றுக்குள் நீர் விட்டு அவித்தெடுக்க வேண்டும் (அவிக்கும் போது சிறிதளவு உப்புச் சேர்க்கலாம்). அவிந்ததும் கிழங்குகளின் தோல்களை உரித்து நீக்கவேண்டும். நீக்கியதும் சற்றுப்பெரிய துண்டுகளாக்கிக்கொள்ள வேண்டும். பின்னர் தாச்சி ஒன்றை அடுப்பில் வைத்து மிதமாகச் சூடாக்க வேண்டும். அதில் மரக்கறி எண்ணெய்யை விட்டு நறுக்கிய வெங்காயம், பெருஞ்சீரகம், கடுகு முதலியவற்றைப் போட்டுத் தாழிக்க வேண்டும். தாழித்ததும் உருளைக் கிழங்குத் துண்டுகளைப்போட்டுப் பிரட்ட வேண்டும், பிரட்டியதும் உப்பு, மஞ்சள், மிளகு தூள், கட்டத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து மேலும் பிரட்ட வேண்டும். பிரட்டியதும் அரைக் கப் அளவில் தண்ணீர் விட்டுக் கொதிக்கவிடவேண்டும். கறிவேப்பிலைகளைத் தூவி வாசம் வரும்போது இறக்கினால் உருளைக்கிழங்குக் கீமா தயார்.

---

# உடல், காதல், காமம்
# மற்றும் சில தீண்டப்படாதச் சொற்கள்

கொற்றவை

முந்தைய காலத்தில் ஒருவருக்கு குழந்தை பிறந்துவிட்டால் உழைப்பதற்கு இரண்டு கைகள் கூடுதலாக கிடைத்ததாகப் பெருமை கொள்வார்களாம். உடல் என்பதை உழைப்பதற்கான கருவி, கொண்டாடப்பட வேண் டிய ஒன்றென்று கருதிய ஒரு காலதத்தில், கடவுள் நம்பிக்கையோ உடல் என்பது கர்ம வினை, பாவத்தின் விளைச்சல், பிரம்மத்தின் திருவிளையாடல் என்ற பேச்சும் சேர்ந்தே எழுந்திருப்பது ஒரு நகை முரண்தான். மதம் உடலை அசுத்தமானதாக பறைசாற்றுகிறது. சுத்தம் எனும் கருத்து உடலின் வெளிப்புற தன்மையை சுட்டுகிறது. மேலும் அது 'அகம்' என்ற ஒன்றாகவும் பிரிக்கப்பட்டு 'அகச் சுத்தம்' என்பதை வலியுறுத்தித் திணிக்கிறது. இது மேலும் தீவிரமடைந்து உடலிலிருந்து உழைப்பைப் பிரித்து அதை ஈனமாகச் சித்தரித்து, அதை பெண்ணுடலாக, சாதியுடலாக மாற்றி உடல் பற்றிய வரையரையை உருவாக்கப்பட்டிருக்கிறது.

குரங்கிலிருந்து மனித இனம் பரிணமிக்க உழைப்பே அடிப்படை. இயற்கையை மனிதன் தன் வயப்படுத்தியது உடலுழைப்பைக் கொண்டே. இயற்கையோடு மானுட உடலும் ஒன்றோடொன்று உறவாடியபடி உழைத்த பொழுதிருந்த செழுமையும், ஆரோக்கியமும் பறிக்கப்பட்டுவிட்டது. நவீன கண்டுபிடிப்புகளால் மூளை உழைப்பு அதிகரித்து வரும் சூழலில், உடல் என்பது இயந்திரத்தனமாக மாறிவருகிறது. அப்போதும் இப்போதும் பெண் உடலும், ஒடுக்கப்பட்ட இன மக்களின் உடலுமே 'உற்பத்தி', 'லாபம்', 'அதிகாரம்' எனும் காரணங்களுக்காக சுரண்டப்படும் ஒன்றாய் இருந்து வருகிறது.

மூளையை பயன்படுத்தி, மூடிய அறைக்குள் இருந்து கொண்டு பணி புரிபவர்களின் வருவாய் லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் இருக்க, தட்பவெட்ப சூழல்களுக்கப்பால் தன் உடலை கருவியாகக் கொண்டு உழைக்கும் ஒருவருக்கு கிடைக்கும் தின வருவாய் மிகக் குறைவானதே. உயிர் வாழ்வதற்கு தேவைப்படும் உழைப்பு என்



பதைத் தாண்டி உழைப்பதற்காகவே உடலை சுமக்கும் நிலை. இந்நிலையில் விரும்பிய உழைப்பை செலுத்தி, விரும்பிய வகையில் உடலை பராமரிக்கவும், கொண்டாடவும் நமக்கு சுதந்திரம் இருக்கிறதா என்பது கேள்வியாக இருக்கிறது.

தனி மனித விடுதலை என்பது அதிகார வர்க்கத்தின் அகராதிக்கு உட்பட்ட ஒன்றாகவும், அவர்கள் பரப்பும் கருத்துரைகளாகவும்தான் இருக்கிறது. உடல் சுதந்திரம் என்று பேசும்பொழுது, குறிப்பாக ஒரு பெண் பேசும் பொழுது அது பாலியல் சுதந்திரம் என்பதாகத்தான் புரிந்துகொள்ளப்படுகிறது. (பெண்) உடலுக்கு உடலுறவு ஒன்றே இன்பம் தரக்கூடியது எனும் திணிக்கப்பட்ட ஆணாதிக்கச் சிந்தனையின் விளைவே இது.

அதிகார வர்க்கமானது உடலை இரண்டு முரண்களுக்குள் வைத்து கட்டுப்படுத்துகிறது. ஒன்று உழைப்பைச் சுரண்டுவதற்கான உடல் பற்றிய இழிவான சிந்தனைகள். இது எல்லோருக்குமானது. மற்றொன்று இழிவென்று சொல்லப்பட்டதையே இன்பம் என்று சுதந்திரத்தின் பெயரால் வியாபாரமாக்கப்பட்ட சுதந்திரம். இது குறிப்பிட்ட சிலருக்கானது. இந்த முரண்களிலிருந்து எழும் தாழ்வு மனப்பான்மை, போட்டி மனப்பன்மை உடலோடு உடலை மோதவிடுகிறது. உணவு உண்ண, மலம் கழிக்க, உடலுறவு கொள்ள உடலுழைப்பை செலுத்தியே ஆகவேண்டும். எத்தனை அதிநவீன இயந்திரங்களை கண்டுபிடித்தாலும் இம்மூன்று செயலுக்காக மனிதர் உழைத்தே ஆகவேண்டும். நிலைமை பொதுவாயிருக்க அரசும் மதமும் மனித உடல்களை பாலினம், வர்க்கம், சாதி, மதம், இனம் எனும் அடிப்படையில் பிளவுபடுத்துவது எந்த வகையில் நியாயமானது? எந்த உடலை எவர் ஆள்வது, எவர் சுரண்டுவது என்பதற்கான திட்டங்களை அது வடிவமைக்கிறது.


உடல் உழைப்பு மற்றும் உழைப்புச் சக்தியை கைப்பற்றி, அவ்வுடல்களை பணப்பரிமாற்றமாக மாற்றுகிறது. பரிமாற்றத்திற்கு அடிப்படையாய் ஒழுக்கவாத கருத்தாக்கங்களை மூலதனமாகக் கொண்டு முதலாளித்துவமும், மதவாதக் கோட்பாடுகளும் உடலை, புலன்களை அடக்கி ஆள்கின்றன. அவ்வகையில் புலன்களின் இயல்பான உணர்ச்சிகள்கூட மறுத்தலிக்கப்பட்டு, சுய அனுபவத்தை தாண்டிய ஒரு அறிவு நிலைக்குள் வைத்து கண்காணிக்கப்படுகிறது. கண்காணிக்கப்படும் உணர்ச்சிகளில் முதன்மையாக இருப்பது காதல் மற்றும் காமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



எங்கும் தடையாக முன் வந்து நிற்பது மனம் தான். அதுவும் நம்பிக்கைகள் எனும் பெயரில் பகுத்தறிவோடு எந்தவிதமான உறவுமற்ற அடைசலாக்கப்பட்ட எண்ணங்கள்தான். சம்பிரதாயங்கள், சகுனங்கள், நாள்-கோள்-நட்சத்திரங்கள், சடங்குகள் போன்ற நீளவாகும் பட்டியலில் உள்ளவைகள்தான் மனத்திலிருந்து கொண்டு குழப்பம் விளைவிக்கின்றன. யதார்த்தமான சிந்தனையாற்றல் மற்றும் நடைமுறைச் சாத்தியமான முயற்சி போன்றவை மனத்தை இயக்கக்கூடியன.

முன்பகுதிகளில் பல இடங்களிலும் பகிர்ந்து கொண்டதுபோல யதார்த்தம் என்பது பல வேளைகளில் தீண்டத்தகாதது போன்றதொரு பிரமையை காலங்காலமாக இடித்துத் திணித்து வைத்துக்கொண்டுள்ள கோட்பாடுகள் மற்றும் சம்பிரதாயங்கள் ஏற்படுத்தத் தயங்குவதில்லை. ஏனெனில் அனேகமாக யதார்த்தம் என்பது கோட்பாடுகளையும் பகுத்தறிவோடு உறவுகளற்ற சம்பிரதாயங்களையும் கேள்விக்குட்படுத்துகிறது. அவற்றினை பொருத்தம் (காலப் பொருத்தம் மற்றும் நடைமுறை) கருதி விலகிச் சிந்திக்கவும் ஒதுக்கிவைக்கவும் காரணமாகிறது.

இந்த விலக்கல் மற்றும் ஒதுக்கல் சிந்தனை மற்றும் செயல்முனைப்பு என்பன காலங்காலமாக ஒரே தடத்தில் உழலும் ஒரு தொகுதியினரை எரிச்சலடையவும் அச்சமடையவும் வைத்துக் கொண்டிருக்கிறது என்பது யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதை குழப்பியடிக்கிறது. யதார்த்தமானது தன்முனைப்புடன் பரவலடைவது. கோட்பாடு மற்றும் பொருத்தமற்ற சம்பிரதாயங்களைக் காவித்திரிவோருக்கு உடன்பாடாக ஒரு போதுமே இல்லை என்பதுதான் உண்மை.

அவர்களது வயிற்றுப்பிழைப்புக்கான மூலாதாரமே கோட்பாடுகளும் அவற்றோடு வலிந்து பிணைக்கப்பட்ட சம்பிரதாயங்களுமே ஆகும். வயிற்றுப் பிழைப்பை இழக்க யார்தான் விரும்புவார்கள்? அதுவும் பிறரை ஏமாற்றிச் சுரண்டி சொகுசாக வாழ்ந்து பழகிப்போனவர்கள் உழைத்து உண்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வர்? எனவே இந்த ஏமாற்றுத் தொகுதியானது கண்மூடிப் பின்பற்ற பழக்கப் படுத்தி வைத்திருக்கும் தொகுதி ஊடாக யதார்த்த சிந்தனை மற்றும் செயல் முனைப்புள்ளோருக்கு தொந்தரவு கொடுத்து தீண்டத்தகாதவர்களாக பிரகடனப்படுத்த முனைகிறது.

பல விடயங்களையும் எண்ணித் தெளிய முடிகிற பலர் தயங்கி நிற்பது இங்கேதான். சமூகம் என்கிற ஒரு கூட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டு விடுவோம் என்கிற தயக்கம் அல்லது அச்சம் காரணமாக தம்மை தமக்குள்ளேயே முடக்கிக் கொண்டு விடுகின்றனர். தமது தெளிவை பிறரோடு பகிர்வதைத் தவிர்த்து விடுகின்றனர். அதாவது யதார்த்தத்தை உணர்ந்த தோடு நின்றுவிடுகின்றனர். பிறருக்கு உணர்த்த முற்படுவதில்லை. அவர்களோடு அவர்களது அறிதல் புரிதல் எல்லாம் முடங்கிப்போகிறது.

இங்கே எவ்வளவு தெரியும் என்பதல்ல பிரச்சினை. எவ்வளவு செய்கிறோம் என்பதே எண்ணப்படல்வேண்டும். அதனைச் செய்கிறோமா? ஆக மொத்தம் எமது மனம் துணிவைப் பெறத் தவறிவிடுகிறது என்பது கவனிக்கப்படவேண்டியதாகிறது. துணிவு என்பதுகூட மனத்தினது ஒரு வெளிப்பாடுதான். இங்கு குறிப்பிட விரும்புவது மனம்தான் எல்லாமே என்பதுதான்.

மனமேதான் எல்லாம் என்பது பலமுறை பகிரப்பட்ட விடயம்தான். மனம் தன்னியல்பாய் இருக்க அதனைக் கட்டுப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அடைசலாக்கப்பட்ட குப்பை கூழங்களை அகற்றுவது மட்டுமல்ல அந்த இடத்தில் எந்தவிதமான இறுக்கங்களுமற்ற நெகிழ்வுத்தன்மையுள்ள மனம் உருவாக்கப்பட்டுச் சீராகப் பராமரிக்கப்படல் அவசியமாகிறது.

சூழலுக்கேற்றபடி யதார்த்தமான பிரயோகிக்கப்படக்கூடிய ஒரு மனதை கட்டமைப்பது எமது முதன்மையான பணியாகிறது. மனம் கட்டமைக்கப்படக் கூடியதொன்றா? அதனை எவ்வாறு கட்டியமைப்பது? எவற்றை அல்லது எதனைக்கொண்டு கட்டியமைப்பது? அதற்காக யார் யாரது உதவிகளைப் பெறுவது? எனது மனதைக் கட்டமைப்பதில் எனது பங்கு பணி என்ன? எவ்வளவு? பிறரது பங்கு பணி என்ன? எவ்வளவு? எப்போதாயினும் சிந்தித்துள்ளோமா?

சிந்தனை என்பதனை விரிதிசைப்படுத்துதல் அவசியமானது. சிந்தனை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும். மனம் இடந்தருமா? சிந்திப்போம்.

# உணவுக்காக உயிரைவிடும் கடல் யானைகள்!



கடல் யானைகளில் (ELEPHANT SEALS) ஆண்களின் எடை மிக அதிகமாக இருக்கும். அதிகமான உணவுக்காக குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே வேட்டையாடுவதால், ஆண் கடல் யானைகள் அதிக அளவில் உயிரிழப்பைச் சந்திக்கின்றன.

கடலில் வாழ்ந்தாலும் கடல் யானைகள் பாலூட்டிகள். காற்றை மூக்கால் உறிஞ்சி நுரையீரல் மூலம் சுவாசிக்கும். கடலுக்கு அடியில் டைவ் செய்யும்போது மனிதர்களைப் போல 'தம்' கட்டி மூச்சை இறுக்கிப் பிடித்து, சுமார் 1,550 மீற்றர் ஆழத்துக்குச் சென்று வேட்டையாடும்.

வட கடல் யானைகள், தென் கடல் யானைகள் என இரு வகைகள் உள்ளன. அமெரிக்காவின் வட பசிபிக் கடற்கரையை ஒட்டி வட கடல் யானைகள் வாழ்கின்றன. அண்டார்க்டிகா கண்டத்தைச் சுற்றி தென் கடல் யானைகள் வாழ்கின்றன. உடல் முழுவதும் கொழுப்பு நிறைந் திருக்கும் கடல் யானையை 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அதிகமாக வேட்டையாடியதால், இவற்றின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.

வட கடல் யானைகளில் ஆண் சுமார் 1,500 - 2,300 கிலோ எடை இருக்கும். பெண் 400- 900 கிலோ எடை இருக்கும். ஆண் கடல் யானைகள் சுமார் 5 மீற்றர் நீளமும் பெண் சுமார் 3.6 மீற்றர் நீளமும் வளரும்.

கலிபோர்னியாவில் உள்ள அனோ நியூவோ ஸ்டேட் பார்க் உயிரியல் பூங்காவில் ஆய்வு நடத்தப்பட்டது. சாரா கியென்லே தலைமையில் 39 ஆண் கடல் யானைகளிடமும் 178 பெண் கடல் யானைகளிடமும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2006 முதல் 2015ஆம் ஆண்டு வரை நடந்த ஆய்வில் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆண் கடல் யானைகள் வேட்டையாடும் இடங்களில் பெண் கடல் யானைகள் வருவதில்லை என்பது ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. பொதுவாக ஆண் கடல் யானைகள் கடற்கரை, கரையை ஒட்டிய கடற்பகுதிகளில் மட்டுமே இரை தேடி நீந்தின.

பெண் கடல் யானைகள் உணவு தேடி நீண்ட தொலைவு கடலுக்குள் சென்றன. சில பெண் கடல் யானைகள் கடற்கரையிலிருந்து ஆயிரம் கிலோ மீற்றர் வரைகூட இரை தேடிச் சென்றன. சுமார் 500 முதல் 600 மீற்றர் ஆழம் வரை சென்று கணவாய் மீன்களைப் பிடித்து உண்டன.

தாராளமாக உணவு கிடைப்பதால் ஆண் கடல் யானைகளின் எடை மிக அதிகமாக இருந்தது. நீண்ட தொலைவு பயணித்து உணவை உட்கொள்ளும் பெண் கடல் யானைகளைவிட, சுமார் ஆறு மடங்கு கூடுதல் எடையை ஆண் கடல் யானைகள் பெறுகின்றன.

கூடுதல் உடல் எடையுடன் இருக்கும் ஆண் கடல் யானைகள், பெண் கடல் யானைகளைவிட விரைவில் இறந்து போகின்றன. இரை தேடிக் கடலில் நீந்தும்போது ஆண் கடல் யானை இறக்க 0.45 சதவீத வாய்ப்பும் பெண் கடல் யானை இறக்க 0.12 சதவீத வாய்ப்பும் இருப்பதாக ஆய்வில் தெரிந்தது. அதாவது பெண் கடல் யானைகளைவிட ஆண் கடல் யானைகள் ஆறு மடங்கு அதிகமாக இறப்பை எதிர்கொள்கின்றன.

ஏன் ஆண் கடல் யானைகள் அதிக அளவில் இறக்கின்றன? முழுமையான காரணத்தை இன்னும் கண்டறியவில்லை என்கிறார் கியென்லே. எனினும் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கூடுதல் மீன் வளம் இருப்பதால், வெள்ளைச் சுறாக்கள் குவிகின்றன. கடல் யானைகளைக்கூட இந்த வெள்ளைச் சுறாக்கள் வேட்டையாடக்கூடியவை. எனவே, சுறாக்களின் பிடியில் அகப்பட்டு ஆண் கடல் யானைகள் அதிக அளவில் இறப்பதாக கியென்லே நினைக்கிறார். அதாவது அதிக உணவு கிடைக்கும் என்பதற்காக ஆபத்தான பகுதிக்குச் செல்லும் ஆண் கடல் யானைகள் உயிரிழந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டறியாத கதைகள்

01




யசோ மாமி

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் சுகமாக இருக்கிறீர்களா?
நன்றாகப் படிக்கிறீர்களா?

இன்றையிலிருந்து நான் கண்ட புதினமான சில விஷயங்களை அவ்வப்போது உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகிறேன். அவைகளை கவனமாகப் படித்து வாருங்கள். வருட இறுதியில் நான் உங்களோடு பகிர்ந்து கொண்டவற்றில் அதிகப்படியாக உற்சாகத்தோடு கலந்துகொண்ட முதல் மூன்று மருமக்களுக்குப் பெறுமதியான பரிசுப் பொருட்களை தரலாம் என்று இருக்கிறேன்.

என்ன மருமக்களே எல்லோரும் தயாராக இருக்கிறீர்களா?

இன்றைக்கு உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள இருப்பது சல்லிமுட்டி என்பது பற்றியது.

சிறுவயதிலிருந்தே சிக்கனமாக இருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சிக்கனம் என்றால் எமக்குக் கிடைக்கும் வருவாயை அவசியமான தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதோடு சிறுபகுதியை அவசர தேவைகளுக்கு சேமிப்பதுமாகும்.

அவ்வாறு சேமிக்க சல்லிமுட்டி பயன்படுகிறது. சல்லிமுட்டிகள் பல வடிவங்களில், பல மூலப்பொருள்களால் செய்யப்பட்டு விற்பனைக்கு வருகிறது. அவை களிமண்ணாலும், பிளாஸ்டிக்குகளாலும், தகரங்களாலும் பல்லவேறு கவர்ச்சியான வடிவங்களில் ஆக்கப்படுகின்றன. சில வகைகள் திறக்க முடியாதனவாகவும், சில திறக்கக்கூடிய சிறு மூடிகளைக்கொண்டனவாகவும் உள்ளன. அவை பல வடிவங்களிலும் பல அளவுகளிலும் உள்ளன.

நான் வாழும் அவுஸ்திரேலியாவில் பல வகையான சல்லிமுட்டிகள் விற்பனைக்கு உள்ளன. வங்கிகளும் சிறுவர்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக அவுஸ்திரேலியாவில் பல வடிவங்களிலான உண்டியல்களை இலவசமாக கணக்கு வைத்திருக்கும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு வழங்குகிறார்கள்.

உங்களிடமும் அவ்வாறான உண்டியல்கள் உள்ளனவா? இன்று நீங்கள் பார்ப்பதற்காக சில உண்டியல் வடிவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.



உண்டியல்களைப் பார்த்தீர்களா? உங்களுக்கும் இப்படியாக வேறுபட்ட வடிவங்களில் உண்டியல்கள் தயாரிக்கலாம் என்று தோன்றுகிறதா? அப்படி என்றால் எப்படி உண்டியல் தயாரிக்கலாம் என்று படம் கீறி அனுப்புகிறீர்களா? அப் படங்களுடன் நீங்கள் படிக்கும் பாடசாலையின் பெயர், படிக்கும் வகுப்பு, பெயர் விபரங்களோடு அதனை shemman.redsoil@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது +94 76 398 3858 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

கற்பனை வடிவங்களில் மிகச்சிறந்த வடிவத்தை கீறி அனுப்புபவரில் அதிஷ்டசாலி ஒருவரின் சித்திரமும் பெயர்விபரங்கள் பத்திரிகையில் பிரசுரமாவதோடு அவருக்கு யசோமாமியிடம் இருந்து ஒரு பரிசுப்பொருளும் அனுப்பி வைக்கப்படும்.

என்ன மருமக்களே எல்லோரும் கற்பனை செய்து படம் கீற தயாரா?

சிட்னிக் கரையிலிருந்து யசோ மாமி.

# முஸ்லிம்களுக்கு இப்போது கசக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம்!

**சத்தியநாதன்**

1979ஆம் ஆண்டில் இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டமே 1989 ஆண்டில் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. சிங்கள இளைஞர், யுவதிகளின் (1971இல் முதலாவது கிளர்ச்சி) கழுத்தை நெரித்தது.

இருந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தின்போது தமிழர்களை ஒடுக்குவதற்கே இது அதிகம் பயன்பட்டது. புலிகளை ஒடுக்குவதற்கு ஆயுதங்களைவிட அதிக சக்தி வாய்ந்த சட்ட ஏற்பாடாக இலங்கை ஆட்சியாளர்களுக்கு உதவியது.

இந்தச் சட்டத்தால் தமிழர்கள் ஒடுக்கப்பட்டபோது முஸ்லிம்கள் அது குறித்து வாய் மூடி அமைதியாக இருந்தார்கள். அதற்கு புலிகளை ஒடுக்க இந்தச் சட்டம் அரச இயந்திரத்துக்கு அவசியம் என்று அவர்கள் கருதியது ஒரு காரணம்.

முஸ்லிம்களின் பெருந்தலைவர் என வர்ணிக்கப்படும் எம்.எச்.எம். அஷ்ரப் கிழக்கில் புலிகளை ஒடுக்குவதற்காக இலங்கையின் சிறப்பு அதிரடிப் படையின் ஒரு அலகாக ஜிகாத் என்ற முஸ்லிம் படையைச் சேர்ப்பதற்கு எடுத்த முயற்சியை அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன நிராகரித்தார். அது முதல் புலிகள் அழிக்கப்பட்டால் மாத்திரமே முஸ்லிம்கள் தலையெடுக்க முடியும் என்பதே முஸ்லிம் அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது. புலிகளின் அழிவுக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பேருதவியாக இருந்ததால் முஸ்லிம்கள் அதை எதிர்க்கவில்லை.

2019ஆம் ஆண்டு சித்திரை 21இல் நடந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வரை முஸ்லிம்களுக்கு வாய்ப்பானதொரு சட்ட ஏற்பாடாகவே இது இருந்தது. ஆனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் எல்லாம் தலைகீழாகியது.

**முஸ்லிம்களுக்கு நெருக்கடி ...!**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் இளைஞர்களில் 60க்கு மேற்பட்டவர்கள் இந்தத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகினர். தடுத்து வைக்கப்பட்டனர். முஸ்லிம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் சிறைக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. இதன் பின்னரே முஸ்லிம் தலைவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் கூடாது என்கின்றனர். அதை அவர்களின் கருத்துகளில் இருந்து அறிய முடிகிறது. இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூறும்போது, "பயங்கரவாதத் தடைச் சட்டம் சிறுபான்மையினருக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது" என்றும் ரிசாத் பதியுதீன் கூறும்போது, "அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்யும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுங்கள்" எனவும், எம்.எம்.சுஹைர் கூறும்போது, " பயங்கரவாதத் தடைச்சடடத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் மிக மோசமான சரத்துகள் இல்லாமல் செய்யப்படவில்லை" என்றும் கூறுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது அவர்கள் தமிழர்களையும் தம்மோடு இணைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தால் சிறுபான்மையினரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்று கூச்சல் போடுகின்றனர். சிறுபான்மை இனத்தவர், அப்பாவித் தமிழ் இளைஞர்கள் என்ற வார்த்தைகளை மிகவும் தந்திரமாகக் கையாள்கின்றனர்.

இதற்கான காரணம் தமிழர்களை முன்னிறுத்தி இதுவிடயத்தில் ஒரு தீர்வு ஏற்பட்டால் அது முஸ்லிம் சமூகத்துக்கும் மிக வாய்ப்பாக அமையும் என்கிற அவர்களின் எதிர்பார்ப்புத்தான்.

நழுவல்போக்கும் தந்திர புத்தியும்

நாட்டில் முக்கிய பிரச்சினைகள் ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் அதற்கு எதிராகக் குரல் கொடுக்காமல் துஆ

**சிறுபான்மை இனத்தவர், அப்பாவித் தமிழ் இளை ஞர்கள் என்ற வார்த்தைகளை மிகவும் தந்திரமாகக் கையாள்கின்றனர்**

கேட்பது (அல்லாவிடம் வேண்டுவது) அல்லது உம்றா தொழுகை என்ற பெயரில் சவூதிக்குச் செல்வது எனக் கட்சி பேதமில்லாமல் அனைத்து முஸ்லிம் தலைவர்களும் நழுவி விடுவர். அதே நழுவல் போக்குத்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான தமது குரலில் தமிழர்களையும் உள்ளீர்த்துக்கொள்வது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் முஸ்லிம்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து மட்டுமே அவர்கள் பேச முடியும். ஆனால் அதை அவர்கள் செய்ய மாட்டார்கள். ஏனெனில் அது ஆட்சியாளர்கள் மத்தியில் பாதகமான விளைவுகளை உருவாக்கிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் - சிங்கள உறவு பெருமளவில் பாதிப்படைந்திருக்கிறது. முஸ்களின் வணிகத்தின் பெரும்பகுதி சிங்கள மக்களைச் சார்ந்து இருப்பதால் எவ்வாறெனினும் சிங்கள மக்களுடன் இணைந்து பயணிப்பதையே அவர்கள் விரும்புகின்றனர். தற்போது பயங்கரவாதத் தடைச்சட்ட விடயத்திலும் தமிழ்த் தலைவர்களை முன்னே தள்ளி விட்டுத் தம்மை நல்ல பிள்ளைகளாக அரசுக்குக் காட்டிக்கொள்ளும் அதேநேரம் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவதன் மூலம் தாம் நன்மையடைவதையும் விரும்புகின்றனர்.

இந்த நிலையில் தமிழர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்கும் தமது பயணத்தில் முஸ்லிம்களையும் இணைத்துக்கொள்ளும் அதே நேரத்தில் முஸ்லிம் தலைவர்கள் இந்த விடயத்தில் முஸ்லிம் மக்களின் தனித்துவக் குரலாகவும் உறுதியாக ஒலிப்பதை உறுதி செய்யவது அவசியம். அதுவே இரு சமூகங்களுக்கும் நன்மையளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகடையாக உருட்டப்படும் உக்ரைன்



இந்துஜா

மேற்கு ஐரோப்பிய நாடுகளை யொட்டியுள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கப் போகிறது என்பதே கடந்த வாரம் முழுவதும் மேற்குலக நாடுகளில் முக்கிய பரபரப்புச் செய்தி. இந்தா... அதிகாலை 3 மணிக்கு ரஷ்யப் படைகள் எல்லையைத் தாண்டி உள்ளே நுழையப் போகின்றன என்றெல்லாம் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. எல்லாச் செய்திகளுக்கும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உளவு நிறுவனங்களின் இரகசியத் தகவல்களே ஆதாரங்களாக இருந்தன.

கடைசியில் அப்படியெதுவும் நடக்கவில்லை. ரஷ்யப் படைகள் உக்ரைன் எல்லைக்குள் ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை. இருப்பினும் அங்கு இன்னும் பதற்றம் நீடித்தபடியே இருக்கின்றது.

உக்ரைன் எல்லைப் பகுதியில் ரஷ்யா ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட படைவீரர்களை நிறுத்தி அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளித்து வருவதே பதற்றத்துக்குக் காரணம். உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா எச்சரிக்கைகள் விடுத்தும் ரஷ்யா தனது பயிற்சி நடவடிக்கைகளை முழுவதுமாக இன்னும் விலக்கிக்கொள்ளவில்லை.

மாசி 16 அன்று உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்க உள்ளதாக வெளிவந்த செய்திகளையடுத்து, பல நாடுகளும் உக்ரைனில் உள்ள தங்கள் குடிமக்களைப் பாதுகாப்பாக வெளியேறுமாறு அறிவுறுத்தின. உக்ரைனில் உள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகளும் வெளியேறத் தொடங்கியது இந்த அச்சத்துக்கு மேலும் வலுசேர்த்தது. எனினும், ரஷ்யா ராஜதந்திர ரீதியில் இந்தப் பிரச்சினையை நீட்டிப் பதற்கான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

எல்லையின் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து மேற்குலக நாடுகளுடன் பேச்சு நடத்தவும் எல்லையிலிருந்து படைப்பிரிவுகளை விலக்கிக்கொள்ளவும் தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்திருப்பதிலிருந்து அவருக்குப் போரை நோக்கி நகரும் உத்தேசமில்லை என்கிற கருத்தும் நிலவுகின்றது. ஜெர்மன் தலைமை அமைச்சர் ஓலாஃப் ஸ்கால்ஸுடன் இணைந்து புடின் பங்கேற்ற பத்திரிகையாளர் சந்திப்பு பதற்றத்தைத் தணிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில் ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழவை, கிழக்கு உக்ரைனை சுதந்திரம் பெற்ற தனிநாடாக அங்கீகரிக்க வேண்டுமாறு அதிபர் புடினைக் கேட்டுக் கொண்டிருப்பது பதற்றத்தைத் தணிப்பதாகவும் இல்லை.

ஒருவேளை ரஷ்யா தாக்குதலில் ஈடுபட்டால், உக்ரைனுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவளிக்கக்கூடும். ஏற்கெனவே போலந்து நாட்டின் எல்லையில் நேட்டோ படைகள் களமிறக்கப்பட்டுள்ளன. உக்ரைனிலிருந்து வெளியேறும் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு போலந்து தயாராகி வருகிறது. அதற்கான உதவிகளை அமெரிக்கா செய்துவருகிறது. இந்நிலையில், பேச்சு மூலமாக போர்ப் பதற்றத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் உலகம் முழுவதும் எழுந்துள்ளன.

குறிப்பாக, மேற்குலக நாடுகள் உக்ரைன் மீதான போரைத் தவிர்க்குமாறு ரஷ்யாவுக்கு மேலதிக அழுத்தத்தை உருவாக்கவேண்டும் என்று கோரப்படுகிறது. ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே தோல்வியடைந்த பழைய பேச்சு மீண்டும் தொடங்கலாம் என்றும் பேசப்படுகிறது. ஆனால், உக்ரைன் தனக்குக் கட்டுப்பட்ட நாடாக இருக்க வேண்டும், நேட்டோவின் அங்கமாக மாறிவிடக் கூடாது என்று ரஷ்யா விரும்புகிறது. சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த பின்பும், உக்ரைன் மீதான அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே ரஷ்யா விரும்புகிறது. தனக்கு ஆதரவான ஆட்சியாளர்களை அமர்த்துவது, அந்த முயற்சிகள் தோல்வியடையும்போது எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றுவது, பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளிப்பது என்று தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது ரஷ்யா.

மொத்தத்தில், ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் உக்ரைன் ஒரு பகடைக்காயாக உருட்டப்படுகிறது. இருவேறுபட்ட அதிகார மையங்களின் எல்லைப் பகுதிகளுக்கு நடுவே அமைந்திருப்பதாலேயே இச்சிக்கலை உக்ரைன் எதிர்கொண்டுள்ளது. ஏற்கெனவே பொருளாதார நிலையில் பின்னடைவைச் சந்தித்துள்ள உக்ரைன் போர்ப் பதற்றச் சூழலால் மேலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். அங்கு நிலவும் பதற்ற நிலை விரைவில் தணிய வேண்டும்.

மேற்குலகிற்கும் சீனாவிற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டுள்ள இலங்கையிலும் இத்தகை யதொரு நிலை எதிர்காலத்தில் வராது என்று சொல்வதற்கில்லை. அதைத்தான் தமிழ் அரசியல் தலைவர்கள் பூகோள அரசியல் என்று சொல்லிக் கொண்டு இலவு காத்த கிளிகளாகக் காத்திருக்கிறார்கள்.

உக்ரைனில் போர் வருமா? அது தெரியாது! ■

# காதலியுங்கள், காதலியுங்கள் காதலித்துக்கொண்டே இருங்கள்!


எம்.கனிஸ்டன்

காதல்... அதுதான் எவ்வளவு அழகான வார்த்தை... எத்துணை எத்துணை பரவசம்.. ஒருவரின் மீதான ஆழமான தூய அன்பைச் சொல்லும் உணர்ச்சிமிக்க சொல்... 'காதல்' என்ற வார்த்தையை உச்சரிக்கும்போதே நம்மில் ஒரு அதீத மென்னுணர்வு ஏற்பட்டுவிட்டுத்தான் செல்கிறது.

வாழ்வில் ஒவ்வொரு நபருக்கும் காதல் என்ற உணர்வு ஏதாவது ஒரு தருணத்தில் ஏற்பட்டிருக்கும், ஏற்பட்டிருக்கவேண்டும்.. காதலை நாம் உணருகிற தருணமும் மற்றவரால் உணரப்படும் தருணமும் மிக அற்புதமானது. அன்பின் மிகுதியால் இரு மனங்கள் இணையும் அழகான அலாதியான உணர்ச்சி.

அன்பு, நட்புக்கு அடுத்த கட்டம் என்றுகூட காதலைச் சொல்லலாம். அன்பையும் நட்பையும் தாண்டிய ஒரு நிதானமற்ற பந்தம். மனதால் இணையும் அந்த பந்தம் வாழ்க்கை முழுவதும் நீடிக்கிறது.

சிலரது காதல் இணைந்தே கடைசி வரை தொடர்கிறது. பலரது காதல் தனித்தனியே வெவ்வேறு வழிகளில்



தொடர்ந்துகொண்டு இருக்கிறது. ஆனால், மனதில் ஏற்பட்ட உண்மையான காதல் வாழ்வின் இறுதிவரை தொடரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துமில்லை.

மனித உணர்ச்சிகளில் அலாதியான அந்த உணர்வினை ஒவ்வொருவரும் பெற வேண்டியது ஒரு பேறும்கூட.

ஆனால், பலருக்கும் இந்த காதல் மனதுக்குள் புதைந்துவிடுகிறது, புதைத்துக்கொள்கின்றனர். தான் விரும்புபவரை எதிர்கொள்ள முடியாத பயத்தினால் தயக்கத்தினால் அந்த காதல் செத்துவிடுகிறது. சொல்லப்போனால், அந்த காதலை நீங்களே கொலை செய்துவிடுகிறீர்கள்.

உங்கள் காதல் வெற்றி பெறுகிறது என்பது இரண்டாவது. முதலில் உங்கள் காதலை தைரியமாகத் தெரிவியுங்கள். காதலை சொல்லிவிட்ட பின்பு ஏற்படும் எதையோ சாதித்த ஒரு மகிழ்ச்சியை நீங்கள் உணர வேண்டுமெனில் உங்கள் காதலை தைரியமாக வெளிப்படுத்துங்கள்.

தங்களை யாரும் காதலிக்க மாட்டார்களா என்ற ஏக்கத்தில்தான் இன்று பலரும் இருக்கின்றனர். ஆம், இந்த உலகத்தில் அன்புக்கும் காதலுக்கும் பஞ்சம் அதிகமாகவே இருக்கிறது.

காதலைப் பெறும் நபர், அதை ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, நீங்கள் அவர்களை காதலிப்பதை நினைத்து உள்ளுக்குள் அதீத ஆனந்தம் அடைவார்கள் என்பது சொல்லப்படாத உண்மை. நவீனத்தின் ஒரு விளைவாக, இந்த பரபரப்பான உலகத்தில் அன்பு செலுத்தவும் பகிரவும் குறைவான ஆள்களே இருக்கின்றனர். உங்கள் காதலின் மூலம் அந்த வெற்றிடத்தை நிரப்புங்கள்.

காதலைச் சொல்லத் தயங்குபவர்கள் காதலிக்க தகுதியற்றவர்களே. நீங்கள் இறந்த பின்னும் உங்கள் காதல் இந்த உலகில் வாழ வேண்டுமெனில் உங்களுடைய காதல் பதியப்படவேண்டும்.

இந்த உலகத்தில் ஒருவரால் தீவிரமாகக் காதலிக்கப்படுகிறோம் என்பதை நினைத்து மகிழும் ஒரு தருணத்தை நீங்கள் விரும்பும் நபருக்கு அளியுங்கள்.

நாளை நிச்சயமில்லாத இந்த ஒரு மனிதப் பிறவியில் ஒருவர் மீதுள்ள அன்பை ஏன் மறைத்து ஒளித்து வைக்க வேண்டும்?

அடுத்ததாக, 'காதல்' என்பது ஒரு இளம் ஆணுக்கும் இளம் பெண்ணுக்கும் இடையேதான் வர வேண்டும் என்று இருக்கிறதா? அது மட்டும்தான் காதலா? அப்படி வந்தால் அவர்கள் மட்டும்தான் இந்த தினத்தைக் கொண்டாட வேண்டுமா? என்றால் இல்லை.

இன்று 40, 50களில் வரும் காதலைக்கூட மிக அழகாக திரைப்படங்களில் காண்பிக்கிறார்கள். அதுவும் உண்மையே. கணவன்/ மனைவியை இழந்தவர்களுக்கு வாழ்க்கையில் இறுதிவரை ஒரு துணை தேவைப்படும் நிலையில், தன் வயதொத்த எதிர்பாலினத்தவரிடம் காதல் ஏற்படுகிறது. ஆனால், வயதை ஒரு காரணம் காட்டி பலரும் இதை வெளிப்படுத்துவதில்லை.

உண்மையில் காதல் என்பதும் அன்பின் மிகுதிதான். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் இந்த நாளை தாராளமாகக் கொண்டாடலாம்.

வாழ்க்கைத்துணை என்று இல்லாமல் ஒரு சில நண்பர்களை, ஒரு சில எதிர் பாலினத்தவர்களைக்கூட வயது வித்தியாசமின்றி பிடித்திருக்கலாம். காரணமே இன்றி சிலரைப் பிடிக்கலாம். (இங்கு எல்லோரும் மனிதர்கள்தான் என்பதை ஒருமுறை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்) அப்படி உங்கள் மனதுக்குப் பிடித்தவர்களிடம் உங்கள் காதலை (அன்பை) தெரியப்படுத்துங்கள்.

'நான் உன்னை காதலிக்கிறேன்' , 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று யாரும், யாரிடம் வேண்டுமானாலும் சொல்லலாம். அது தோழன் - தோழியாக இருக்கலாம், அக்கா - தம்பியாக இருக்கலாம், அண்ணன் - தங்கையாக இருக்கலாம், ஏன் 60 வயது கிழவனும் - கிழவியுமாகக்கூட இருக்கலாம்.

'லவ் யூ' என்ற வார்த்தையை எதிர்காலத்தில் திருமண வாழ்க்கையில் இணையப்போகும் ஒரு இளம் பெண்ணும் ஆணும்தான் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று கட்டமைக்கப்பட்ட நடைமுறை இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக உடைபட்டுக்கொண்டிருக்கிறது. அந்த கட்டமைப்பு முழுவதுமாக உடைக்கப்படவேண்டும். 'லவ் யூ' என்ற வார்த்தையை சாதாரணமாக அணுகவும், அடுத்த தலை முறைகளில் அனைத்துத் தரப்பினரும் இதை எந்த வெட்கமும் இன்றி உச்சரிக்கும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

"லவ் யூ ஓல்" ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா ஹவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781